உ

சிவமயம்.

தேவிசகாயம்.

ஸ்தோத்ர கதம்ப வ்யாக்யாநம்

[பாகம் - க.]

அபிராமிதேவி யருள்பெற்று விளங்கிய

அபிராமிபட்டர் அருளிச்செய்த

அபிராமியந்தாதி

மூலமும்,

காஞ்சீபுரநிவாஸி

ஸ்ரீமத் இராமாநந்தயோகி அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

அக்கம்மாள்பேட்டை

இராமாநுஜசெட்டியார் குமாரர்

அ. மஹாதேவ செட்டியாரால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

[முதற்பதிப்பு.]

1912.

விலை அணா 5.

Copyright] [Registered.

அபிராமிபட்டர் வரலாறு.

அபிராமிபட்டர் சோழநாட்டுத் திருக்கடவூரிலிருந்த புரோகிதர். திருக்கடவூர் மாயூரத்தருகிலுள்ள தொருஸ்தலம். பட்டர் என்பது பட்டம், தென்னாட்டில் ஆதிசைவராகிய குருக்கண்மார் பட்டரெனப்படுதல்போல வந்த பெயரன்று. இவர் ஸ்மார்த்தரே. இவருடைய வம்சத்தினர் தஞ்சை ஜில்லாவில் இன்றுமுள்ளார்.

தேவியை வழிபடுவோர் வாமாசார முடைவயரென்றும் தக்ஷிணாசார முடையவரென்றும் இருவகையினராவர். இவர் அவைதிகமென்று கருதப்படுவதும் மதுபானம் மாமிச பக்ஷண முதலிய தொழில்கட்கு இடந்தருவதும் ஆகிய வாமாசாரத்தை யுடையவரென்று சொல்கின்றனர்.

அபிராமி திருக்கடவூரிற் கோயில்கொண்டிருக்கும் அம்மை பெயர். அபிராமித்தாயிடம் அந்தரங்க அன்புள்ளவராய்ப் புறத்தில் யார்க்கும் அதனைப் புலப்படுத்தாது பஞ்சமகாபாதகர்போல் நடித்துவருகையில் இவரிடம் வெறுப்புக் கொண்ட வேதியர் அரசனிடம் குறை கூறினர். அக்காலத்துத் தஞ்சையை ஆண்டுவந்த சரபோஜி மஹாராஜன் திருக்கடவூர் வந்தபொழுது இவரை அழைத்துவருகவெனக் கட்டளையிட, சேவகர் இவரை அரசனிடங் கொண்டுபோய் விட்டனர். அரசன் பட்டரைநோக்கி, "நீர் கையில் வைத்திருப்பது என்ன?" எனப் பட்டர் "அது பஞ்சாங்கம்" என்றனர். "ஆயின் நாளை என்ன திதி?" என்று அரசன் வினவ, பட்டர் அமாவாசையைப் பௌர்ணமி என்றனர். உடனே அரசன், "இது மதிகெட்ட தினம்" என்று சிலேடைப் பொருள்படச் சொ

ல்லி, பட்டரை நோக்கி "நாளை முழுமதியைக் காட்டக் கூடுமோ?" என, அவரும் அதற்கு உடன்பட்டு, அரசன் கட்டளைப்படி சிறையிலிருந்து தேவியை அபிராமியந்தாதி பாடி உபாசனை செய்து அவள் தரிசனந்தரத் தமது குறை கூறி இரந்து அம்மையாரிடம் குண்டலம் பெற்று, அவள் கட்டளைப்படி அதனை ஆகாயத்தில் விட்டெறிந்து மறுநாட் சாயங்காலம் அரசனும் மற்றவரும் அஞ்சும்படி ஆகாயத்தில் பூர்ண சந்திரனைக் காட்டினர்.

அபிராமியந்தாதி சொன்னோக்கமும் பொருணோக்கமுமுடைய சிறந்த தோத்திர நூல். தேவியினுடைய பிரசாதத்தைப் பெறவிரும்புவோ ரெல்லாம் பாராயணஞ் செய்யும் பெருமை வாய்ந்தது. தமிழ்நாட்டிலே இளையார் முதியாரனைவரும் இதனையோதி யின்புறுகின்றனர். நூற்பாக்கள் செம்பாகமாகவே யமைந்துள்ளனவாயினும் ஓதுவார் பக்திக்கேற்ப விரியும் பொருளமைவுடையனவாகலின், அவற்றிற்கு உரை யொன்றிருத்தல் நலமே. நெடுநாண் முன்னர் (பவ௵ பங்குனி௴) திருநெல்வேலி முருகேசமுதலியாராற் செய்யப்பட்ட உரையொன்று அச்சியற்றப்பெற்று உலவி வந்தது. அஃது இப்பொழுது அகப்படுதல் அருமையாயினமைபற்றி, காஞ்சீபுரநிவாஸி ஸ்ரீமத் இராமாநந்தயோகி அவர்களால் ௸ உரையில் விளக்கவேண்டியவற்றை விளக்கியும், விசேஷக் குறிப்புக்களைச் சேர்க்கவேண்டிய இடத்தில் சேர்த்தும் எழுதுவித்து அபிராமியந்தாதி விருத்தியுரையென வெளிப்படுத்தலாயினேம்.

அ. ம. செ.

உ

சிவமயம்.

தேவிசகாயம்.

அபிராமியந்தாதி

மூலமும் உரையும்.

காப்பு.

**தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
ஊரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.**

(பதவுரை.) கொன்றை-கொன்றைமலர், அமர் - பொருந்திய, தாரையும்-மாலையினையும், சண்பகமாலையும்-சண்பகப்பூமாலையினையும், சாத்தும்-அணியும், தில்லையூரர்தம் - புலியூரையுடைய (நடேசனது), பாகத்து-(வாம) பாகத்திலிராநின்ற, உமைமைந்தனே-உமாதேவி புத்திரனே, காரமர்மேனி - கறுத்த திருமேனியையுடைய, கணபதியே-விநாயகமூர்த்தியே, உலகு எழும் பெற்ற - எழுலகங்களையும் கருவுருதீன்ற, சீரபிராமி - சிறப்புற்ற அபிராமி (மேற்பாடிய), அந்தாதி-அந்தாதியானது, எப்போதும் - என்றும், என் சிந்தையுள் - என்மனதில், நிற்க-நிலைபெற, கட்டுரை-உறுதிபெறக் கிருபைசெய், எ-று. ஏ-அசை.

(பொழிப்புரை.) கொன்றைமலர் பொருந்திய மாலையினையும் சண்பகப்பூமாலையினையும் அணியும் புலியூரையுடைய (நடேசனது)

(வாம) பாகத்தி லிராநின்ற உமாதேவி புத்திரனே! கறுத்த திருமேனியையுடைய விநாயகமூர்த்தியே! ஏழுலகங்களையும் கருவுறாதீன்ற சிறப்புப்பெற்ற அபிராமி (மேற்பாடிய) அந்தாதியானது என்றும் என்மனதில் நிலைபெற உறுதிபெறக் கிருபைசெய் என்றவாறு.

(கருத்துரை.) உமையின் புத்திரனாகிய கறுத்த திருமேனியையுடைய விநாயகமூர்த்தியே, யான் பாடு மிவ்வந்தாதி முற்றுப்பெறக் கிருபைசெய்வாயாக என்பதாம்.

(விசேஷவுரை.) இச்செய்யுளில் தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளுங் கூறப்பட்டதனால் இது தற்சிறப்புப்பாயிரம் எனப்படும். என்னை, "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளும், எய்தவுரைப்பது தற்சிறப்பாகும்" என்பதோத்தாகலின். தெய்வவணக்கமாவது விநாயக வணக்கம். செயப்படுபொருளாவது அபிராமியந்தாதி. கொன்றை-ஆகுபெயர். சண்பகமும் அது. பாகத்துமைமைந்தனே என மேல் வருதலால் தில்லையூரர் என்றது சிவபெருமானைக் குறித்தது. அபிராமம்-அழகு, அதனையுடையவள் அபிராமி. இவள், சத்தமாதர்களிலொருத்தி. சத்தமாதராவார்: அபிராமி, மாயேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி என்பவர். இவர்க்கு முறையே வாகநம்: அன்னம், இடபம், மயில், கருடன், சிங்கம், யானை, பேய் என்பன. முறையே ஆயுதம்: மறை, பிநாகம், வேல், சக்கரம், கலப்பை, வச்சிரம், சூலம் என்பன. அந்தாதியென்பது நின்றசெய்யுளி னிறுதியும் வருஞ்செய்யுளின் முதலும் ஒன்றிவரத்தொடுக்கப்படுவதாகிய ஓர்பிரபந்தம். என்னை, "அந்தமு மாதியு மொன்றத் தொடுப்ப தந்தாதி" என்பதோத்தாகலின்.

நூல்.

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே.

(ப-ரை.) உதிக்கின்ற - உதயமாகின்ற, செங்கதிர் - சூரியனை, உச்சி - சிரசில், திலகம் - சுட்டியாகவணிந்த, உணர்வுடையோர்-ஞானிகள், மதிக்கின்ற - (ஒப்பற்ற) பொருளாவெண்ணுகின்ற, மாணிக்கம்-(ஜீவ) ரத்நமென்றும், மாதுளம்போது-மாதுளம்பூ நிறத்தையுடைய, மலர் - தாமரைமலரிலுறைகின்ற, கமலை - இலக்குமி, துதிக்கின்ற - தோத்திரிக்கின்ற, மின் கொடி - மின்னற்கொடியென்றும், மென்கடி - மிருதுவாகிய வாசனையுடைய, குங்குமம்- செஞ்சாந்தின், தோயம் என்ன - தடாகமென்றும், விதிக்கின்ற - யாவருஞ் சொல்லுகின்ற, மேனி - திருமேனியையுடைய, அபிராமி - அபிராமியம்மை, என்றன் - என்றனுடைய, விழுத்துணை - சிறந்த துணையாவள், என - று. ஏ - அசை.

(பொ-ரை.) உதயமாகின்ற சூரியனைச் சிரசில் சுட்டியாகவணிந்த ஞானிகள் (ஒப்பற்ற) பொருளாவெண்ணுகின்ற (ஜீவ)ரத்நமென்றும், மாதுளம்பூ நிறத்தையுடைய தாமரைமலரி லுறைகின்ற இலக்குமி தோத்திரிக்கின்ற மின்னற்கொடியென்றும், மிருதுவாகிய வாசனையுடைய செஞ்சாந்தின் தடாகமென்றும் யாவருஞ் சொல்லுகின்ற திருமேனியையுடைய அபிராமியம்மை என்றனுடைய சிறந்த துணையாவள் என்றவாறு.

(க-ரை.) மிக்க அழகினையுடைய அபிராமி யெனக்குச் சிறந்த துணையாவ ளென்பதாம்.

(வி-ரை.) உச்சித்திலகம் - ஓர்வகை மலருமாம். உதிக்கின்ற செங்கதிர் முதலியவற்றைத் தேவியின் திருமேனி நிறத்துக்குவமையாக்கி யுரைப்பினு மமையும். விழுத்துணை-பண்புத்தொகைநிலைத்தொடர். என்றன் என்பதில் தன் சாரியை. துணை-பெயர்ப்பயனிலை; இது ஆவள் என்னும் வினைகொடுத்து முடிக்கப்பட்டது. உதிக்கின்ற செங்கதிர் - பாலசூரியன், இது மங்கலச்சொல். (க)

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.

(ப-ரை.) துணையும் - சகாயமாகியும், தொழும்-யாவரும் வணங்கும், தெய்வமும் - தெய்வமாகியும், பெற்ற தாயும்-ஈன்ற தாயாகியும், சுருதிகளின் - நான்கு வேதங்களின், பணையும் - சாகைகளாகியும், கொழுந்தும் - தளிர்களாகியும், பதிகொண்ட வேரும் - உறுதியான வேராகியும், பனி - குளிர்ச்சிபொருந்திய, மலர்ப்பூங்கணையும் -' புஷ்பபாணங்களையும், கருப்புச் சிலையும் - கரும்பு வில்லையும், கையிலணையும் - கையிற்கொண்ட (மன்மதனாகியும்), மெல் - மிருதுவாகிய, பாசாங்குசமும்-பாசாங்குசத்தைக்கொண்ட (விநாயகராகியு மிருப்பவள்), திரிபுரசுந்தரியாவது - திரிபுரசுந்தரியேயாவதை, அறிந்தனம் - அறிந்துகொண்டோம், எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) சகாயமாகியும், யாவரும் வணங்கும் தெய்வமாகியும், ஈன்ற தாயாகியும், நான்கு வேதங்களின் சாகைகளாகியும், தளிர்களாகியும், உறுதியான வேராகியும், குளிர்ச்சிபொருந்திய புஷ்பபாணங்களையும் கரும்புவில்லையும் கையிற்கொண்ட (மன்மதனாகியும்), மிருதுவாகிய பாசாங்குசத்தைக்கொண்ட (விநாயகராகியு மிருப்பவள்) திரிபுரசுந்தரியேயாவதை அறிந்துகொண்டோம் என்றவாறு.

(க-ரை.) துணையும், தெய்வமும், தாயும், வேதமும், மன்மதனும், விநாயகனுமாகி யிருப்பவள் திரிபுரசுந்தரியே யென்பதாம்.

(வி-ரை.) காமிகளை மயக்கலால் மன்மதனென்றும், ஞானிகளுக்கு அறிவுகொளுத்தலால் விநாயகரென்றுங் கூறியதாம். பதிகொண்ட என்பதற்குப் பதிக்கப்பட்ட என்றுரைப்பினு மமையும். திரிபுரசுந்தரி - மூன்றுலகத்திலுமுள்ள மாதர்களிற் சிறந்த அழகுள்ளவள்.

அறிந்தனம் - உளப்பாட்டுத்தன்மைப்பன்மை யிறந்தகாலவினைமுற்று. பாசாங்குசம் என்பதனை பாசம் அங்குசம் எனப் பிரித்துக்கொள்க. பாசம் - கயிறு, அங்குசம் - தோட்டி. (உ)

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமையெண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.

(பு-ரை.) திருவே - செல்வம் நிறைந்தவளே, எவரும்-யாவரும், அறியா - அறியாத, மறையை - வேதத்தின் பொருளாகிய உன் திருவடியை, அறிந்தேன் - அறிந்தேன்; அறிந்துகொண்டு - தெரிந்துகொண்டு, உனது திருவடிக்கே - உனது திருவடியையே, செறிந்தேன் - அடைந்தேன்; நின் - உன்னுடைய, அன்பர் - அடியார்களின், பெருமை - மகிமையை, எண்ணாத - ஆராயாத, கருமநெஞ்சால் - அஞ்ஞான மனதால், மறிந்து - மறிபட்டு, விழும்-(பாபிக) ளழுந்துகின்ற, நரகுக்கு - நரகத்திற்கு, உறவாய - உறவாகிய, மனிதரை - மனிதர்களுக்கு, வெருவி - பயந்து, பிறிந்தேன் - அவரைவிட்டு நீங்கினேன், எ - று.

(பொ-ரை.) செல்வநிறைந்தவளே! யாவரும் அறியாத வேதத்தின் பொருளாகிய உன் திருவடியை அறிந்தேன்; தெரிந்துகொண்டு உனது திருவடியையே அடைந்தேன்; உன்னுடைய அடியார்களின் மகிமையை ஆராயாத அஞ்ஞானமனதால் மறிபட்டுப்(பாபிக)ளழுந்துகின்ற நரகத்திற்கு உறவாகிய மனிதர்களுக்குப் பயந்து அவரைவிட்டு நீங்கினேன் என்றவாறு.

(க-ரை.) அம்மே! வேதப்பொருளாகிய நின் திருவடியை அறியாது உன்னடியார் கூட்டத்தைப் பிரிந்து உனை நினையாது நரகுக்குற வானவரை நீங்கினே னென்பதாம்.

(வி-ரை.) திருவடிக்கு, மனிதரை என்பன உருபுமயக்கம். எவரு மறியா மறையை அறிந்தேன், அறிந்துகொண்டு உனது திருவடிக்கே செறிந்தேன், நரகுக்குறவாய மனிதரைப் பிறிந்தேன் என மூன்று முடிபாக முடித்துக்கொள்க. திருவே என்றது விளி. (௩)

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

(ப-ரை.) மனிதரும் – மக்களும், தேவரும் – தேவர்களும், மாயா முனிவரும் - அழியாத முனீச்சுவரரும், வந்து - (உன் சந்நிதியில்) வந்து, சென்னி - தங்கள் சிரங்களை, குனிதரும் - தாழ்த்தி வணங்கு கின்ற, சேவடி – செய்ய திருவடிகளையும், கோமளமே - அழகையு முடையவளே, வார் சடைமேல் - நீண்ட சடையின்மேல், கொன்றை- கொன்றைமாலையையும், பனிதரும் - குளிர்ச்சியையுடைய, திங்களும்- பிறையையும், பாம்பும் - சர்ப்பத்தையும், பகீரதியும் - ஆகாயகங்கை யையும், படைத்த - தரித்த, புனிதரும் நீயும் - சிவபெருமானுநீயும், புந்தி - (என்) மனதில், எந்நாளும் பொருந்துக - எக்காலத்தும் பொரு ந்துக, எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) மக்களும் தேவர்களும் அழியாத முனீச்சுவரரும் (உன் சந்நிதியில்) வந்து தங்கள் சிரங்களைத் தாழ்த்தி வணங்குகின்ற செய்யதிருவடிகளையும் அழகையுமுடையவளே! நீண்டசடையின்மேல் கொன்றைமாலையையும் குளிர்ச்சிய்யுடைய பிறையையும் சர்ப்பத்தை யும் ஆகாயகங்கையையும் தரித்த சிவபெருமானு நீயும் (என்) மனதி லெந்நாளும் பொருந்துக என்றவாறு.

(க-ரை.) யாவரும் வணங்குகின்ற அன்னையே! நீயும், சிவபெரு மானும் என் மனதிலெந்நாளும் பொருந்துகவென்பதாம்.

(வி-ரை.) குனிதரு-ஒருசொல், இதற்குப் பகுதி குனிதா கோமளம்-ம்ருதுஸ்வபாவம்எனினுமாம். இதனையுடையவளாதலால் கோமளமே யென்பதற்கு ம்ருதுஸ்வபாவத்தை யுடையவளே யென்றுரைத்துக்கொள்க. இப்பொருளமைந்த தமிழ்ச்சொல் மெல்லியலே யென்பது. பகிரதனுல் கொண்டுவரப்பட்டமையால் ஆகாயகங்கையை 'பாகிரதி' என்றார். (௬)

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேல்
திருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே.

(ப-ரை.) பொருந்திய - (அழகு) பொருந்திய, முப்புரை - திரிபுரசுந்தரியாகியும், செப்பு - (அரதனச்) செப்பென்று, உரைசெய்யும்- (உவமை) சொல்லுகின்ற, புணர் முலையால் - நெருங்கிய குசங்களால், வருந்திய - வருந்துகின்ற, வஞ்சி - கொடிபோன்ற, மருங்குல் - இடையினையுடைய, மனோன்மணி-மனோன்மணியாகியும், வார்சடையோன்- நீண்டசடையையுடைய சிவபெருமான், அருந்திய - உண்ட, நஞ்சு அமுதாக்கிய - விடத்தை அமுதாக்கிய, அம்பிகை - பார்வதியாகியும், அம்புயமேல் - தாமரைமலரில், திருந்திய - திருத்தமாய்நின்ற, சுந்தரி - (அழகிய) இலக்குமியாகியும், அந்தரி - அந்தரியாகியு மிருப்பவளுடைய, பாதம் - திருவடியானது, என் சென்னியது - என் சிரசில் (மகுடமாயிருப்பது), எ-று. ஏ-அசை.

(போ-ரை.) (அழகு) பொருந்திய திரிபுரசுந்தரியாகியும், (அரதனச்)செப்பென்று (உவமை) சொல்லுகின்ற நெருங்கிய குசங்களால் வருந்துகின்ற கொடிபோன்ற இடையினையுடைய மனோன்மணியாகியும், நீண்ட சடையையுடைய சிவபெருமான் உண்ட விடத்தை அமுதாக்கிய பார்வதியாகியும், தாமரைமலரில் திருத்தமாய்நின்ற (அழகிய) இலக்குமியாகியும், அந்தரியாகியு மிருப்பவளுடைய திருவடியானது என் சிரசில் (மகுடமாயிருப்பது) என்றவாறு.

(க-ரை.) 'அபிராமியின் சிறந்த திருவடிகள் என் சிரசில் பொருந்தியிருப்பனவென்பதாம்.

(வி-ரை.) உரைசெய்யும்-ஒருசொல். இதற்குப்பகுதி உரைசெய். புணர்தல் - நெருங்குதல். வார் நீராதலால் வார்சடையோன் என்பதற்குக் கங்கைச்சடையன் எனினுமாம். நஞ்சுண்டவர் இறப்பதும் அமுதமுண்டவர் வாழ்வதும் இயல்பாயிருக்க, சிவபிரான் நஞ்சுண்டும் இறவாமைக்குக் காரணம் தேவியின் மங்கலநாணும் குழையுமாதலால், 'வார்சடையோன், அருந்திய நஞ்சமுதாக்கிய வம்பிகை' என்றார். "வேதரஞ்சகன் மால்புரந்தரன் வேகசண்ட குபேரனே, டாதியெண்டிசை பாலர்பொன்றவு மாதியந்தமி லாததோர், நாதர்பொன்றில ரோதுன்மங்கல நாணுறுந்திற மாதலால், நீதழைந்தது யோகமம்பிகை நீலியென்பது பாவமே", "பிரமனிந்திரன் முற்பிற தேவர்களுளெலாம், நரைபெருந்திரையற்ற நல்லாரமுதே கொலாம், ஒருவர் தங்கிலர் நின்சிவனூண் விடம்வாழ்வன்மா, திருபெருங் குழையிட்ட பொன்னேலையின் வாசியே" என்னு மிரண்டு செய்யுளும் மேற்கூறப்பட்ட செய்திக்குதாரணமாதல் காண்க. (ரு)

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே.

(ப-ரை.) சிந்துரவண்ணம்-சிவந்தநிறத்தையுடைய, பெண்ணே - பெண்கொடியே, உன் - உன்னுடைய, பொன் - அழகிய, திருவடித் தாமரை - திருப்பாதாம்புயம், சென்னியது-என் சிரசிலுள்ளது; உன் திருமந்திரம் - உனது திருமந்திரமாகிய தேவிபஞ்சாக்ஷரம், சிந்தையுள் - என்மனதில், மன்னியது - நிலைத்திருப்பது; முன்னிய - உன் திருவடியைச் சிந்திக்கின்ற, நின் அடியாருடன் - உனதடியாருடன், கூடி - சேர்ந்து, முறைமுறையே - வரிசைக்கிரமமாக, உன்றன்-உன்

னுடைய, பரமாகமம் - மேலான ஆகமங்களிற் சொல்லிய, பத்ததி - விதிகளை, என்றும் - எப்போதும், பன்னியது - யான் பேசிக்கொண்டிருப்பது, எ-று.

(பொ-ரை.) சிவந்த நிறத்தையுடைய பெண்கொடியே! உன்னுடைய அழகிய திருப்பாதாம்புயம் என் சிரசிலுள்ளது; உனது திருமந்திரமாகிய தேவிபஞ்சாக்ஷரம் என் மனதில் நிலைத்திருப்பது; உன்றிருவடியைச் சிந்திக்கின்ற உனதடியாருடன் சேர்ந்து வரிசைக்கிரமமாக உன்னுடைய மேலான ஆகமங்களிற்சொல்லிய விதிகளை எப்போதும் யான் பேசிக்கொண்டிருப்பது என்றவாறு.

(சூ-ரை.) சிவந்த திருமேனியையுடையவளே! நான் வணங்குவது உன் திருவடியை, சிந்திப்பது உன் திருநாமத்தை, பேசுவது உன்னாகம மார்க்கத்தையே யென்பதாம்.

(வி-ரை.) சித்துரவண்ணம்-சிந்தூரத்தின் நிறம் (சிவந்த நிறம்): உன்றன் பரமாகமம் என்றது ஸாக்தேயாகமத்தை. பன்னுதல் - பலகாற் பேசுதல். (சு)

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே.

(ப-ரை.) சிந்தூரானனம் - சிந்தூரதிலகமணிந்த முகத்தையும், சுந்தரியே - அழகையுமுடையவளே, கமலாலயனும் - தாமரைமலரிலிருக்கும் பிரமனும், மதியுறு - பிறையையணிந்த, வேணி-சடையையுடைய, மகிழ்நனும் - உன்கணவனான சிவபெருமானும், மாலும்-திருமாலும், வணங்கி - சிரங்களைத்தாழ்த்தி, என்றும் - எப்போதும், துதியுறும் - தோத்திரம் செய்யும், சேவடியாய் - செய்ய திருவடியையுடையவளே, ததியுறு மத்தின்-தயிர்கடையு மத்தைப்போல, சுழலும்-சுற்று

கின்ற, என் ஆவி - என்னுயிரானது, தளர்விலது - தளராமலிருப்ப தாக, ஓர் - ஒப்பற்ற, கதியுறு வண்ணம் - நான் கதியை யடையும்படி (ஒருபாயத்தை), கருது - எண்ணிக் கிருபைசெய், எ-று.

(பொ-ரை.) சிந்துரதிலகமணிந்த முகத்தையும் அழகையு முடையவளே! தாமரைமலரிலிருக்கும் பிரமனும் பிறையையணிந்த சடையை யுடைய உன் கணவனான சிவபெருமானும் திருமாலும் சிரங்களைத் தாழ்த்தி எப்போதும் போற்றிசெய்யும் செய்யதிருவடியை யுடையவளே! தயிர்கடையு மத்தைப்போல சுற்றுகின்ற என்னுயிரானது தளராமலிருப்பதாக ஒப்பற்ற நான் கதியையடையும்படி (ஓர் உபாயத்தை) எண்ணிக் கிருபைசெய் என்றவாறு.

(க-ரை.) மூவரும் வணங்காநின்ற திருவடியை யுடையவளே, கலங்குகின்ற மனதையுடைய யான் கதியடையும் வண்ணங் கிருபை செய்வாயாக என்பதாம்.

(வி-ரை.) கண்டாய்-முன்னிலை யசைச்சொல். கமலாலயம் என்பதை கமலம் ஆலயம் எனப்பிரித்து கமலமாகிய இடம் என்றுரைத்துக்கொள்க. (எ)

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண் மகிடன் றலைமேல்
அந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே.

(ப-ரை.) எந்தை - என்றந்தையாகிய (சிவபெருமானுடைய), துணைவி - மனைவி, என் பாசம் - என் பந்தமாகிய, தொடரை எல்லாம் - சங்கிலிகளையெல்லாம், வந்து அரி - வந்து சேதிக்கின்ற, சிந்துர வண்ணத்தினாள்-சிவந்த திருமேனியையுடையவள், மகிடன் தலைமேல் - மகிடாசுரன் தலையில் (நடிக்கின்ற), சுந்தரி - சுந்தரியென்றும், அந்தரி-அந்தரியென்றும், நீலி-நீலியென்றும், அழியாத கன்னிகை -

அழியாத கன்னிகையென்னுந் திருநாமமுடையவள், ஆரணத்தோன்-பிரமனுடைய, கம் தரி - தலையைத்தரித்த, கைத்தலத்தாள் - கையையுடையவளாகிய அபிராமியின், மலர்த்தாள் - பாதாம்புயம், என் கருத்தன - என் மனதின்கண்ணிருக்கின்றன, எ-று. ஏ - அசை.

(பொ-ரை.) என்றந்தையாகிய (சிவபெருமானுடைய) மனைவி என்பந்தமாகிய சங்கிலிகளையெல்லாம் வந்து சேதிக்கின்ற சிவந்த திருமேனியையுடையவள், மகிடாசுரன் தலையில் (நடிக்கின்ற) சுந்தரியென்றும் அந்தரியென்றும் நீலியென்றும் அழியாத கன்னிகையென்னுந் திருநாமமுடையவள், பிரமனுடைய தலையைத் தரித்த கையையுடையவளாகிய அபிராமியின் பாதாம்புயம் என் மனதின்கண் ணிருக்கின்றன என்றவாறு.

(சு-ரை.) பல திருநாமங்களையுடைய அபிராமியின் திருவடிகள் என் மனத்தின்கண்ணுள்ளன என்பதாம்.

(வி-ரை.) அரித்தல் - சேதித்தல். தொடர்-விலங்கு. மகிடாசுரன் என்பதை மகிட அசுரன் எனப்பிரித்து எருமைமுகத்தையுடைய வோரசுரன் என்றுரைத்துக்கொள்க. கம் என்றது பிரமகபாலத்தை.()

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பின்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே.

(ப-ரை.) எந்தை - என்றந்தையாகிய (பரமசிவனும்); தன் - அச்சிவபெருமானுடைய, கருத்தன - சிந்தையிலுள்ளனவாகியும், கண்ணன - கண்ணுக்கினியனவாகியும், வண்ணம் - அழகிய, கனகவெற்பின் - பொன்மலையினும், பெருத்தன - பெருத்தனவாகியும், பால் - பாலை, அழும் பிள்ளைக்கு-(அழுத) சம்பந்தப்பிள்ளைக்கு, நல்கின-கொடுத்தனவாகியு மிராநின்ற, திரு தனபாரமும்-சிறந்த தனபாரத்தையும், ஆரமும் - முத்தாரத்தையும், செங்கை - சிவந்தகையில், சிலையும்-(கரு

ப்பு) வில்லையும்,அம்பும்-(புஷ்ப) பாணத்தையும்,முருத்தன - மயிலிறகி னடிக்குருத்தையொத்த, மூரலும் - தந்தபந்தியினையுமுடைய, பேர ருள்கூர் - பெருங்கருணைநிறைந்த, அம்மே நீயும் - அன்னையே நீயும், வந்தென்முன்-என்முன்னே வந்து, நிற்க-காட்சி கொடுப்பீராக, எ-று.

(பொ-ரை.) என்றந்தையாகிய (பரமசிவனும்)அச்சிவபெருமா னுடைய சிந்தையி லுள்ளனவாகியும் கண்ணுக் கினியனவாகியும் அழகிய பொன்மலையினும் பெருத்தனவாகியும் பாலை (அமுத) சம்பந் தப்பிள்ளைக்குக் கொடுத்தனவாகியு மிராநின்ற சிறந்த தனபாரத்தை யும் முத்தாரத்தையும் சிவந்தகையில் (கருப்பு) வில்லையும் (புஷ்ப) பாணத்தையும் மயிலிறகினடிக்குருத்தையொத்த தந்தபந்தியினையுமு டைய பெருங்கருணை நிறைந்த அன்னையே நீயும் என் முன்னேவந்து காட்சி கொடுப்பீராக என்பதாம். 1

(க-ரை.) உன் சிறந்த அழகுடனே எனக்குக் காட்சி பாலிப்பா யாகவென்பதாம்.

(வி-ரை.) திருஞானசம்பந்தப்பிள்ளையார் "இலைபடர்ந்த பொய் கை யிடத்தழுதல் கண்டு" பால்சுரந்த முலையாதலால் 'பாலழும் பிள் ளைக்கு நல்கின பேரருள்கூர் திருத்தன பாரமும்' என்றார். முருந்து முருத்தெதன வலித்துநின்றது. வெற்பின் என்பதில் இன் என்னும் ஐந்தனுருபு உறழ்ச்சிப்பொருட்டு. (க)

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

(ப-ரை.) எழுதா மறையின் - எழுதாத வேதங்களில், ஒன்றும் - பொருந்திய, அரும்பொருளே - அருமையான பொருளே, அருளே - கிருபாசுவரூபியே, உமையே - உமாதேவியே, இமயத்து-பருவதராஜ

னிடத்தில், அன்றும் - முன்னாளிலும், பிறந்தவளே - தவப்பெண்ணாய்ப் பிறந்தவளே, அழியா - கெடாத, முத்தியானந்தமே - மோக்ஷானந்தங் கொடுப்பவளே, நின்றும் - நின்றுகொண்டும், இருந்தும்-இருந்துகொண்டும்; கிடந்தும் - படுத்துக்கொண்டும், நடந்தும் - நடந்துகொண்டு மிருக்குங் காலங்களிலும், உன்னை - உன்றனையே, நினைப்பது - நினைப்பதாம், என்றும் - எக்காலத்திலும், வணங்குவது - பணிவது, உன் மலர்த்தாள் - உன்பாதாம்புயமேயன்றி (வேறில்லை), எ-று.

(பொ-ரை.) எழுதாத வேதங்களில் பொருந்திய அருமையான பொருளே! கிருபாசுவரூபியே! உமாதேவியே! பருவதராஜனிடத்தில் முன்னாளிலும் தவப்பெண்ணாய்ப் பிறந்தவளே! கெடாத மோக்ஷானந்தங் கொடுப்பவளே! நின்றுகொண்டும் இருந்துகொண்டும் படுத்துக்கொண்டும் நடந்துகொண்டு மிருக்குங் காலங்களிலும் உன்றனையே நினைப்பதாம், எக்காலத்திலும் பணிவது உன்பாதாம்புயமேயன்றி வேறில்லை என்பது.

(க-ரை.) அம்மையே! நான் எப்போதும் உன்னைச் சிந்திக்கின்ற அடியேன், எனக்குக் கிருபை பாலிப்பாயாக வென்பதாம்.

(வி-ரை.) வேதம் எழுதிப் படிப்பதல்லாமையால் 'எழுதாமறை' என்றார். அன்றும் என்பதின் உம்மை எதிரதுதழிஇநின்றது. (க0)

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே.

(ப-ரை.) ஆனந்தமாய் - ஆனந்தமாகியும், என் அறிவாய் - என்னறிவாகியும், நிறைந்த - நிறைவுற்ற, அமுதமுமாய் அமுதமாகியுமிரா நின்ற, வான் அந்தமான - விண்ணந்தமாயுள்ள பஞ்சபூதமாகிய, வடிவுடையாள் - வடிவையுடையவளுடைய, மறை நான்கினுக்கும்-நான்கு

வேதங்களுக்கும், அந்தமான - முடிவாகிய, சரணாரவிந்தம்-பாதாம்புய மானது, கானம் - மயானத்தை, தமக்காடரங்கம் - தமது நடன சபையாகக்கொண்ட, தவளநிறம்-படிகநிறைத்தையுடைய, எம்பிரான்- பரமசிவனுடைய, முடி-சிரத்தினுக்கு, கண்ணியது - மாலையாகவிருக் கின்றது, எ-று. ஏ, தான் - அசைகள்.

(பொ-ரை.) ஆனந்தமாகியும் என்னறிவாகியும் நிறைவுற்ற அமுத மாகியுமிராநின்ற விண்ணந்தமாயுள்ள பஞ்சபூதமாகிய வடிவையுடை யவளுடைய நான்கு வேதங்களுக்கும் முடிவாகிய பாதாம்புயமானது மயானத்தைத் தமது நடனசபையாகக்கொண்ட படிகநிறத்தையுடைய பரமசிவனுடைய சிரத்தினுக்கு மாலையாகவிருக்கின்றது என்றவாறு.

(க-ரை.) அம்மா! உன் திருவடி சிவபெருமான் முடியிலணியு மாலையென்பதாம்.

(வி-ரை.) தவளநிறக்கானம்-வெண்ணிறத்தையுடைய காடு, அதா வது சுடுகாடு. சுட்டசாம்பரால் வெளுத்திருத்தல்பற்றி அதனை 'தவள நிறக்கானம்' என்றார். பிரான் - உபகாரகுணமுள்ளவன். (கக)

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே.

(ப-ரை.) புவி ஏழையும் - சப்தலோகங்களையும், பூத்தவளே - படைத்தவளே, என் அம்மே - என்றாயே, உன் புகழ் - உன்னுடைய கீர்த்தியை, கண்ணியது-நான் எப்போதுஞ் சிந்திப்பது; உன் நாமம் - உன்றிருப்பெயரை, கற்பது - எப்போதும் உச்சரிப்பது; உன் இருபா தாம்புயத்தில் - உன் இருபாததாமரையில், கசிந்து - மனங்கனிந்து, பத்தி பண்ணியது - பக்திசெய்வது; உன்னை நயந்தோர் - உன்றனை விரும்பிப் பூசிப்போராது, அவையத்து - கூட்டத்தில், பகலிரவா - இர

வும்பகலும், நண்ணியது - கூடியிருப்பது ; (இப்படிப்பட்ட மேலான செயல் கிடைப்பதற்கு) நான் - யான், முன் செய்த - முற்பிறப்பிற்செய்த, புண்ணியம் - நல்வினை, ஏது - என்னவோ (அறிகிலேன்),எ-று.

(பொ-ரை.) சப்தலோகங்களையும் படைத்தவளே ! என்றாயே ! உன்னுடைய கீர்த்தியை நான் எப்போதுஞ் சிந்திப்பது; உன் திருப்பெயரை எப்போதும் உச்சரிப்பது;உன் இருபாததாமரையில் மனங்கனிந்து பக்திசெய்வது; உன்றனை விரும்பிப் பூசிப்போரது கூட்டத்தில் இரவும் பகலும் கூடியிருப்பது; (இப்படிப்பட்ட மேலானசெயல் கிடைப்பதற்கு) யான் முற்பிறப்பிற் செய்தநல்வினை என்னவோ (அறிகிலேன்) என்றவாறு.

(க-ரை.) அன்னையே! உன்னைச் சிந்திக்கவும் வணங்கவும் உன் அடியார் கூட்டத்தில் சேரவும் யான் முன்செய்த தவப்பயன் யாதோ அறிந்திலே னென்பதாம்.

(வி-ரை.) கண்ணுதல் - நினைத்தல். நயத்தல் - அன்புசெய்தல். நயந்தோர்-அன்பர். (கஉ)

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக்கண்ட னுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

(ப-ரை.) புவனம் பதினான்கையும் - பதினான்குலகங்களையும், பூத்தவளே - படைத்தவளே, பூத்தவண்ணம் - படைத்தமுறைப்படி, காத்தவளே - ரக்ஷித்தவளே, பின் - பின்பு, கரந்தவளே - மறைத்தவளே, என்றும் - எப்போதும், மூவா - கெடாத, கறைக்கண்டனுக்கு - நீலகண்டனுக்கு, மூத்தவளே - பெரியவளே, முகுந்தற்கு - திருமாலுக்கு, இளையவளே - தங்கையே, மா - பெரிய, தவளே - தவத்தாலடையத்தக்கவளே, உன்னையன்றி - உன்னையல்லாமல், மற்றோர்-

வேறொரு, தெய்வம் - தெய்வத்தை, வந்திப்பதே - வணங்குவதோ (அல்ல), எ-று.

(பொழிப்புரை.) பதினான்குலகங்களையும் படைத்தவளே, படைத்த முறைப்படி ரக்ஷித்தவளே, பின்பு மறைத்தவளே, எப்போதும் கெடாத நீலகண்டனுக்குப் பெரியவளே, திருமாலுக்குத் தங்கையே, பெரியதவத்தா லடையத்தக்கவளே, உன்னையல்லாமல் வேறொரு தெய்வத்தை வணங்குவதோ (அல்ல) என்றவாறு.

(கருத்துரை.) முத்தொழிலுஞ் செய்கின்ற அன்னையே! உன்னை யன்றி வேறுதெய்வத்தை வணங்கே னென்பதாம்.

(விசேஷவுரை.) கரத்தல் மறைத்தல், அதாவது சங்கரித்தல். கறை நஞ் சாதலால் கறைக்கண்டன் என்பதற்கு விஷகண்டன் எனினுமிழுக் காது. கறைக்கண்டனுக்கு மூத்தவள் என்றது பராசத்தியை. தவள்- தவத்தையுடையவள் என்றலுமாம். வணங்குவதேயென்னு மேகாரம் எதிர்மறை. (௧௩)

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே.

(பதவுரை.) எம்பிராட்டி-எம்பிரானுடைய தலைவி, வானவர்-தேவர் களும், தானவரானவர் - அசுரர்களும், உன்னை - உன்றனை, வந்திப்ப வர்-(ஆகமப்படி) தொழுபவர், நல் திசைமுகர் நல்லபிரமரும், நாரணர் - நாரணரும், சிந்திப்பவர் - தியானிப்பவர், அழியா - கெடாத, பரமானந் தர் - பிரம்மானந்தத்தையுடைய யோகியர்கள், சிந்தையுள்ளே - இதய மாகிய தறியில், பந்திப்பவர் - உன்னை (அன்பாகிய கயிற்றால்) கட்டு பவர், (இவர்களுக்கு உன் கருணை அரிதாயினும்) பாரில் - பூமியில், உன்னைச் சந்திப்பவர்க்கு - உன்னை (ஒருகால்) தரிசிப்பவர்க்கு, நின்

தண்ணளி-உன் தண்ணிய கருணை (கிடைத்தல்), எளிதாம் - எளிதாகும், எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) எம்பிரானுடைய தலைவி, தேவர்களும் அசுரர்களும் உன்றனை (ஆகமப்படி) தொழுபவர் நல்ல பிரமரும் நாரணரும் தியானிப்பவர் கெடாத பிர்ம்மானந்தத்தையுடைய யோகியர்கள் இதயமாகிய தறியில் உன்னை (அன்பாகிய கயிற்றால்) கட்டுபவர் (இவர்களுக்கு உன் கருணை அரிதாயினும்) பூமியில் உன்னை (ஒருகால்) தரிசிப்பவர்க்கு உன் தண்ணிய கருணை (கிடைத்தல்) எளிதாகும் என்றவாறு.

(க-ரை.) தாயே! உன்னைச் சிந்திப்பவர் வந்திப்பவர்களுக்கு உன் கிருபை யெளிதாமென்பதாம்.

(வி-ரை.) பிராட்டி - பிரான் என்பதன் பெண்பாற்பெயர். அசுரர் தநுபுத்ரராதலால் 'தானவர்' எனப்பட்டார். திசை நான்காதலால் திசைமுகர் என்றது நான்கு முகங்களையுடையவர் என்றபடி. பந்தித்தல் - கட்டுதல். (கச)

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

(ப-ரை.) பண் அளிக்கும் - இராகத்தைக் காட்டும், சொல் - சொல்லையும், பரிமளம் - மிகுவாசனையையும், யாமளை-யாமளையென்னுந் திருநாமத்தையுமுடைய, பைங்கிளியே - பசியகிளிபோன்றவளே, தண்ணளிக்கென்று - தண்ணிய உன் கிருபையைப்பெற, முன்னே - முற்பிறப்பில், பல கோடி - அநேககோடி, தவங்கள் செய்வார் - தவங்களைச் செய்பவர்கள், மண்ணளிக்கும் - பூமியையாளுகின்ற, செல்வமோ - அநித்திய வாழ்வையோ, பெறுவார் - அடைவார்கள் (அல்ல), மதி வானவர்தம் - புத்தியில்மிக்க தேவர்களுடைய, விண்ணளிக்கும் -

அமராபதியையாளுகின்ற, செல்வமும் - இந்திரசெல்வத்தையும், அழியா-அழிவில்லாத, முத்திவீடுமன்றே-மோக்ஷத்தையுமல்லவோ பெறுவர், எ-று.

(பொ-ரை.) இராகத்தைக்காட்டும் சொல்லையும் மிகுவாசனையையும் யாமளையென்னுந் திருநாமத்தையுமுடைய பசிய கிளிபோன்றவளே! தண்ணிய உன் கிருபையைப்பெற முற்பிறப்பில் அநேககோடி தவங்களைச் செய்பவர்கள் பூமியையாளுகின்ற அநித்திய வாழ்வையோ அடைவர்கள் (அல்ல), புத்தியில்மிக்க தேவர்களுடைய அமராபதியையாளுகின்ற இந்திர செல்வத்தையும் அழிவில்லாத மோக்ஷத்தையுமல்லவோ பெறுவர் என்றவாறு.

(க-ரை.) உமையே! உன்னை வணங்குவோர் அழிகின்ற அரசுரிமையா பெறுவர், இந்திரபோகமும் மோக்ஷமும் பெறுவரென்பதாம்.

(வி-ரை.) தண்ணளியை ஒரு சொல்லாகக்கொண்டு பேரருள் என்றுரைத்தலுமாம். செல்வமோவென்னு மோகாரம் எதிர்மறை. ( )

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே யொளிரு மொளிக்கிட மேயெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
அளியே னறிவள விற்கள வான ததிசயமே.

(ப-ரை.) கிளியே - கிளிபோன்றவளே, கிளைஞர் - உனதன்பராகிய அடியார், மனத்தே கிடந்து - மனதிலிருந்து, கிளர்ந்தொளிரும் - மிகவும் பிரகாசிக்கின்ற, ஒளியே - சோதிரூபமே, ஒளிரும் ஒளிக்கு - பிரகாசிக்கும் பிரகாசத்திற்கு, இடமே - இடமானவளே, எண்ணில் - ஆராயின், ஒன்றும் இல்லா - நிறைசூன்னியமாகிய, வெளியே-சிதாகாசரூபமே, வெளிமுதல் பூதங்களாகி - வானாதி பூதங்களாகி, விரிந்த - விரிந்துநின்ற, அம்மே - தாயே, அளியேன்-எளியேனுடைய, அறிவு அளவிற்கு - சிற்றறிவினளவிற்கு, அளவானது - நீ அளவுபட்டு காட்சி கொடுத்தது, அதிசயம் - (யாவருக்கும்) ஆச்சரியமாகும், எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) கிளிபோன்றவளே! உன தன்பராகிய அடியார்மனதி லிருந்து மிகவும் பிரகாசிக்கின்ற சோதிரூபமே! பிரகாசிக்கும் பிரகா சத்திற்கு இடமானவளே! ஆராயின் நிறைசூனியமாகிய சிதாகாசரூப மே! வானுதிபூதங்களாகி விரிந்துநின்ற தாயே! எளியேனுடைய சிற் றறிவினளவிற்கு நீ காட்சிகொடுத்தது (யாவருக்கும்) ஆச்சரியமாகும் என்றவாறு.

(க-ரை.) எல்லா வுருவாகியு மிருக்கும் அம்மையே! அறிவிலி யாகிய எனக்கு நீ காட்சி கொடுத்தது யாவருக்கும் ஆச்சரிய மென்ப தாம்.

(வி-ரை.) கிளி: உவமையாகுபெயர். இறைவிக்கு அன்பரே யுற வினராதலால் அவரை 'கிளைஞர்' என்றார். (கசு)

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.

(ப-ரை.) அதிசயமான - ஆச்சரியமான, வடிவுடையாள் - உரு வத்தையுடையவளே, அரவிந்தம் எல்லாம் - தாமரைமலர்கள் யாவும், துதி - துதிக்கின்ற, சயவானன - சயம்பொருந்திய முகத்தையுடைய, சுந்தரவல்லி - சுந்தரமான கொடிபோன்றவளே, துணை - தன் றுணைவ னாகிய, இரதி பதி - இரதியின் நாயகனான மன்மதனுடைய, சயமா னது - வெற்றியானது, அபசயமாக - தோல்வியடையும்படி, முன், பார்த் தவர் - முன் நெற்றிக்கண்ணால் பார்த்த சிவ்பெருமானுடைய, மதி - புத்தியை, சயமாக அன்றோ - சயிக்கவல்லவோ, வாமபாகத்தை - அவ னது இடதுபாகத்தை, வெளவியது - நீ கவர்ந்துகொண்டது, எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) ஆச்சரியமான உருவத்தையுடையவளே! தாமரை மலர்கள் யாவும் துதிக்கின்ற சயம்பொருந்திய முகத்தையுடைய சுந்தர

மான கொடிபோன்றவளே! தன்றுணைவனாகிய இரதியின் நாயகனை மன்மதனுடைய வெற்றியானது தோல்வியடையும்படி முன் நெற்றிக்கண்ணால் பார்த்த சிவபெருமானுடைய புத்தியை சயிக்கவல்லவோ இடதுபாகத்தை நீ கவர்ந்துகொண்டது என்றவாறு.

(க-ரை.) அபிராமியம்மன் பரமசிவன் வாமபாகத்தைப் பெற்றதற்குக் காரணங் கூறியதாம்.

(வி-ரை.) வடிவுடையாள் சுந்தரவல்லி என்பன அன்மைவிளிகள். சயமாக: ஒருசொல். வௌவல்-கவர்தல். தம்: சாரியை. (கஎ)

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்கும்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.

(ப-ரை.) வெவ்விய காலன் - குரூரமாகிய இயமன், என்மேல் வரும்போது - என்னைப்பிடிக்க வரும்போது, சிந்தையுள் - என்மனதில், வவ்விய - நீ கிரகித்துக்கொண்ட, பாகத்து - (வாம) பாகத்தையுடைய, இறைவரும்-உன்னாயகராகிய சிவபெருமானும், நீயும் - நீயும், மகிழ்ந்திருக்கும் - சந்தோஷித்திராநின்ற, செவ்வியும் - அழகும், உங்கள் திருமணக்கோலமும்-உங்கள் திருக்கலியாணக்கோலமும், அவ்வியம் தீர்த்து - என் பொறாமையாகிய (தீக்குணத்தை) நீக்கி, என்னை ஆண்ட - என்னையாட்கொண்ட, பொற்பாதமும் - அழகிய திருவடியும், ஆகி வந்து-ஆகிவந்து, வெளிநிற்க-என் எதிர் நிற்பீராக, எ - று. ஏ - அசை.

(பொ-ரை.) குரூரமாகிய இயமன் என்னைப் பிடிக்கவரும்போது என்மனதில் நீ கிரகித்துக்கொண்ட (வாம) பாகத்தையுடைய உன்னாயகராகிய சிவபெருமானும் நீயும் சந்தோஷித்திராநின்ற அழகும் உங்கள் திருக்கலியாணக்கோலமும் என் பொறாமையாகிய (தீக்குணத்

றை) நீக்கி என்னையாட்கொண்ட அழகிய திருவடியும் ஆகிவந்து எதிர் நிற்பீராக என்றவாறு.

(க-ரை.) இயமன் என்மேல் வருங்காலத்தில் நீ தரிசனம் தந் தருளவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) வெவ்விய காலன் என்றது அவனது அருளின்மை யை விளக்கிநின்றது; "ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மை யால்" என்றார் பிறரும். கோலம் - வேடம், அழகெனினுமாம். பொற் பாதம் - பொன்போலுந் திருவடி யென்றலுமொன்று. (கஅ)

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சும்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே.

(ப-ரை.) ஒளிநின்ற-பிரகாசிக்கின்ற, கோணங்கள் ஒன்பதும் - நவகோணங்களிலும், மேவி - பொருந்தி, உறைபவளே-வாழ்பவளே, வெளிநின்ற-(முப்பாழுங் கடந்துநின்ற) வெளியிலிருக்கும், நின் திரு மேனியை - உன் திருமேனியை, பார்த்து - தரிசித்தலால், என் விழி யும் - என் கண்ணிலும், நெஞ்சும் - மனதிலுமுண்டாகிய, களி - ஆன ந்தமாகிய, வெள்ளம் - பிரவாகத்தினுக்கு, கரை கண்டதில்லை - அளவு கண்டதில்லை, கருத்தினுள் - என் மனதில், தெளிநின்ற - தெளிவு பெற்ற, ஞானம் - ஞானமானது, திகழ்கின்றது - பிரகாசிக்கின்றது, என்ன திருவுளமோ - இதென்ன உன் திருவுளக்கருத்தோ அறியேன், எ - று. ஏ - அசை.

(பொ - ரை.) பிரகாசிக்கின்ற நவகோணங்களிலும் பொருந்தி வாழ்பவளே! (முப்பாழுங் கடந்துநின்ற) வெளியிலிருக்கும் உன்திரு மேனியைத் தரிசித்தலால் என் கண்ணிலும் மனதிலுமுண்டாகிய ஆன ந்தமாகிய பிரவாகத்தினுக்கு அளவுகண்டதில்லை; என்மனதில் தெளிவு

பெற்ற ஞானமானது பிரகாசிக்கின்றது; இதென்ன உன் றிருவுளக்கருத்தோ அறியேன் என்றவாறு.

(க-ரை.) உன் தரிசனம் கண்டபின் அஞ்ஞானமகன்று ஞானம் எனக்குப் பிரகாசிக்கின்றதென்பதாம்.

(வி-ரை.) உறைதல் - வாழ்தல். திகழ்தல் - பிரகாசித்தல். (கக)

உறைகின்ற நின் றிருக் கோயினின் கேள்வ ரொருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ்ச மோவென்ற னெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.

(ப-ரை.) பூரணாசலம் - அன்புநிறைந்த மலையே, மங்கலையே - நித்திய சுமங்கலையே, உறைகின்ற - நீ வாசஞ்செய்கின்ற, நின் திருக்கோயில் - உனது திருக்கோயிலானது, நின் கேள்வர்-உன்னுயகராகிய பரமசிவனுடைய, ஒரு பக்கமோ - வாமபாகமோ, அறைகின்ற - விதிவிலக்கைச் சொல்லுகின்ற, நான்மறையின் - நான்கு வேதங்களின், அடியோ - மூலமோ, முடியோ - அந்தமோ, அமுதம் நிறைகின்ற - அமுதகலை நிறைந்திராநின்ற, வெண்டிங்களோ - வெண்மையான சந்திரனோ, கஞ்சமோ - தாமரைமலரோ, என்றன் நெஞ்சகமோ - என் மனதோ, மறைகின்ற - அலைகள் மடங்காநின்ற, வாரிதியோ - (பாற்) சமுத்திரமோ (அறியேன்), எ-று.

(பொ-ரை.) அன்புநிறைந்த மலையே! நித்திய சுமங்கலையே! நீ வாசஞ்செய்கின்ற உனது திருக்கோயிலானது உன்னுயகராகிய பரமசிவனுடைய வாமபாகமோ, விதிவிலக்கைச்சொல்லுகின்ற நான்குவேதங்களின் மூலமோ, அந்தமோ, அமுதகலை நிறைந்திராநின்ற வெண்மையான சந்திரனோ, தாமரைமலரோ, என் மனதோ, அலைகள் மடங்காநின்ற (பாற்) சமுத்திரமோ (அறியேன்) என்றவாறு.

(க-ரை.) அம்மா! நின்கோயிலிஃதெனத் தெளிந்திலேனென்பதாம்.

(வி-ரை.) மறிதல்: மறையெனத்திரிந்தது. பூரணசலம் என்பதனைப் பூரணம் அசலம் எனப்பிரித்துக்கொள்க. பூரணம் - நிறைவு, அசலம் - அசையாதிருப்பது (மலை). அறைதல் - சொல்லல். ஓகாரங்கள் ஐயப்பொருளன. அறியேன் என்பது இசையெச்சமாய் வருவிக்கப்பட்டது.

மங்கலை செங்கல சம்முலை யாண் மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயிற் றாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

(ப-ரை.) பசும்பெண்கொடி - பசியகொடி (போன்ற இடையினையுடைய அபிராமி), மங்கலை - நித்தியமங்கலையென்றும், செங்கலசம் - (சிவந்த) மாணிக்ககலசத்தையொத்த, முலையாள் - குசங்களையுடையவளென்றும், மலையாள் - மலையரையன் பாவையென்றும், வருணம் - அழகிய, சங்கு - வளையல்கள், அலை - அசைகின்ற, செங்கை - சிவந்தகையையுடைய, சகல கலாமயில் - சகலகலைகளையுமறிந்த மயில் போல்பவளென்றும், பொங்கு அலை - அலைகள் பொங்கிப்புரண்டு, தாவுங்கங்கை - தாவாநின்ற கங்கை, தங்கும் - பொருந்திய, புரி சடையோன் - முறுக்கிய சடையையுடைய பரமசிவன், புடையாளுடையாள் - வாமபாகத்தையாள்பவளென்றும், பிங்கலை - பிங்கலையென்றும், நீலி - நீலியென்றும்; செய்யாள் - இலக்குமியென்றும், வெளியாள் - சரஸ்வதியென்றும் (சொல்லப்படுவள்); ஏ-று. ஏ-அசை.

(பொ-ரை.) பசியகொடி (போன்ற இடையினையுடைய அபிராமி) நித்தியமங்கலையென்றும், (சிவந்த) மாணிக்க கலசத்தையொத்த குசங்களை யுடையவளென்றும், மலையரையன் பாவையென்றும், அழகிய வளையல்கள் அசைகின்ற சிவந்த கையையுடைய சகலகலை,

களையுமறிந்த மயில்போல்பவளென்றும், அலைகள் பொங்கிப்புரண்டு தாவாநின்ற கங்கைபொருந்திய முறுக்கிய சடையையுடைய பரமசிவன் வாமபாகத்தையாள்பவளென்றும், பிங்கலையென்றும், நீலியென்றும், இலக்குமியென்றும், சரஸ்வதியென்றும் (சொல்லப்படுவள்) என்றவாறு.

(க-ரை.) அம்மையின்றன்மை யிஃதெனக் கூறியதாம்.

(வி-ரை.) எல்லாவுலகங்களையுமீன்றவளாதலால்தேவியை'பெண்கொடி' என்றார். புடை - பக்கம். ஆளுடையாள்: ஒருசொல். பிங்கலம்- பொன். பிங்கலை - பொன்னிறமுள்ளவள். (உக)

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
அடியே னிறந்தி் னினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே.

(ப-ரை.) கொடியே - கொடிபோன்றவளே, இளவஞ்சிக்கொம்பே - இளமையாகிய வஞ்சிக்கொம்பையொத்தவளே, எனக்கு - என்றனுக்கு, வம்பே பழுத்தபடியே - அபக்குவனான பருவத்தில் (உன்னருள் பழுக்கச்செய்ததுபோல்), மறையின் - வேதங்களின், பரிமளமே - மிக்க பரிமளமானவளே, பனி மால்-குளிர்ச்சியும் பெருமையுமுள்ள, இமயப்பிடியே-இமவான்பெற்ற பிடிநடையுடையவளே, பிரமன்முதலாய - பிரமனாதியான, தேவரை - தேவர்களை, பெற்ற அம்மே - பெற்றதாயே, அடியேன் - உனது அடிமையாகிய யான், இனி இறந்து - இனி இறந்து, இங்கு - இவ்வுலகில், பிறவாமல் - பிறவாதிருக்கும்படி, வந்து ஆண்டுகொள் - எழுந்தருளி (என்னை) அடிமையாக்கிக்கொள்ளுவாயாக, எ-று.

(பொ-ரை.) கொடிபோன்றவளே! இளமையாகிய வஞ்சிக்கொம்பையொத்தவளே! என்றனுக்கு அபக்குவனான பருவத்தில் (உன்னருள்

பழுக்கச்செய்ததுபோல்) வேதங்களின் மிக்கபரிமளமானவளே! குளிர்ச்சியும் பெருமையுமுள்ள இமவான்பெற்ற பிடிநடையுடையவளே! பிரமனாதியான தேவர்களைப் பெற்றதாயே! உனது அடிமையாகிய யான் இனி இறந்து இவ்வுலகில் பிறவாதிருக்கும்படி (என்னை) அடிமையாக்கிக்கொள்வாயாக என்றவாறு.

(க-ரை.) தாயே! யான் இனிப் பிறவாவண்ணம் அருள் செய்யென்பதாம்.

(வி-ரை.) ஏ-அசை. கொடி: ஆகுபெயர். இமயப்பிடி - இமயமலையிற் பிறந்த பெண்யானை. பிரமன்முதலாய தேவரைப் பெற்றமையால் 'அம்மே' என்றார். (உஉ)

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்
விள்ளேன் பரசமயம்விரும் பேன்வியன் மூவுலகுக் [னை
குள்ளே யனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே.

(ப-ரை.) வியன் - பெருமைபொருந்திய, மூவுலகுக்கு - திரிலோகங்களிலு (மிருக்கும்), அனைத்தினுக்குமுள்ளே - எல்லாவற்றிற்குமுள்ளானவளே, புறம்பே - வெளியானவளே, உள்ளத்தே - என் மனதின்கண், விளைந்த - உண்டாகிய, கள்ளே - தேனே, களிக்கும் களியே - ஆனந்தப்பெருக்கே, அளிய-கிருபையையுடைய, என் கண் மணியே-என் கண்மணியே, மனதில்-என்மனதில், நின் கோலம் அல்லாது - உன்னழகையல்லாது மற்றவற்றை, கொள்ளேன்-நினையேன், அன்பர் கூட்டந்தன்னை - உன்னன்பர்கூட்டத்தை, விள்ளேன் - விட்டுப்பிரியேன், பரசமயம் விரும்பேன் - வேறு மதங்களை இச்சியேன், எ-று.

(பொ-ரை.) பெருமை பொருந்திய திரிலோகங்களிலு (மிருக்கும்) எல்லாவற்றிற்கு முள்ளானவளே! வெளியானவளே! என் மன

தின்கண் உண்டாகிய தேனே! ஆனந்தப்பெருக்கே! கிருபையை யுடைய என் கண்மணியே! என் மனதில் உன்னழகையல்லாது மற்ற வற்றை நினையேன், உன்னடியார் கூட்டத்தை விட்டுப்பிரியேன், வேறுமதங்களை இச்சியேன் என்றவாறு.

(க-ரை.) என் கண்மணிபோன்றவளே! நின் கோலத்தையன்றி வேறொன்றை நினையேன்; உனது அடியாரை விட்டகலேன்; பரசமயங்களை விரும்பே னென்பதாம்.

(வி-ரை.) விளைந்த என்பதற்குச் சுரந்த என்றுரைத்தலுமாம். விள்ளல்-விட்டுநீங்குதல். உள் புறம்பு என்பன ஆகுபெயர்கள். (உரு)

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

(ப-ரை.) மணியே - அரதனமே, மணியின் ஒளியே - அம்மணியின் பிரகாசமே, ஒளிரும் - பிரகாசிக்கும், மணி புனைந்த-(அம்) மணிகளாலலங்கரிக்கப்பெற்ற, அணியே-ஆபரணமே, அணியும் அணிக்கு-தரிக்கும் ஆபரணங்களுக்கு, அழகே - அழகானவளே, அணுகாதவர்க்கு - பத்திசெய்து உனைச் சேராதவர்க்கு, பிணியே - நோய்போல்பவளே, பிணிக்கு மருந்தே - (பத்திசெய்வோர்) பிணிக்கு அமுதமே, அமரர் - தேவர்களுக்கு, பெருவிருந்தே - பெரியவிருந்தானவளே, நின் பத்மபாதம் - உனது தாமரைமலர்போன்ற திருவடிகளை, பணிந்தபின் - வணங்கினபின்பு, ஒருவரை - வேறொரு தெய்வத்தை, பணியேன் - (நான்) வணங்கேன், எ-று. ஏ அசை.

(பொ-ரை.) அரதனமே! அம்மணியின் பிரகாசமே! பிரகாசிக்கும் (அம்)மணிகளா லலங்கரிக்கப்பெற்ற ஆபரணமே! தரிக்கும் ஆபரணங்களுக்கு அழகானவளே! பத்திசெய்து உனைச்சேராதவர்க்கு நோய்போல்,

பவளே! (பத்திசெய்வோர்)பிணிக்கு அமுதமே! தேவர்களுக்குப் பெரிய விருந்தானவளே! உனது தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கினபின்பு வேறொரு தெய்வத்தை (நான்) வணங்கேன் என்றவாறு.

(கு-ரை.) உன்றிருவடியைப் பணிந்தபின் வேறு தெய்வங்களைப் பணியே னென்பதாம்.

(வி-ரை.) மணிமுதலியன ஆகுபெயர்கள். அமரர் - இறவாதவர். இறக்குந்தேவர்களை அமரர் என்றது மங்கலவழக்கு. (உச)

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே.

(ப-ரை.) முதல் மூவருக்கும் - முதன்மையான மும்மூர்த்திகட்கும், அன்னே - தாயே, உலகுக்கு - உலகத்திற்கு, அபிராமி என்னும் - அபிராமியென்கின்ற, அருமருந்தே - கிடைத்தற்கரிய தேவாமுதமே, பின்னே திரிந்து - உன்னடியார்களின் பின்னே திரிந்து, உன் அடியாரை - உன்தொண்டரை, பேணி-பூசித்து, பிறப்பு அறுக்க - பிறவித்துன்பத்தை நீக்க, முன்னே - முற்பிறப்பிலேயே, தவங்கள் முயன்றுகொண்டேன் - தவஞ்செய்தேன், என்னே - என்ன, இனி உன்னை - இனிமேலுன்னை, யான் மறவாமனின்று - நான் மறவாமலிருந்து, ஏத்துவன் - துதிப்பேன், எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) முதன்மையான மும்மூர்த்திகட்கும் தாயே! உலகத்திற்கு அபிராமியென்கின்ற கிடைத்தற்கரிய தேவாமுதமே! உன்னடியார்களின் பின்னே திரிந்து உன் தொண்டரைப் பூசித்துப் பிறவித்துன்பத்தை நீக்க முற்பிறப்பிலேயே தவஞ்செய்தேன், என்ன, இனிமேலுன்னை நான் மறவாமலிருந்து துதிப்பேன் என்றவாறு.

(க-ரை.) பிறவியை நீக்க முற்பிறப்பிற்றானே தவஞ்செய்து உன்னடியாரை அடைந்தனன், இனி உன்னைத் துதிக்குமா றென்னோ வென்பதாம்.

(வி-ரை.) அடியார் - அடிமையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர். அடிமை-தொண்டு. தவம் பலவகையதாதலால் 'தவங்கள்' எனப் பன்மை கூறினார். (உரு)

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்தும்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
னாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே.

(ப - ரை.) கமழ் - பரிமளிக்கின்ற, பூங்கடம்பு - கடப்பமலரை, சாத்தும் - அணிந்த, குழலணங்கே - கூந்தலையுடையவளே, ஏத்தும் - துதிசெய்கின்ற, அடியவர் - உனது தொண்டர், ஈரேழுலகினையும் - பதினான்கு லோகங்களையும், படைத்தும் - சிருஷ்டித்தும், காத்தும் - ரக்ஷித்தும். அழித்தும் - துடைத்தும், திரிபவராம் - திரிகின்ற (மும் மூர்த்தியராவர்), மணம் நாறு - பரிமளிக்கின்ற, நின் தாள் இணைக்கு- உன் உபயபாததாமரைகளுக்கு, என் நா தங்கு - என்னாவின்கணுண் டாகிய, புன்மொழி - புன்சொற்கள், ஏறிய வாறு - ஏறியவிதம் (யோசிக்கில்), நகையுடைத்து - (யாவரும்) நகைக்குந் தன்மையுடைத்து, எ-று. ஏ - அசை.

(பொ-ரை.) பரிமளிக்கின்ற கடப்பமலரைஅணிந்த கூந்தலையுடையவளே! துதிசெய்கின்ற உனது தொண்டர் பதினான்கு லோகங்களையும் சிருஷ்டித்தும் ரக்ஷித்தும் துடைத்தும் திரிகின்ற (மும்மூர்த்திய)ராவர்; பரிமளிக்கின்ற உன் உபயபாததாமரைகளுக்கு என் நாவின்கணுண்டாகிய புன்சொற்கள் ஏறியவிதம் (யோசிக்கில்) (யாவரும்) நகைக்குந்தன்மையுடைத்து என்றவாறு.

(த-ரை.) மணங்கமழு நின்றிருவடிக்கு என் புன்மொழியாகிய மலர்கள் ஏறியது யாவரும் நகைக்குந்தன்மையை யுடைத்தென்பதாம்.

(வி-ரை.) கமழ்பூங்கடம்பு: வினைத்தொகைநிலைத்தொடர். பூங்கடம்பு: அடையடுத்த ஆகுபெயர். அணங்கு-தெய்வப்பெண். உபயம் - இரண்டு. (உசு)

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே.

(ப-ரை.) சுந்தரி - சுந்தரியே, வஞ்சம் - என்னை வஞ்சிக்கின்ற, பிறவியை - பிறவித்துன்பத்தை, உடைத்தனை - தகர்த்தனை; உள்ளம் - என்மனம், உருகும் அன்பு - உருகும்படியான அன்பை, படைத்தனை - கொடுத்தனை; பத்மம் - தாமரைமலரையொத்த, பதயுகம் - உபயபாதங்களை, சூடும் பணி - தரிக்கின்ற தொழிலை, எனக்கு - என்றனுக்கு, அடைத்தனை - ஏற்படுத்தினை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம் - என் மனத்தின் அகப்பற்றையெல்லாம், நின் அருள் புனலால்-உன் கிருபா ஜலத்தினால், துடைத்தனை - கழுவினை; நின் அருள்-உன் கிருபையை, ஏதென்று - என்னவென்று, சொல்லுவது - அளவிட்டுச்சொல்லுவது, எ-று. ஏ- அசை.

(பொ-ரை.) சுந்தரியே! என்னை வஞ்சிக்கின்ற பிறவித்துன்பத்தைத் தகர்த்தனை; என்மனம் உருகும்படியான அன்பைக்கொடுத்தனை; தாமரைமலரையொத்த உபயபாதங்களைத் தரிக்கின்ற தொழிலை என்றனுக்கு ஏற்படுத்தினை; மனத்தின் அகப்பற்றையெல்லாம் உன் கிருபா ஜலத்தினால் கழுவினை; உன் கிருபையை என்னவென்று அளவிட்டுச் சொல்வது என்றவாறு.

(க-ரை.) சுந்தரியே! என் பிறவியை நீக்கினை, நெஞ்சுருகு மன்பைப் படைத்தனை, உன் திருவடித் தொண்டு செய்யும் பணியை யளித்

தனை, என்மனத்தழுக்கை உன் அருட்புனலால் அகற்றினை, உன்னருளே யேதென்று கூறுவனென்பதாம்.

(வி-ரை.) சுந்தரம் - அழகு, அதனையுடையவள் சுந்தரி. யுகம்-இரண்டு. புனல் ஜலம் என்பன நீரின் பரியாயப்பெயர்கள். புனலால் என்றதற்கேற்ப, துடைத்தல் கழுவுதலுக்காயிற்று. (உ-எ)

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே.

(ப-ரை.) சொல்லும் - வாசகமும், பொருளும் - அதன் அருத்தமும், என - போல, நடமாடும் - பொருந்தியிராநின்ற, துணைவருடன் - உன் நாயகருடனே, புல்லும் - சேர்ந்திராநின்ற, பரிமளம் - மிகுவாசனையுள்ள, பூங்கொடியே - பூங்கொடிபோன்றவளே, நின் - உன்னுடைய, புது மலர் - தாமரையின் நாண்மலர்போன்ற, தாள் - திருவடிகளை, அல்லும் பகலும் - இரவும் பகலும், தொழுமவர்க்கு - வணங்குவார்க்கு (இம்மையில்), அழியா அரசும் - கெடாத அரசுரிமையும், செல்லும் - மோக்ஷத்தில் செலுத்தும், தவநெறியும் - தவமார்க்கமும், சிவலோகமும் - (மறுமையில்) சாலோகபதவியும், சித்திக்கும் - கிடைக்கும், எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) வாசகமும் அதன் அருத்தமும்போலப் பொருந்தியிராநின்ற உன் நாயகருடனே சேர்ந்திராநின்ற மிகுவாசனையுள்ள பூங்கொடிபோன்றவளே! உன்னுடைய தாமரையின் நாண்மலர்போன்ற திருவடிகளை இரவும் பகலும் வணங்குவார்க்கு (இம்மையில்) கெடாத அரசுரிமையும் மோக்ஷத்தில் செலுத்தும் தவமார்க்கமும் (மறுமையில்) சாலோகபதவியும் கிடைக்கும் என்றவாறு.

(க-ரை.) இம்மையில் உன் திருவடியைத் தொழுபவர்க்கு அழியா அரசும், தபமும், மறுமையிற் சிவலோகமும் சித்திக்குமென்பதாம்.

(வி-ரை.) செலுத்துமென்னும் பிறவினை செல்லுமென நின்றது. சொல்லும் பொருளுமென என்றது பிரிவின்மைக்கெடுத்துக் காட்டுவதோருவமை. நடமாடுந்துணைவர் என்றது நடராஜரை யெனினுமாம். புல்லல் - தழுவல். அல்லும் பகலும் என்பன அல்லினும் பகலினும் என விரியும். அல்-இரா. (உஅ)

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

(ப-ரை.) சித்தியும் - அஷ்டமாசித்திகளையும், சித்தி தரும் - அச்சித்திகளைக் கொடுக்கின்ற, தெய்வம் ஆகி - தெய்வமாகி, திகழும் - பிரகாசிக்கின்ற, பராசத்தியும் — பராசத்தியாகியும், சத்தி தழைக்கும் - சத்தியா லாதரிக்கப்பட்ட, சிவமும் - சிவமாகியும், தவம் முயல்வார் - முயன்று தவஞ்செய்கின்ற யோகியர்பெறும், முத்தியும் முத்தியாகியும், முத்திக்கு - அம்மோக்ஷநிலத்திற்கு, வித்தும் வித்தாகி - விதைக்கும் விதையாகி, முளைத்து எழுந்த - உதித்தோங்கிய, புத்தியும் - புத்தியாகியும் இருப்பவள், புத்தியினுள்ளே - அப்புத்தியுள்நின்று, புரக்கும் - காக்கின்ற, புரத்தைஅன்றே - திரிபுரசுந்தரியேயல்லவா, எ-று.

(பொ-ரை.) அஷ்டமாசித்திகளையும் அச்சித்திகளைக் கொடுக்கின்ற தெய்வமாகிப் பிரகாசிக்கின்ற பராசத்தியாகியும், சத்தியாலாதரிக்கப்பட்ட சிவமாகியும், முயன்று தவஞ்செய்கின்ற யோகியர் பெறும் முத்தியாகியும், அம்மோக்ஷநிலத்துக்கு விதைக்கும் விதையாகியும், உதித்தோங்கிய புத்தியாகியும் இருப்பவள் அப்புத்தியுள்நின்று எல்லாவற்றையும் காக்கின்ற திரிபுரசுந்தரியேயல்லவா என்றவாறு.

(க-ரை.) யாவுமாயிருப்பவளும், எல்லாந் தருபவளும் திரிபுரசுந்தரியே யென்பதாம்.

(வி-ரை.) புரத்தை - புரத்தையுடையவள். அஷ்டமாசித்திகளாவன: அணிமாமுதலாயின. "வானென்னும் வைப்புக்கோர்வித்து" எனமேலோர் கூறலால், 'முத்திக்கு வித்தும் வித்தாகி' என்றார். புரத்தல்-காத்தல். புரத்தை யென்பதனை புரத்து ஐ எனப் பிரித்து மூவுலகத்தினுள்ளும் சிறந்த அழகுடையவள் என்றுரைத்துக்கொள்க. ஐ-அழகு.

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய்கொண்ட தல்ல
நன்றோ யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுள் [வென்கை
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே.

(ப-ரை.) ஒன்றே - ஏகரூபியே, பல உருவே - பல உருவமானவளே, அருவே - அரூபமானவளே, என் உமையவளே - என் தாயாகிய உமாதேவியே, அன்றே - யான் பிறந்தவந்நாளிலேயே, என்னை - என்றனை, தடுத்து ஆண்டுகொண்டாய் - தடுத்தாட்கொண்டனை; கொண்டது - அப்படி அடிமைகொண்டது, அல்லவென்கை - பின் அல்லவென்பது, உனக்கு நன்றோ - உனக்கு நன்றாகுமோ (அல்ல); இனி - இனிமேல், நான் என் செயினும் - நான் என்ன குற்றஞ்செய்யினும், நடுக்கடலுள் - நடுச்சமுத்திரத்தில், சென்றே விழினும் - போய்விழினும், கரை ஏற்றுகை - கரையிற்சேர்த்தல், நின் திருவுள்ளமே - நின்திருவுளக்கருத்தேயாம், எ-று.

(பொ-ரை.) ஏகரூபியே! பல உருவமானவளே! அரூபமானவளே! என் தாயாகிய உமாதேவியே! யான் பிறந்தவந்நாளிலேயே என்றனைத் தடுத்தாட்கொண்டனை, அப்படி அடிமைகொண்டது பின் அல்லவென்பது உனக்கு நன்றாகுமோ (அல்ல), இனிமேல் நான் என்ன குற்றஞ் செய்யினும் நடுச்சமுத்திரத்தில் போய் விழினும் கரையிற்சேர்த்தல் நின் திருவுளக்கருத்தேயாம் என்றவாறு.

(க-ரை.) ஒன்றும், பலவும், அருவும், உருவுமாகிய உமாதேவியே! யான் பிறந்தபோதே தடுத்தாட்கொண்டனை, பின் அல்லவென்கை

நன்றோ, அடியேனாகிய என்னைக் கரையேற்றுகை நின் றிருவுள்ளமே யென்பதாம்.

(வி-ரை.) தடுத்தாட்கொள்ளல் - வலிந்தடிமைகொள்ளல். நன்றேயென்னு மேகாரம் எதிர்மறை. உமை - உமா என்னும் வடசொற்றிரிபு; "ஆவீறையும்" என்னும் விதியால் உமா உமையென்றாயிற்று; இதற்கு உயிர்களை ரக்ஷிப்பவள் என்பது பொருள்; உ - ஓ பெண்ணே, மா - வேண்டாம், (ஓ பெண்ணே! தவஞ்செய்யவேண்டாம்) என வேறொரு பொருளுமுண்டு. திருவுள்ளமே யென்னு மேகாரம் தேற்றம், பிரிநிலையுமாம். (௯0)

உமையு முமையொரு பாகனு மேக வுருவில்வந்திங் [கோர்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்
சமயங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே.

(ப-ரை.) உமையும் - உமாதேவியும், உமை - உமாதேவியை, ஒருபாகனும் - ஒருபாகத்திலுடைய பரமசிவனும், ஏகவுருவில் - ஒரேரூபமாக, வந்து - எழுந்தருளி, இங்கு - இவ்வுலகத்தில், எமையும் - (அறிவிலிகளாகிய) எங்களையும், தமக்கு அன்பு செய்ய - தங்களுக்குப் பத்திசெய்ய, வைத்தார் - ஏற்படுத்தினர்; இனி - இனிமேல், எண்ணுதற்கு - மதிப்பதற்கு, ஓர் சமயங்களுமில்லை - ஒப்பற்ற மதங்களுமில்லை; ஈன்று எடுப்பாள் - பெற்றுவளர்ப்பவளாகிய, ஒரு தாயும் இல்லை - ஓர் தாயாருமில்லை; அமை உறு - மூங்கில்போன்ற, தோளியர்மேல் - தோளையுடைய பெண்களின்மேல், வைத்த ஆசையும் - வைத்திராநின்ற ஆசையும், அமையும் - போதும் (இனியில்லை), எ-று. ஏ அசை.

(பொ-ரை.) உமாதேவியும் உமாதேவியை ஒருபாகத்திலுடைய பரமசிவனும் ஒரேரூபமாக எழுந்தருளி இவ்வுலகத்தில் (அறிவிலிகளாகிய) எங்களையும் தங்களுக்குப் பத்திசெய்ய ஏற்படுத்தினர்; இனிமேல் மதிப்பதற்கு ஒப்பற்ற மதங்களுமில்லை; பெற்று வளர்ப்பவளாகிய ஓர்

தாயாருமில்லை; மூங்கில்போன்ற தோளையுடைய பெண்களின்மேல் வைத்திராநின்ற ஆசையும் போதும் (இனியில்லை) என்றவாறு.

(கரு-ரை.) உமாதேவியும் உமாபாகனும் ஒருருவாகி வந்தென்னை யாட்கொண்டனராதலால் யான் இனிப்பிறவேனென்பதாம்.

(வி-ரை.) ஏகம் - வடசொல், ஒன்று என்பது பொருள். எமையும் என்னும் உம்மை இழிவுசிறப்பு. எண்ணல் - மதித்தல். 'ஈன்றெடுப்பாளொரு தாயுமில்லை' என்றதனால் இனி யெமக்குப் பிறவியில்லையென்றதாயிற்று. அமை-மூங்கில். உறு: ஈண்டுவமவுருபாயிற்று. (௩௧)

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி னல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே.

(ப-ரை.) ஈசர் பாகத்து - பரமசிவனது (வாம) பாகத்தி (லிராநின்ற), நேரிழையே-நல்லாபரணத்தையுடையவளே, ஆசைக்கடலில்-ஆசையாகிய சமுத்திரத்தில், அகப்பட்டு - சிக்கி, அருள் அற்ற-கிருபையில்லாத, அந்தகன் கை - இயமனுடைய கையிலிராநின்ற, பாசத்தின்-கயிற்றினால், அல்லற்பட-துன்பப்பட, இருந்தேனை-இருந்தவென்னை, நின் பாதம் என்னும்-நின்றிருவடியென்கின்ற, வாசக்கமலம் - வாசனையுள்ள தாமரைமலரை, தலைமேல் - என்சிரசின்மேல், வலிய வைத்து - பலவந்தமாகவைத்து, ஆண்டுகொண்ட - அடிமைகொண்ட, நேசத்தை-உன் அருளை, என்சொல்லுவேன் - என்னென்றுசொல்லுவேன், எ-று.

(பொ-ரை.) பரமசிவனது (வாம) பாகத்தி (லிராநின்ற) நல்லாபரணத்தையுடையவளே! ஆசையாகிய சமுத்திரத்தில் சிக்கி, கிருபையில்லாத இயமனுடைய கையிலிராநின்ற கயிற்றினால் துன்பப்பட இருந்தவென்னை நின்றிருவடி யென்கின்ற வாசனையுள்ள தாமரைமல

ரை என் சிரசின்மேல் பலவந்தமாக வைத்து அடிமைகொண்ட உன் அருளை என்னென்று சொல்லுவேன் என்றவாறு.

(க-ரை.) ஆசைக்கடலி லகப்பட்டுக் கண்டகனாகிய இயமன் கையிலகப்பட விருந்தவென்னைத் தடுத்தாட்கொண்ட உன் கிருபையை என்னசொல்வேனென்பதாம்.

(வி-ரை.) ஈசர் - வடசொற்றிரிபு, இதற்கு நித்யைஸ்வர்யமுடையவர் என்பது பொருள். நேரிழை: அன்மொழித்தொகைக் காரணப் பெயர். ஆசை: ஆசா என்னும் வடசொற்றிரிபு. யமன் சிறிதும் அருளில்லாதவனாதலால் அவனை 'அருளற்றவந்தகன்' என்றார். "ஆட்பார்த்துழலு மருளில்கூற்றுண்மையால், தோட்கோப்புக்காலத்தாற் கொண்டுய்மின் - பீட்பிதுக்கிப், பிள்ளையைத்தாயலறக் கோடலான்மற்றதன், கள்ளங்கடைப்பிடித்தனன்று" என்றார் பிறரும். அந்தகன் முடிவு செய்பவன். பாசத்தின் என்பதில் இன் என்னுருபைந்தாவது மூன்றாவதன் கருவில்பொருளில் வந்தது. (௩௨)

இழைக்கும் வினைவழி யேயடுங் காலனெனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லாம்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே.

(ப-ரை.) அத்தர்-சிவபெருமானுடைய, சித்தம் எல்லாம் - சித்த முழுமையும், குழைக்கும் - உருகச்செய்யும், களபம் - களவைச்சாந்தணிந்த, குவி முலை - குவிந்த குசங்களையும், யாமளை - யாமளையென்னுந் திருநாமத்தையும், கோமளமே - கட்டழகையுமுடையவளே, இழைக்கும் - கூட்டிவைக்கும், வினை வழியே - இருவினைகளின்வழியே, நடுங்க - (நான்) நடுங்கும்படி, அடுங்காலன் - கொல்லுமியமன், எனை - என்றனை, அழைக்கும்பொழுது - கூப்பிடும்பொழுதும், உழைக்கும்பொழுது - அவனைக்கண்டு நான் வருந்துங்காலத்திலும், உன்னையே - உன்றனையே, அன்னை - என்றாயே, என்பன் - என்று கூப்பிடு

வேன்; (அப்போது) உவந்து - (நீ) சந்தோஷித்து, ஓடிவந்து - சீக்கிரத்தில் வந்து, அஞ்சல் என்பாய் - பயப்படாதே யென்பாயாக, எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) சிவபெருமானுடைய சித்தமுழுமையும் உருகச்செய்யும் கலவைச்சாந்தணிந்த குவிந்த குசங்களையும் யாமளையென்னுந் திருநாமத்தையும் கட்டழகையுமுடையவளே! கூட்டிவைக்கும் இருவினைகளின்வழியே (நான்) நடுங்கும்படி கொல்லுமியமன் என்றனைக் கூப்பிடும்பொழுதும் அவனைக்கண்டு நான் வருந்துங்காலத்திலும் உன்றனையே என்றாயே என்று கூப்பிடுவேன், (அப்போது) (நீ) சந்தோஷித்து சீக்கிரத்தில் வந்து பயப்படாதே யென்பாயாக என்றவாறு.

(க-ரை.) அழகு நிறைந்தவளே! இயமன் வருங்காலத்தில் ஓடிவந்து ரக்ஷிப்பாயென்பதாம்.

(வி-ரை.) எண்ணும்மைகள் விகாரத்தாற்றொக்கன. அத்தர்-எல்லாவுயிர்களுக்குந் தந்தை; இதனை, "விடையதூரிறையே தாதைமற்றவன்புரான் மின்னெமதன்னையன்னவரைக், கடையரேமறந்து பிறந்து தானன்றோ கடும்பவவிடும்பையுற்றனமில், வடைவுணர்ந்திலைபோன்றுடலிதற்கேது வாய்வரத்தாய்பிதாவெனநெஞ், சுடைவுறாநின்றாய் பவந்தொறிவ்வணமுற் றுளவுயிர்க்களவியாதுரையே" என்னுமான்றோர் திருவாக்கானுணர்க. குழைக்கு முலையெனவியையும். கோமளம்-மெல்லியல் எனினுமமையும். உழைத்தல் - வருந்தல். உவத்தல் - மகிழ்தல். ஓடிவந்து அஞ்சலென்பாய் எனவியையும். (கூ)

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
மைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே.

(ப-ரை.) வந்து - (தன் சந்நிதியில்) வந்து, சரணம் புகும் - அடைக்கலம் புகும், அடியாருக்கு - அடியார்களுக்கு, வான் உலகம் -

தேவலோகத்தை, பரிவொடு தந்து - அன்போடு கொடுத்து, தான் - தான் (அபிராமி), சதுர்முகமும், - பிரமனது நான்குமுகத்திலும், செந்தேன் மலரும் - தேன்பொருந்திய செந்தாமரைமலரிலும், பைந்தேன் - பசியதேனையுடைய, அலங்கல் - (துளவ) மாலையையும், பருமணி - பருத்த கவுத்துவமணியையுமணிந்த, ஆகமும் - திருமாலின் திருமார்பிலும், பாகமும் - சிவனிடப்பாகத்திலும், அலர் கதிர்-விரிந்த கிரணங்களையுடைய, ஞாயிறும் - சூரியமண்டலத்திலும், பொன்-அழகிய, திங்களும் - சந்திரமண்டலத்திலும், போயிருக்கும் - போயிருப்பாள், எ-று.

(பொ-ரை.) தன் சந்நிதியில்வந்து அடைக்கலம் புகும் அடியவர்களுக்குத் தேவலோகத்தை அன்போடு கொடுத்துத் தான் (அபிராமி) பிரமனது நான்குமுகத்திலும் தேன்பொருந்திய செந்தாமரைமலரிலும் பசியதேனையுடைய (துளவ) மாலையையும் பருத்த கவுத்துவமணியையுமணிந்த திருமாலின் திருமார்பிலும் சிவனிடப்பாகத்திலும் விரிந்த கிரணங்களையுடைய சூரியமண்டலத்திலும் அழகிய சந்திரமண்டலத்திலும், போயிருப்பாள் என்றவாறு.

(க-ரை.) அடியாருக்கு இந்திரபதவியை யளித்துத் தான் முறையே மும்மூர்த்திகளுடைய முகம் மார்பு பாகம் என்பவற்றிலும், மலரிலும் சூரியசந்திரமண்டலங்களிலும் வாழ்ந்திருப்பளென்பதாம்.

(வி-ரை.) சந்திரமண்டலம் மோக்ஷமென்பது புராணக்கருத்தாதலால், சந்திரமண்டலத்தைத் தேவிக்கிடமென்றனர். உம்மைகள்: ஆக்கவும்மைகள். ஏகாரங்கள்: அசைகள். பரிவு-அன்பு சதுர்முகம் முதலியவற்றில் ஏழனுருபுவிரித்துரைக்கலாயிற்றுப் பொருளமைதிக்கேற்ப. ()

திங்கட் பகையின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே.

(ப-ரை.) தரங்கம் - அலைகளையுடைய, கடலுள் - (திருப்பாற்) கடலில், வெங்கண் - குரூரமாகிய, பணி அணைமேல் - சர்ப்பசயனத்தில், துயில் கூரும் - (யோக) நித்திரைசெய்யாநின்ற, விழுப்பொருளே - (விஷ்ணு உருவங்கொண்ட) சிறந்த பொருளானவளே, திங்கட்பகையின்-சந்திரனுக்குப் பகையாகிய (தாமரைமலரையொத்த), சீறடி- சிறிய திருப்பாதத்தை, சென்னி வைக்க - (நீ) எங்கள் சிரத்தில்வைக்க, எங்கட்கு - (உன் அன்பராகிய) எங்களுக்கு, ஒருதவம் - ஒப்பற்ற தவப் (பயன்), எய்தியவா - கிடைத்தவாறென்னை, எண் இறந்த - அளவிறந்த, விண்ணோர் தங்கட்கும் - தேவர்களுக்கும், இந்தத்தவம் - இம்மேலான தவப்(பயன்), எய்துமோ - கிடைக்குமோ (இல்லை), எ-று.

(பொ-ரை.) அலைகளையுடைய (திருப்பாற்)கடலில் குரூரமாகிய சர்ப்பசயனத்தில் (யோக) நித்திரை செய்யாநின்ற (விஷ்ணு உருவங்கொண்ட) சிறந்த பொருளானவளே! சந்திரனுக்குப்பகையாகிய (தாமரைமலரையொத்த) சிறிய திருப்பாதத்தை (நீ) எங்கள் சிரத்தில் வைக்க (உன் அன்பராகிய) எங்களுக்கு ஒப்பற்ற தவப்(பயன்) கிடைத்தவாறென்னை, அளவிறந்த தேவர்களுக்கும் இம்மேலான தவப்(பயன்) கிடைக்குமோ) (இல்லை) என்றவாறு.

(க-ரை.) விஷ்ணுவாய்ச் சர்ப்பசயனத்திருப்பவளே! உன்பாத தாமரையை என் தலையில் வைக்கும்படி யான் முன்னாட்செய்த தவப் பயன் தேவர்களுக்கும் கிடையாதென்பதாம்.

(வி-ரை.) எய்துமோ வென்னு மோகாரம் எதிர்மறை. சென்னி என்பதில் ஏழனுருபு தொக்கது. எய்தியவாறு என்பது எய்தியவா என ஈறு குறைந்து நின்றது. விண்ணோர், தங்கட்கும் என்னும் உம்மை உயர்வுசிறப்பு. தரங்கம் - அலையெனப் பொருள்படுவதோர் வடசொல்; இதற்குத் திரைவது என்பதுபொருள். (௩௫)

பொருளே பொருண்முடிக் கும்போகமேயரும் போகஞ்செய்
மருளே மருளில் வருந்தெருளேயென் மனத்துவஞ்சத் [யும்

திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்றன்
அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே.

(ப-ரை.) அம்புயாதனத்து - தாமரைமலரிலிராநின்ற, அம்பிகையே - உமாதேவியே, பொருளே-மேலானபொருளே, பொருண் முடிக்கும் - அப்பொருளாலுண்டாகும், போகமே-இன்பமே, அரும் - அருமையாகிய, போகம்செய்யும் - அப்போகஞ்செய்யும், மருளே-மயக்கமே, மருளில் வரும் - அம்மயக்கத்திலுண்டாகின்ற, தெருளே - தெளிவே, என் மனத்து - என்மனதினுள், வஞ்சத்து – வஞ்சனைசெய்கின்ற, இருள் ஏதுமின்றி - அஞ்ஞானவிருள் சிறிதுமில்லாமல், ஒளிவெளியாகி - சுயம்பிரகாசமாகி, இருக்கும் - இருக்கின்ற, உன்றன் அருள்-உனது கிருபையை, ஏது - என்னவென்று, அறிகின்றிலேன்-நானறிந்திலேன், எ-று.

(பொ-ரை.) தாமரைமலரிலிராநின்ற உமாதேவியே! மேலான பொருளே! அப்பொருளாலுண்டாகும் இன்பமே! அருமையாகிய அப் போகஞ்செய்யும் மயக்கமே! அம்மயக்கத்தி லுண்டாகின்ற தெளிவே! என் மனதினுள் வஞ்சனை செய்கின்ற அஞ்ஞானவிருள் சிறிதுமில்லாமல் சுயம்பிரகாசமாகி இருக்கின்ற உனது கிருபையை என்னவென்று நானறிந்திலேன் என்றவாறு.

(க-ரை) அம்பிகையே! பொருளாகியும், போகமாகியும், மயக்கமாகியும், தெளிவாகியும், அஞ்ஞான இருளை நீக்கிய ஒளியாகியு மிருக்கு முன்றன் கிருபையை யின்னதெனவறியே னென்பதாம்.

(வி-ரை.) அம்புயம் - அம்புஜம் என்னும் வடசொற்றிரிபு, இதற்கு நீரிற் பிறப்பது என்பது பொருள். அருள் ஏது என்பதற்கு அருளுண்டாவதற்குக் காரணம் என்றுரைப்பினுமாம். (ங௬)

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்

பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே.

(ப-ரை.) எட்டுத்திக்கே-எட்டுத்திக்குகளையே, அணியும்-(ஆடையாக) அணியும், திருவுடையான் – செல்வநிறைந்த சிவபெருமானுடைய, இடம் - (வாம) பாகத்தில், சேர்பவளே – கூடியிருப்பவளே, கைக்கு அணிவன - நீ கையிற்றரிப்பன, கன்னலும் - கரும்புவில்லும், பூவும் - புஷ்பபாணமும்; கமலம் அன்ன - தாமரைமலரையொத்த நிறத்தையுடைய, மெய்க்கு - தேகத்தில், அணிவது-தரிப்பது, வெண் முத்துமாலை - வெண்மையாகிய முத்தாரம்; விட அரவின் - விஷம் பொருந்திய பாம்பின், பைக்கு அணிவன - படம்போன்ற கடிதட்த்திலணிவன, பன்மணி-பலரத்தினங்களாற் செய்த, கோவையும்-மேகலையும், பட்டும் - செம்பட்டாடையுமாம், எ-று.

(பொ-ரை.) எட்டுத் திக்குகளையே(ஆடையாக) அணியும் செல்வநிறைந்த சிவபெருமானுடைய (வாம)பாகத்தில் கூடியிருப்பவளே! நீ கையிற் றரிப்பன கரும்புவில்லும் புஷ்பபாணமும்; தாமரைமலரையொத்த நிறத்தையுடைய தேகத்தில் தரிப்பது வெண்மையாகிய முத்தாரம்; விஷம்பொருந்திய பாம்பின் படம்போன்ற கடிதடத்திலணிவன பலரத்தினங்களாற் செய்த மேகலையும் செம்பட்டாடையுமாம் என்றவாறு.

(கு-ரை.) கரும்புவில்லும், புஷ்பபாணமும், முத்தாரமும், ரத்தினமேகலையும், செம்பட்டாடையுமணிந்து, சிவபெருமான் வாமபாகத்திருப்பவளே யென்பதாம்.

(வி-ரை.) கைக்கு, மெய்க்கு, பைக்கு என்பன உருபுமயக்கம். ஏகாரங்கள் – அசைகள். இடம் - இடப்பாகம் எட்டுத்திக்கே யணியுந் திருவுடையான் என்றது திகம்பரன் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு. மேகலை-மாதரிடை யணிகளுளொன்று, இது எழுகோவைகளானியன்றது. பட்டும் என வாளாகூறினரேனும் பொருளமைதிக்

கேற்பச் செம்பட்டு என்றுரை வரையலாயிற்று; இது "மின்னொத்திடு கழனூபுரம் வெள்ளை செம்பட்டு மின்ன" என்னும் மணிவாசகப்பெருமான் மணிவாக்கினு லினிது விளங்கும். (நடஎ)

பவுளக் கொடியிற் பழுத்த செவ்வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே.

(ப-ரை.) அமராவதி - தேவலோகத்தை, ஆளுகைக்கு - நீங்கள் ஆளவிரும்பின், பவளக்கொடியின் - பவளக்கொடியினும், பழுத்த செவ்வாயும் - முதிர்ந்த செவ்வாயையும், தவளம் முறுவல் - வெண்மையாகிய பற்களிற்றோன்றிய, திருநகையும்-புன்சிரிப்பையும், துணையா-தனக்குத் துணையாகக்கொண்டு, எங்கள் - எங்களுடைய, சங்கரனை - பரமசிவன், துவள - மனங்குழைய, பொருது - பொருதுவருத்தி, துடி இடை - உடுக்கைபோன்ற இடையை, சாய்க்கும் - தளரச்செய்கின்ற, பணி-ஆபரணங்களையணிந்த, துணை முலையாள்-இரண்டு குசங்களையுடையவளாகிய, அவளை-அவ்வபிராமியை, பணிமின்-வணங்குங்கள், எ-று.

(பொ-ரை.) தேவலோகத்தை நீங்கள் ஆளவிரும்பின் பவளக்கொடியினும் முதிர்ந்த செவ்வாயையும் வெண்மையாகிய பற்களிற்றோன்றிய புன்சிரிப்பையும் தனக்குத் துணையாகக்கொண்டு எங்களுடைய பரமசிவன் மனங்குழைய பொருது வருத்தி உடுக்கைபோன்ற இடையைத் தளரச்செய்கின்ற ஆபரணங்களையணிந்த இரண்டு குசங்களையுமுடையவளாகிய அவ்வபிராமியை வணங்குங்கள் என்றவாறு.

(க-ரை.) அன்பர்களே! அபிராமியைப் பணியின் இந்திரப்பதவி எய்துமென்பதாம்.

(வி-ரை.) கண்டீர்: முன்னிலையசை யிடைச்சொல். ஏ - அசை. விரும்பின்: இசையெச்சமாய் வருவித்துரைக்கப்பட்டது. கொடியின் என்னும் ஐந்தனுருபு உறழ்ச்சிப்பொருளது. சாய்த்தல்-ஒடித்தலுமாம்.

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே.

(ப-ரை.) *முப்புரங்கள் - திரிபுரங்கள், மாளுகைக்கு - அழிவதற்கு, அம்பு - பாணத்தை, தொடுத்த - பிரயோகித்த, வில்லான் - (மேருவை) வில்லாகவுடைய பரமசிவனது, பங்கில் - (வாம) பாகத்திலிருக்கும், வாணுதலே - ஒளிபொருந்திய நெற்றியையுடையவளே, ஆளுகைக்கு - என்னை அடிமைகொள்வதற்கு, உன்றன் - உன்னுடைய, அடித்தாமரைகள் - பாததாமரைகள், உண்டு - இருக்கின்றன; அந்தகன்பால் - இயமனிடத்திலிருந்து, மீளுகைக்கு - தப்புவதற்கு, உன்றன்-உன்னுடைய, விழியின் கடையுண்டு-கிருபாகடாக்ஷமுண்டு; மேல் இவற்றின் - மேற்சொல்லிய இவைகளையானடைய, மூளுகை-உன்னைத் தூண்டிக்கேளாமை, என் குறை-என்குறையே, நின் குறை அன்று - உன்மீதிற் குற்றமில்லை, எ-று.*

(பொ-ரை.) *திரிபுரங்கள் அழிவதற்குப் பாணத்தைப் பிரயோகித்த (மேருவை) வில்லாகவுடைய பரமசிவனது (வாம) பாகத்திலிருக்கும் ஒளிபொருந்திய நெற்றியையுடையவளே! என்னை அடிமைகொள்வதற்கு உன்னுடைய பாததாமரைகள் இருக்கின்றன; இயமனிடத்திலிருந்து தப்புவதற்கு உன்னுடைய கிருபாகடாக்ஷமுண்டு; மேற்சொல்லிய இவைகளையானடைய உன்னைத் தூண்டிக்கேளாமை என் குறையே உன்மீதிற் குற்றமில்லை என்றவாறு.*

(க-ரை.) *சிவபெருமான் வாமபாகத்திருப்பவளே! எனை யாட்கொள்ள உன் திருவடிகளுண்டு, யான் இயமனைவெல்ல உன் கிருபாகடாக்ஷமுண்டு, இவற்றையடையா திருத்தற்குக் காரணம் யான் வணங்கிக் கேட்காமையே யென்பதாம்.*

(வி-ரை.) வில்லான் என வாளா கூறினரேனும் ஈண்டைக்கேற்ப மேருவில்லான் எனப் பொருளுரைக்கலாயிற்று. வாணுதல்: அன்மொழித்தொகைக் காரணப்பெயர். (௩௯)

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கெண்ணியவெம்பெருமாட்டியைப்பேதைநெஞ்சால்
காணுதற் கண்ணிய எல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற்கெண்ணியவெண்ணமன்றேமுன்செய்புண்ணியமே.

(ப-ரை.) வாணுதல் - ஒளிபொருந்திய நெற்றியில், கண்ணியை-கண்ணையுடையவளை, விண்ணவர் யாவரும்-தேவர்களெல்லாம், வந்து-சந்நிதானத்தில்வந்து, இறைஞ்சி - வணங்கி, பேணுதற்கு-பூசித்தற்கு, எண்ணிய - கருதுகின்ற, எம்பெருமாட்டியை - எம்பெருமான்றுணையை, பேதை நெஞ்சால் - அஞ்ஞானபுத்தியால், காணுதற்கு - தரிசித்தற்கு, அண்ணியளல்லாத - கிட்டுபவளல்லாத, கன்னியை-குமரியை, காணும் - தரிசிக்கின்ற, அன்பு பூணுதற்கு-அன்பையடைதற்கு, எண்ணிய-யான் எண்ணின, எண்ணம் அன்றே-எண்ணமல்லவோ, முன்செய் புண்ணியம் - யான் முன்செய்த தவப்பயன், எ-று. ஏ-அசை.

(போ-ரை.) ஒளிபொருந்திய நெற்றியில் கண்ணையுடையவளை, தேவர்களெல்லாம் சந்நிதானத்தில் வந்து வணங்கிப் பூசித்தற்குக் கருதுகின்ற எம்பெருமான் றுணையை, அஞ்ஞான புத்தியால் தரிசித்தற்குக் கிட்டுபவளல்லாத குமரியைத் தரிசிக்கின்ற அன்பை யடைதற்கு யான் எண்ணின எண்ணமல்லவோ யான் முன்செய்த தவப்பயன் என்றவாறு.

(க-ரை.) முற்பிறப்பிற் செய்த தபோபலம் அபிராமியைக்காண அன்புபொருந்துவதே யென்பதாம்.

(வி-ரை.) பெருமாட்டி-பெருமான் என்பதன் பெண்பால். அண்ணியள்: அண்மைப் பண்படியாகப்பிறந்த பெயர். (௪0)

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தால்
நண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணியெஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.

(ப-ரை.) புது - புதிய, பூம் - அழகிய, குவளைக்கண்ணியும் - நீலோற்பலம்போன்ற கண்களையுடைய அபிராமியும், செய்ய கணவரும் - செந்நிறத்தராகிய அவள் நாயகரும், கூடி - சேர்ந்து, நம் காரணத்தால் - நம்மை ரக்ஷிக்குங்காரணத்தால், நண்ணி இங்கேவந்து - இங்கேவந்து எழுந்தருளி, தம்மடியார்கள் - தமது அடியார் கூட்டத்தின், நடுவிருக்க - நடுவிலிருக்கும்படி, பண்ணி - எம்மைசெய்து, எஞ்சென்னியின்மேல் - எஞ்சிரசின்மேல், பத்மபாதம் - தாமரைபோன்ற திருவடியை, பதித்திட - இருத்திவைக்க, மனமே - மனதே, புண்ணியம் செய்தனம் - நாம் (முற்பிறப்பில்) மிக்க புண்ணியஞ்செய்தோம், எ-று.

(பொ-ரை.) புதிய அழகிய நீலோற்பலம்போன்ற கண்களையுடைய அபிராமியும் செந்நிறத்தராகிய அவள் நாயகரும் சேர்ந்து நம்மை ரக்ஷிக்குங்காரணத்தால் இங்கேவந்து எழுந்தருளி தமது அடியார் கூட்டத்தின் நடுவிலிருக்கும்படி எம்மைசெய்து எஞ்சிரசின்மேல் தாமரைபோன்ற திருவடியை இருத்திவைக்க மனதே நாம் (முற்பிறப்பில்) மிக்க புண்ணியஞ் செய்தோம் என்றவாறு.

(க-ரை.) மனமே! அபிராமி நம்மையாட்கொள்ள முற்பிறப்பில் மிக்க புண்ணியம் பண்ணினோம் என்பதாம்.

(வி-ரை.) செய்ய: செம்மைப் பன்பாடியாகப்பிறந்த பெயரெச்சம். பாதம் பதித்திட புண்ணியஞ்செய்தனம் எனவியையும். வீடுபேற்றுக்குக்காரணம் அடியார் நடுவிலிருத்தலே யாதலால் 'தம்மடியார்க ணடுவிருக்கப்பண்ணி' என்றார். "அடியார் நடுவுளிருக்கு மருளைப்புரியாய் பொன்னம்பலத் தெம்முடியா முதலே" என்றார் மேலோரும். (சக)

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே.

(ப-ரை.) இடம் கொண்டு-(மார்பைத்தமக்) கிடமாகக்கொண்டு, விம்மி - பருத்து, இணைகொண்டு-இரண்டாகி, இறுகி-(முன்) கடின மாகியும், இளகி - (பின்) மிருதுவாகியும், முத்துவடம் - முத்து மாலையை, கொண்ட - அணியப்பெற்ற, கொங்கை - குசமாகிய, மலை கொண்டு - மலையால், இறைவர் - சிவபெருமானுடைய, வலிய நெஞ்சை - திடமனதையும், நடங்கொண்ட - ஆனந்த நடனஞ்செய்யும், கொள்கைநலம்-குணச்சிறப்பையும், கொண்ட-தன்வசமாக்கிய, நாயகி-தலைவி (யாரெனின்), நல் அரவின் - அழகிய சர்ப்பத்தின், படங்கொண்ட - படத்தினது உருவத்தைக்கொண்ட, அல்குல்-நிதம்பத்தையும், பனி மொழி - குளிர்ந்த சொல்லையுமுடைய, வேதம்-வேதரூபயாகிய, திரிபுரை - திரிபுரசுந்தரியேயாம், எ-று. ஏ - அசை.

(ெபா-ரை.) (மார்பைத்தமக்) கிடமாகக்கொண்டு பருத்து இரண்டாகி (முன்) கடினமாகியும் (பின்) மிருதுவாகியும் முத்துமாலையை அணியப்பெற்ற குசமாகிய மலையால் சிவபெருமானுடைய திடமனதையும் ஆனந்த நடனஞ்செய்யும் குணச்சிறப்பையும் தன் வசமாக்கிய தலைவி (யாரெனின்), அழகிய சர்ப்பத்தின் படத்தினது உருவத்தைக்கொண்ட நிதம்பத்தையும் குளிர்ந்த சொல்லையுமுடைய வேத ரூபமாகிய திரிபுரசுந்தரியேயாம் என்றவாறு.

(க-ரை.) அபிராமியே சிவபெருமானுடைய மனதைத் தன்வச மாக்கிக்கொண்டவ ளென்பதாம்.

(வி-ரை.) பெண்மைக்குச் சிறந்த வுறுப்பாகியும் சிவபிரானது வன்னெஞ்சை யுருக்குவதாகியு மிருப்பது கொங்கையாதலால் அதனை 'இடங்கொண்டு' எனத் தொடங்கிப் புனைந்துரைப்பாராயினர். பெண்

மைக்குக் கொங்கையே சிறந்த வுறுப்பென்பதை, "கல்லாதான் சொற் காமுறுதல் முலையிரண்டும், இல்லாதாள் பெண்காமுற்றற்று" என்னுந் திருக்குறளானுணர்க. அன்றியும் "வாரிட்டுவிம்மிப் புடைத்திறுகி யிளகி மணிமார்பிட மெலாங்கவர்ந்து, வட்டமிட் டடியிட்டு நாளுக்கு நாள்மேல் வளர்ந்துபூரித்து முத்து, மாலையிட் டிறுமாந்து பட்டவர்த்தந யானை மத்தகத்தோ டெதிர்த்து, வாதிட்டு மல்லிகைப் பூச்செண்டினைத் தினம் வாட்டப்படுத்தி வரையைப், போரிட்டு மைந்தர்கள் மனஞ் சூறையிட்டு மேற்புளகித்து வஜ்ரரத்நப், புதுச்செப்பினைத் தோழமைகொண்டு பொன்னினைப் பொடியாவ ராவி மீதில், போட்டிட்ட தென்னலே தேமற் படர்ந்துசெம் பொற்சரிகை வேலியிட்டுப், புனைதரு ரவிக்கையை யிறுக்கிக் கிழித்துப் புறப்பட்டு மல்லிகைப்பூந், தாரிட்டு வர வரப் பளபளப் பாகியுயர் தங்கக் குணத்தை யொத்துச், சந்திரகாவிச் சேலை வல்லவாட்டுக்குட் டதும்பியண்ணுந்திடையினித், தாங்காதெனக் கனத்தோங்கி மன்மதனுஞ் சலாமிட்டு நிற்கவுந்தான், சீரிட்டு நின்று தந்தலை வணங்காமற் றிரண்ட பூண்முலைகள்" என்றிவ்வாறு புனைந்துரைப்பார் பலருளர். (சஉ)

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணிகையில்
திரிபுர சுந்தரி சிந்துர மேனிய டீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே.

(ப-ரை.) பரிபுரம் - சிலம்பையணிந்த, சீறடி - சிற்றடிகளையும், பாசாங்குசை - பாசாங்குசத்தையுடையவள், கையில் - கரத்தில், பஞ்ச பாணி - (புஷ்ப) பஞ்சபாணத்தையும், திரிபுரசுந்தரி - திரிபுரசுந்தரி யென்னுந் திருநாமத்தையும், சிந்துரமேனியள் - சிவந்த திருமேனியையுமுடையவள் (யாரெனின்), தீமை - பொல்லாங்கை, புரி - செய்கின்ற, நெஞ்சின் - நெஞ்சம்பொருந்திய, புரம் - திரிபுரத்தையுடைய, வஞ்சர் - வஞ்சகர்கள், அஞ்ச - பயப்பட, பொருப்பு-மேருமலையாகிய,

சிலை - வில்லை, கை குனி - கையால் வளைத்த, எரி புரை - அக்கினி போன்ற, மேனி - திருமேனியையுடைய், இறைவர் - பரமசிவனது, செம்பாகத்து - அர்த்தபாகத்தில், இருந்தவள்-இருந்தவளேயாம், எ-று.

(பொ-ரை.) சிலம்பையணிந்த சிற்றடிகளையும் பாசாங்குசத்தை யுடையவள் கரத்தில் (புஷ்ப) பஞ்சபாணத்தையும் திரிபுரசுந்தரியென்னுந் திருநாமத்தையும் சிவந்த திருமேனியையுமுடையவள் (யாரெனின்) பொல்லாங்கைச் செய்கின்ற நெஞ்சம்பொருந்திய திரிபுரத்தையுடைய வஞ்சகர்கள் பயப்பட மேருமலையாகிய வில்லைக் கையால் வளைத்த அக்கினிபோன்ற திருமேனியையுடைய பரமசிவனது அர்த்தபாகத்தில் இருந்தவளேயாம் என்றவாறு.

(க-ரை.) திரிபுரசுந்தரி சிவபெருமான் வாமபாகத்தி லிருப்பவளென்பதாம்.

(வி-ரை.) பரிபுரம்-காலணிகளுளொன்று. பஞ்சபாணி-ஐவகை மலர்களாகிய அம்புகளையுடையவள். புரிதல் - செய்தல். 'புரவஞ்சர் அஞ்சக்குனி' யென்கிற விசேடணத்தால் பொருப்பு மேருமலையைக் குறித்தது. எரி: முதனிலைத் தொழிலாகுபெயர். புரைதல் - நிகர்த்தல். வஞ்சரை ஐ சாரியை. ஏ-அசை.

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாம் [ய்தே.
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெ

(ப-ரை.) இவள் - இந்த அபிராமியம்மன், தவள் - தவத்தினாலறியத்தக்கவள்; எங்கள் - எங்கள் (பிதாவாகிய), சங்கரனார் - பரமசிவனுடைய, மனை - மனைவி; மங்கலமாம் - சுபகரமாகிய, அவள் - அவ்வபிராமி, அவர்தமக்கு-அச்சிவபெருமானுக்கு, அன்னையும் ஆயினள் - தாயுமானாள்; இவளே-இவ்வபிராமியம்மனே, கடவுளர் யாவர்க்கும் - சகல

தேவர்களுக்கும், மேலை - மேன்மையாகிய, இறைவியுமாம் - தலைவியுமாவள்; ஆகையினுல் - ஆதலினுல், இனி - இனிமேல் (நான்), ஒரு தெய்வம் - வேறொரு கடவுள், உண்டாக - இருப்பதாகவெண்ணி, மெய் - உண்மையாகிய, தொண்டு செய்து - அடிமைசெய்து, துவளேன் - (வீணுக) வருந்தேன், எ-று.

(பொ-ரை.) அபிராமியம்மன் தவத்தினு லறியத்தக்கவள்; எங்கள் (பிதாவாகிய) பரமசிவனுடைய மனைவி; சுபகரமாகிய அவ்வபிராமி அச்சிவபெருமானுக்குத் தாயுமானுள்; இவ்வபிராமியம்மனே சகல தேவர்களுக்கும் முதன்மையாகிய தலைவியுமாவள்; ஆதலினுல் இனிமேல் (நான்) வேறொரு கடவுள் இருப்பதாகவெண்ணி உண்மையாகிய அடிமைசெய்து (வீணுக) வருந்தேன் என்றவாறு.

(க-ரை.) அபிராமியன்றி வேறு தெய்வமில்லை யென்பதாம்.

(வி-ரை.) "கனக மார்கவின் செய்மன்றி - லனக நாடகற் கெமன்னை - மனைவிதாய்" என்றார் பிறரும்; சத்திதத்துவத்தினின்று சிவதத்துவந் தோன்றுமுறைபற்றி இங்ஙனம் கூறியருளினர். கடவுள்: தொழிலாகுபெயர். (௪௪)

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும்பொறுக்கைநன்றேபின்வெறுக்கையன்றே.

(ப-ரை.) தொண்டு செய்யாது - உனக்கடிமை செய்யாமலும், நின் பாதம்-உனது திருவடிகளை, தொழாது - வணங்காமலும், துணிந்து - (அறியாமையால்) துணிவுற்று, இச்சை - (தங்க) ளிச்சைப்படி, பண்டு - பூர்வத்தில், செய்தார் - செய்தவர்கள், உளரோ இலரோ - உண்டோ இல்லையோ, அப்பரிசு-அத்தன்மையை, அடியேன் கண்டு- அடியேன்பார்த்து, செய்தால் - செயவேணுயின், அது - அச்செய்கை,

கைதவமோ - வஞ்சனையோ, அன்றி - அல்லது, செய்தவமோ - செய்யுந்தவமோ, மிண்டு செய்தாலும் - (நான்) கர்வித்துப் பிழைசெய்தாலும், பொறுக்கை - நீ பொறுத்துக்கொள்ளுதல், நன்று - நன்மை, பின்-பின் (அக்குற்றங்களை), வெறுக்கை - வெறுத்துக்கொள்ளுதல், அன்று - நன்றல்லவாம். எ-று. ஏகாரங்கள் - அசை.

(பொ-ரை.) உனக்கடிமை செய்யாமலும் உனது திருவடிகளை வணங்காமலும் (அறியாமையால்) துணிவுற்றுத் (தங்க) ளிச்சைப்படி பூர்வத்தில் செய்தவர்கள் உண்டோ இல்லையோ அத்தன்மையை அடியேன் பார்த்துச் செய்வேனுபின் அச்செய்கை வஞ்சனையோ அல்லது செய்புந்தவமோ, (நான்) கர்வித்துப் பிழைசெய்தாலும் நீ பொறுத்துக் கொள்ளுதல் நன்மை, பின் (அக்குற்றங்களை) வெறுத்துக்கொள்ளுதல் நன்றல்லவாம் என்றவாறு.

(க-ரை.) தாயே! நானென்செயினும் நீ பொறுத்த லுன்கடனும் என்பதாம்.

(வி-ரை.) கைதவம் - வஞ்சம், பொறுக்கை: தொழிற்பெயர்.

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும்யானுன்னை வாழ்த்துவனே.

(ப-ரை.) புது நஞ்சை - புதிதாகிய விஷத்தை, உண்டு-புசித்து, கறுக்கும் - கறுத்த, திரு மிடற்றான்-சிறந்த கண்டத்தையுடைய பரமசிவனுடைய, இடப்பாகம்-வாமபாகத்தில், கலந்த-கூடிய, பொன்னே-அழகையுடையவளே, தம்மடியார் - தம்மடியார்கள், வெறுக்கும் - வெறுக்கத்தக்க, தகைமைகள் - செய்கைகளை, செய்யினும் - செய்தாலும், மிக்கோர் - பெரியோர், பொறுக்கும் - பொறுத்துக்கொள்ளும், தகைமை-குணம், புதியது அன்று-நூதனமல்ல; மறுக்கும்-(சதுர்வித புருஷார்த்தங்களைக் கொடாது) மறுக்கின்ற, தகைமைகள் - செய்கை

களை, செய்யினும் - எனக்கு நீ செய்யினும், யான் உன்னை-நானுன்னை, வாழ்த்துவன் - எப்போதுந் துதிப்பேன், எ-று.

(பொ-ரை.) புதிதாகிய விஷத்தைப் புசித்து கறுத்த சிறந்த கண்டத்தையுடைய பரமசிவனுடைய வாமபாகத்தில் கூடிய அழகையுடையவளே! தம்மடியார்கள் வெறுக்கத்தக்க செய்கைகளைச் செய்தாலும் பெரியோர் பொறுத்துக்கொள்ளும் குணம் நூதனமல்ல; (சதுர்வித புருஷார்த்தங்களைக் கொடாது) மறுக்கின்ற செய்கைகளை எனக்கு நீ செய்யினும் நானுன்னை எப்போதுந் துதிப்பேன் என்றவாறு.

(க-ரை.) அம்மா! நீ யென்செய்யினும் நானுன்னை வாழ்த்துவனென்பதாம்.

(வி-ரை.) பொன்னே யென்பதற்குப் பொன்போன்றவளே யென்றுரைப்பினுமாம். தம்மடியாரை ஐ - சாரியை. ஏ -அசை. (சசு)

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகல்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

(ப-ரை.) மனத்து-மனதின்கண், வாழும்படி - (நித்திய) வாழ்வையடையும்படி, ஒன்று - ஒருறுதியை, கண்டுகொண்டேன்-அறிந்து கொண்டேன் (அது) எதுவெனில், ஒருவர்-ஒருவர், வீழும்படியன்று-விரும்பும்படியானதல்ல, விள்ளும்படியன்று - இப்படியென்று சொல்லத்தக்கதன்று, வேலை - சமுத்திரஞ்சூழ்ந்த, நிலம் ஏழும் - சத்தலோகங்களுக்கும், பருவரை - பருத்தமலைகள், எட்டும் - எட்டுக்கும், எட்டாமல் - எட்டாததாகி, இரவு பகல் - இரவிலும் பகலிலும், சூழும் - மகமேருவைச் சூழ்ந்துவருகிற, சுடர்க்கும் - சந்திரசூரியர்களுக்கும், நடுவே - மத்தியிலே, கிடந்து - இருந்து, சுடர்கின்றது - பிரகாசிக்கின்றதாகும், எ-று. ஏ - அசை.

(பொ-ரை.) மனதின்கண் (நித்திய) வாழ்வையடையும்படி ஒரு றுதியை அறிந்துகொண்டேன் (அது) எதுவெனில், ஒருவர் விரும்பும் படியானதல்ல, இப்படியென்று சொல்லத்தக்கதன்று; சமுத்திரஞ்சூழ்ந்த சத்தலோகங்களுக்கும் பருத்தமலைகள் எட்டுக்கும் எட்டாததாகி, இரவிலும் பகலிலும் மகமேருவைச் சூழ்ந்துவருகிற சந்திரசூரியர்களுக்கும் மத்தியிலே இருந்து பிரகாசிக்கின்றதாகும் என்றவாறு.

(க-ரை.) நானறிந்த உருதிப்பொருள் சூரியசந்திரர்களின் மத்தியிலிருந்து பிரகாசிக்கின்ற அபிராமியி னுருவென்பதாம்.

(வி-ரை.) உறுதி - அழியாப்பொருள். வீழ்தல் - விரும்புதல். விள்ளல் - சொல்லல். வேலை - வேலா என்னும் வடசொற்றிரிபு. பருவுரையெட்டு என்றது அஷ்டகுலபர்வதங்களை; அவை-கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதநம் என்பன. ()

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடருந் தவிர்த்திமைப் போதிருப பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே.

(ப-ரை.) சுடரும் - பிரகாசிக்கின்ற, கலைமதி - பிறைச்சந்திரன், துன்றும் - பொருந்திய, சடை முடி குன்றில்-சடையாகிய சிகரத்தை யுடைய (பரமசிவனாகிய) மலையில், ஒன்றி-பொருந்தி, படரும்-படருகின்ற, பரிமளம் - (வேத)மணங் கமழுகின்ற, பச்சை - பசியநிறத்தையுடைய, கொடியை-கொடிபோன்ற அபிராமியை, நெஞ்சில் - மனதில், இமைப்போது - இமைநேரம், பதித்து - ஊன்றி, இருப்பார் - இருப்பவர், இடரும் தவிர்த்து-துன்பங்களை நீக்கி, குடரும்- தடலும், கொழுவும் - நிணமும், குருதியும் - இரத்தமும், தோயும் கலந்திருக்கின்ற, குரம்பையில் - (உடலாகிய) குடிசையில், பின்னும் - மறுபடியும், எய்துவரோ - அடைவரோ (அடையார்), எ - று.

(பொ-ரை.) பிரகாசிக்கின்ற பிறைச்சந்திரன் பொருந்திய சடையாகிய சிகரத்தையுடைய (பரமசிவனாகிய) மலையில் பொருந்திப் படரு

கின்ற (வேத)மணங் கமழுகின்ற பசிய நிறத்தையுடைய கொடிபோன்ற (அபிராமியை) மனதில் இமைநேரம் ஊன்றி இருப்பவர், துன்பங்களையு நீக்கிக் குடலும் நிணமும் இரத்தமும் கலந்திருக்கின்ற (உடலாகிய) குடிசையில் மறுபடியும் அடைவரோ (அடையார்) என்றவாறு.

(கு-ரை.) அபிராமியை இமைப்போது சிந்திப்பவருக்குப் பிறவித் துன்பமில்லையென்பதாம்.

(வி-ரை.) சுடர்தல்-விளங்குதல். சடைமுடி-சடாமகுடம். எய்துவரோவென்னு மோகாரம் எதிர்மறை. இடரும் பின்னும் இவ்வும்மைகள் எதிரதுதழீஇநின்றன. ஏ - அசை. (சஅ)

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே.

(ப-ரை.) நரம்பை அடுத்த - தந்தியைச்சார்ந்த, இசை வடிவாய் - நாதரூபமாய், நின்ற நாயகியே - இருக்கும் அம்மையே, குரம்பை அடுத்து - (உடலாகிய) குடிலையடுத்து, குடி புக்க - குடிபுகுந்த, ஆவி - உயிரை, வெங்கூற்றுக்கு-கொடிய இயமனுக்கு, இட்ட வரம்பு-ஏற்படுத்திய அளவில், அடுத்து-அவன்கிட்டி (வருத்த), மறுகும் அப்போது - அது வருந்துங்காலத்தில், வளைக்கை - வளையலை அணிந்த கையால், அமைத்து - அவனை வாராமற்றடுத்து, அரம்பை அடுத்த - வாழையை ஒத்த(தொடைகளையுடைய), அரிவையர் - பாங்கியர், சூழ - சுற்றிவர, வந்து - என்முன்வந்து, அஞ்சல் என்பாய் - அஞ்சாதேயென்று சொல்வாயாக, எ-று.

(பொ-ரை.) தந்தியைச்சார்ந்த நாதரூபமாய் இருக்கும் அம்மையே! (உடலாகிய) குடிலையடுத்துக் குடிபுகுந்த உயிரைக் கொடிய இயமனுக்கு ஏற்படுத்திய அளவில் அவன் கிட்டி (வருத்த) அது வருந்துங் காலத்தில் வளையலை அணிந்த கையால் அவனை வாராமற்றடுத்து வாழை

யை ஒத்த (தொடைகளையுடைய) பாங்கியர் சுற்றிவர என்முன்வந்து அஞ்சாதேயென்று சொல்வாயாக என்றவாறு.

(க-ரை.) அம்பா இயமன் வருங்காலத்தில் அஞ்சேலென்பாயாக என்பதாம்.

(வி-ரை.) மறுகுதல் - மயங்குதல் எனினுமாம். அரம்பையடுத்த என்பதற்குத் தெய்வப்பெண்ணை நிகர்த்த என்றுரைத்தலுமாம். (சகூ)

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சக்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி லாதி யுடையாள் சரண மரணமக்கே.

(ப-ரை.) நாயகி - பார்வதியென்றும், நான்முகி - நான்முகியென்றும், நாராயணி - நாராயணியென்றும், கை நளினம்-கைத்தாமரைமலரில்கொண்ட, பஞ்சசாயகி - பஞ்சபுஷ்பபாணத்தை யுடையவளென்றும், சாம்பவி - சாம்பவியென்றும், சக்கரி - சக்கரத்தையுடையவளென்றும், சாமளை - சாமளையென்றும், சாதி - நல்ல, நச்சு-விஷம் பொருந்திய, வாய் - வாயையுடைய, அகிமாலினி - சர்ப்பாபரணத்தையுடையவளென்றும், வாராகி - வாராகியென்றும், சூலினி - சூலினியென்றும், மாதங்கி-மாதங்கியென்றும் (பெயரையுடைய), என் தாய்-என் அன்னை, அகிலாதி உடையாள் - உலகமுதலியவைகளையுடையவள் (அவளுடைய), சரணம் - திருவடி, நமக்கு - (மனமே) நமக்கு, அரண் - அடைக்கலஸ்தானமாம், எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) பார்வதியென்றும் நான்முகியென்றும் நாராயணியென்றும் கைத்தாமரைமலரில்கொண்ட பஞ்சபுஷ்பபாணத்தையுடையவளென்றும் சாம்பவியென்றும் சக்கரத்தையுடையவளென்றும் சாமளையென்றும் நல்ல விஷம்பொருந்திய வாயையுடைய சர்ப்பாபரணத்தையுடையவளென்றும் வாராகியென்றும் சூலினியென்றும் மாதங்கியென்றும் (பெயரையுடைய) என் அன்னை உலகமுதலியவைகளை

யுடையவள் (அவளுடைய), திருவடி (மநமே) நமக்கு அடைக்கல ஸ்தானமாம் என்றவாறு.

(க-ரை.) அம்மன் றிருவடிகள் நமக்கு அடைக்கலஸ்தான மென்பதாம்.

(வி-ரை.) சாயகம் - பாணம், அதனையுடையவள் சாயகி. அகி - பாம்பு, மாலினி - மாலையையுடையவள். சூலினி - சூலத்தையுடையவள், நஞ்சு: நச்சு என வலித்தல் பெற்றது. அரண் - காவலுமாம்.(ருப)

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே.

(ப-ரை.) அரணம்-தம் கோட்டையே, பொருள் என்று-விசேஷித்த பொருளென்றெண்ணி, அருள் ஒன்றிலாத - கிருபை கொஞ்சமுமில்லாத, அசுரர்தங்கள் - திரிபுராசுரரின், முரண் - வலி, அன்று - முன்பு, அழிய - கெட, முனிந்த - கோபித்தெரித்த, பெம்மானும் - சிவபெருமானும், முகுந்தனும்-விஷ்ணுவும், சரணம்-உன் றிருவடியே, சரணம் என - அடைக்கலமென்று வேண்ட, நின்ற - இருந்த, நாயகி தன் - அம்மையின், அடியார் - அடியவர்கள், இந்த வையகத்து - இந்த உலகத்தில், மரணம் - இறப்பும், பிறவி - பிறப்பும், இரண்டும்-ஆகிய இரண்டையும், எய்தார் - அடையார்கள். எ-று. ஏகாரங்கள் - அசை.

(பொ-ரை.) தம்கோட்டையே விசேஷித்த பொருளென்றெண்ணிக் கிருபை கொஞ்சமுமில்லாத திரிபுரர்சுரரின் வலி முன்புகெட கோபித்தெரித்த சிவபெருமானும்விஷ்ணுவும் உன் றிருவடியே அடைக்கலமென்றுவேண்ட இருந்தஅம்மையின் அடியவர்கள் இந்த உலகத்தில் இறப்பும் பிறப்பும் ஆகிய இரண்டையும் அடையார்கள் என்றவாறு.

(க-ரை.) திரிபுரையின் அடியார்கள் சனனமரண துன்பங்களையடையா ரென்பதாம்.

(வி-ரை.) அரணம் பொருள் என்பதற்கு அரணனது அழகிய பொருள் என்றுரைத்தலுமாம். எய்தல் - அடைதல். (ருக)

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
ஐயன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

(ப-ரை.) வையம் - இரதமும், துரகம் - குதிரையும், மதகரி - மதம்பொழிகின்ற யானையும், மா மகுடம்-பெரிய கிரீடமும், சிவிகை- பல்லக்கும், பெய்யும் - கொடுக்கின்ற, கனகம் - பொன்னும், பெரு விலை - மிக்கவிலையுள்ள, ஆரம் - பதக்கமுதலிய பணிகளுமாகிய இவை கள், பிறை - பிறையை, முடித்த - தரித்த, ஐயன் - பரமசிவனுடைய, திருமனையாள் - திருமனையாட்டியின், அடித்தாமரைக்கு - பாததாம ரைக்கு, முன்பு அன்பு செய்யும் - முப்பிறப்பி லன்புசெய்த, தவமுடை யார்க்கு - தவத்தையுடையவர்க்கு, உளவாகிய - உண்டாகிய, சின்னங் கள் - அடையாளங்களாம், எ-று. ஏ-அசை.

(பொ-ரை.) இரதமும் குதிரையும் மதம்பொழிகின்ற யானையும் பெரியகிரீடமும் பல்லக்கும் கொடுக்கின்ற பொன்னும் மிக்க விலை யுள்ள பதக்கமுதலிய பணிகளுமாகிய இவைகள் பிறையைத் தரித்த பரமசிவனுடைய திருமனையாட்டியின் பாததாமரைக்கு முற்பிறப்பி லன்புசெய்த தவத்தையுடையவர்க்கு உண்டாகிய அடையாளங்களாம் என்றவாறு.

(க-ரை.) அரசுரிமையுடையோர் அபிராமியம்மனுக்கு முற்பிறப் பில் அன்புசெய்தவர்க ளென்பதாம்.

(வி-ரை.) துரகம் - குதிரை, இது வடசொல். மதகரி: வட மொழிச்சந்தியாதலால் இயல்பாயிற்று. சிவிகை - ஶிபிகா என்னும் வடசொற்றிரிபு. ஐயன் என்பதற்கு அழகனென்றும் தலைவனென் றும் பொருள் கூறலாம். சின்னம்: சிந்ஹம் என்னும் வடசொற்றிரிபு.

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே.

(ப-ரை.) (தேவியின்) சின்னம் சிறிய - மிகவுஞ் சிறுத்த, மருங்கினில் - இடையினில், சாத்திய - தரித்த, செய்ய - சிவந்த, பட்டும் - பட்டுவஸ்திரத்தையும், பென்னம் பெரிய - மிகவும் பெருத்த, முலையும்-தனத்தையும், முத்தாரமும்-முத்துவடத்தையும், பிச்சி மொய்த்த - சாதிமல்லிகைமலர் நெருங்கிய, கன்னங்கரிய-மிகவுங்கறுத்த, குழலும்-கூந்தலையும், கண் மூன்றும்-மூன்று கண்களையும், கருத்தில் வைத்து-மனதில்வைத்து, தன்னந்தனி - ஒன்றியாக, இருப்பார்க்கு - இருந்து தவஞ்செய்யும் யோகிகளுக்கு, இதுபோலும் - இதையொத்த, தவம் இல்லை - (வேறு) தவமில்லை, எ-று. ஏ—அசை.

(பொ-ரை.) மிகவுஞ் சிறுத்த இடையினில் தரித்த சிவந்த பட்டு வஸ்திரத்தையும் மிகவும் பெருத்த தனத்தையும் முத்துவடத்தையும் சாதிமல்லிகைமலர் நெருங்கிய மிகவுங் கறுத்த கூந்தலையும் மூன்று கண்களையும் மனதில்வைத்து ஒன்றியாக இருந்து தவஞ்செயும் யோகிகளுக்கு இதையொத்த (வேறு) தவமில்லை என்றவாறு.

(க-ரை.) அம்மன் திருவுருவத்தைச் சிந்திப்பதைப்பார்க்கிலும் வேறு தவமில்லை யென்பதாம்.

(வி-ரை.) தன்னந்தனி - மிகுதனிமை (ஏகாந்தம்). தவம்: தபஃ என்னும் வடசொற்றிரிபு; இதற்கு, பிறவுயிர்களாற் றனக்கு நேரிடுந் துன்பத்தைச் சகித்தலும் தான் பிறவுயிர்களுக்குத் துன்பஞ்செய்யாமையுமாகிய நிலை. இதுவே தபோரூபம் என்பது, "உற்றநோய் நோன்றலுயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற் குரு" என்றார் மேலோரும். (ருஉ)

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

(ப-ரை.) (அன்பர்களே) ஒருவர்தம்பால் - ஒருவரிடத்தில், சென்று - போய், இல்லாமை சொல்லி - (உங்கள்) வறுமையைச் சொல்லி, இழிவுபட்டு - இழிவையடைந்து, நில்லாமை - நில்லாதிருத்தலை, நெஞ்சின் - உங்கள் மனதில், நினைகுவிரேல்-எண்ணுவீராயின், நித்தம் - நாள்தோறும், நீடு தவம் - மிக்கதவத்தை, கல்லாமை - செய்ய விரும்பாமையை, கற்ற - கற்றிருக்கின்ற, கயவர்தம்பால் - கீழ்மக்களிடத்தில், ஒருகாலத்திலும் - எப்போதும், செல்லாமை - செல்லாதபடி, வைத்த - (அன்பருக்கென்று ஏற்படுத்தி) வைத்த, திரிபுரை பாதங்கள்-திரிபுரசுந்தரியின் பாதங்களை, சேர்மின்கள்-அடையுங்கள், எ-று.

(பொ-ரை.) (அன்பர்களே) ஒருவரிடத்தில்போய் உங்கள் வறுமையைச் சொல்லி இழியையடைந்து நில்லாதிருத்தலை உங்கள் மனதில் எண்ணுவீராயின் நாள்தோறும் மிக்க தவத்தைச்செய்ய விரும்பாமையைக் கற்றிருக்கின்ற கீழ்மக்களிடத்தில் எப்போதும் செல்லாதபடி (அன்பருக்கென்று ஏற்படுத்தி) வைத்த திரிபுரசுந்தரியின் பாதங்களை அடையுங்கள் என்றவாறு.

(க-ரை.) அன்பர்களே! திரிபுரையின் திருவடியை வணங்கினீர்களாயின் நீங்கள் வறுமையடையீர்களென்பதாம்.

(வி-ரை.) இழிவுபட்டு நில்லாமை - மேன்மையடைந்துநிற்றல். தவம் கல்லாமை கற்றகயவர் என்றமையால்அவஞ்செய்யக் கற்றகயவர் என்றாயிற்று. ஏகாரம் - அசை. (௫௪)

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு

முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றிலையே.

(ப-ரை.) மின்னாயிரம்-ஆயிரமின்னொளிகூடி, ஒரு மெய்வடிவு ஆகி-ஒப்பற்ற திருமேனியுருவமாகி, விளங்குகின்றது அன்னாள் - பிரகாசிப்பதை நிகர்த்தவள், அகம் மகிழ்-மனமகிழ்கின்ற, ஆனந்தவல்லி - இன்பக்கொடிபோல்பவள், அருமறைக்கும் - அருமையான வேதத்திற்கும், முன்னாய் - முதற்பொருளாகி, நடு - உட்பொருளாகி, முடிவாய - முடிவுப்பொருளாகி; எங்குமாய் - எங்குநிறைந்த பொருளாகியு மிரா நின்ற, முதல்விதன்னை - முதல்வியை, உன்னாதொழியினும் - யாம் நினையாவிடினும், உன்னினும்-நினைப்பினும், வேண்டுவதொன்றிலை - யாம் விரும்பும்பொரு ளொன்றுமில்லை, எ-று.

(பொ-ரை.) ஆயிர மின்னொளிகூடி ஒப்பற்ற திருமேனியுருவமாகிப் பிரகாசிப்பதை நிகர்த்தவள், மனமகிழ்கின்ற இன்பக்கொடி போல்பவள், அருமையான வேதத்திற்கும் முதற்பொருளாகி உட்பொருளாகி முடிவுப்பொருளாகி எங்குநிறைந்த பொருளாகியு மிரா நின்ற முதல்வியை யாம் நினையாவிடினும் நினைப்பினும் யாம் விரும்பும் பொருளொன்றுமில்லை என்றவாறு.

(க-ரை.) நீ இப்போதுதானே வேண்டும்வரம் வேண்டுக வென்பதாம்.

(வி-ரை.) 'மின்னாயிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற தன்னாள்' என்றதனால் தேவியின் திருமேனியொளி யித்தன்மைத்தென்ப தினிது விளங்கிற்று. முதல்வி தன்னை யென்பதில் தன் சாரியை. 'உன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றிலையே' என்றது எல்லாம் அவள் திருவுளப்படியே நிகழும் என்றபடி. (௫௫)

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே

பொன்ருது நின்று புரிகின்ற வாறிப் பொருளறிவார்
அன்று லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே.

(ப - ரை.) ஒன்ருயரும்பி - ஏகரூபமான சமஷ்டிவடிவாகியும், பலவாய் - அநேகரூபமாய், விரிந்து - பாவியும், இவ்வுலகு எங்குமாய் - இவ்வெல்லாவுலகங்களாயும், நின்ருள் - கலந்துநின்றவள், அனைத்தையும்-எல்லாவற்றையும், நீங்கி நிற்பாள் - நீங்கிநிற்பவள், என்றன் நெஞ்சினுள் - என்னுடைய மனதில், பொன்ருது நின்று-நீங்காமனின்று, புரிகின்றவாறு - அனுக்கிரகிக்கின்ற விதமாகிய, இப்பொருள் - இந்த உண்மைப்பொருளை, அறிவார் - அறிபவர் (யாரெனின்), அன்று - சலப்பிரளயகாலத்தில், ஆலிலையில்-ஆலிலையின்மேல், துயின்ற-யோகநித்திரைசெய்த, பெம்மானும் - திருமாலும், என் - என்னுடைய, ஐயனுமே - பிதாவாகிய பரமசிவனுமேயாவர், எ - று.

(பொ-ரை.) ஏகரூபமான சமட்டிவடிவாகியும் அநேகரூபமாய்ப் பாவியும் இவ்வெல்லாவுலகங்களாயும் கலந்துநின்றவள் எல்லாவற்றையும் நீங்கிநிற்பவள் என்னுடைய மனதில் நீங்காமனின்று அனுக்கிரகிக்கின்ற விதமாகிய இந்த உண்மைப்பொருளை அறிபவர் (யாரெனின்), சலப்பிரளயகாலத்தில் ஆலிலையின்மேல் யோகநித்திரைசெய்த திருமாலும் என்னுடைய பிதாவாகிய பரமசிவனுமேயாவர் என்றவாறு.

(க-ரை.) அபிராமி என்மனதிலனுக்கிரகிக்கும் பொருளைத் திருமாலும் சிவபெருமானுமன்றிப் பிறரறியாரென்பதாம்.

(வி-ரை.) சமஷ்டி-சமுதாயம். புரிதல்-அநுக்ரஹித்தல். ஆலிலையிற்றுயின்ற பெம்மான் - வடபத்ரஶாயி (திருமால்). ஈற்றேகாரம் பிரிநிலை, தேற்றம் எனினுமாம். (௫௬)

ஐப னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லாம்
உய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே.

(ப-ரை.) ஐயன் - பரமசிவன், அளந்தபடி-அளந்துகொடுத்தபடியே, இரு நாழிகொண்டு - இருநாழி நெல்லைக்கொண்டு, அண்டம் எல்லாம் - அநேக அண்டங்களிலுமுள்ள சீவகோடிகள், உய்ய - பிழைக்கும்படி, அறம் செயும் - அறங்களைச்செய்யும், உன்னையும் - உன்றனையும், போற்றி - (பாமாலைசூட்டி) வணங்கி, ஒருவர்தம்பால் - மற்றொருவரிடத்தில், செய்ய - செவ்விதாகிய, பசுந்தமிழ்-பசுமையாகிய தமிழாற்செய்த, பாமாலையுங்கொண்டு - பாமாலையுங்கொண்டு, சென்று - போய், பொய்யும் மெய்யும்-பொய்மையும் மெய்யையும் (அவர் மகிழ), இயம்ப - சொல்லும்படி, வைத்தாய் - வைத்தனை, இதுவோ - இதுதானு, உன்றன் மெய் அருள்-உன்றன் உண்மையானகிருபை, எ-று.

(பொ-ரை.) பரமசிவன் அளந்து கொடுத்தபடியே இருநாழி நெல்லைக்கொண்டு அநேக அண்டங்களிலுமுள்ள சீவகோடிகள் பிழைக்கும்படி அறங்களைச்செய்யும் உன்றனையும் (பாமாலைசூட்டி) வணங்கி மற்றொருவரிடத்தில் செவ்விதாகிய பசுமையாகிய தமிழாற்செய்த பாமாலையுங் கொண்டுபோய்ப் பொய்யையும் மெய்யையும் (அவர் மகிழ) சொல்லும்படி வைத்தனை, இதுதானு உன்றன் உண்மையான கிருபை என்றவாறு.

(க-ரை.) மனிதரைப் பாடாமலிருக்கும்படி என் வறுமையை நீக்குக என்பதாம்.

(வி-ரை.) 'ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லாம், உய்ய வறஞ்செயு முன்னையும்' என்றது திருக்கச்சியிற் காமகோட்டத்தி லெழுந்தருளி இறைவியாகிய காமாக்ஷி செய்யும் முப்பத்திரண்டு தருமங்களைக் குறித்தது. முப்பத்திரண்டு தருமங்களாவன, அடியில் வரைந்துள்ள செய்யுட்களானுணர்க. இதுவோவென்னு மோகாரம் எதிர்மறை. (ருஎ)

"வண்ணான்புன்னா விதன்காதோலைசேநலைமடந்தடம்வெண்
சுண்ணாம்பறவைப்பிணஞ்சுடறூரியஞ்சோறளித்தல்

கண்ணுடியாவிற்குறிஞ்சுகல்வாயுறைகண்மருந்து
தண்ணீர்ப்பந்தல்தலைக்கெண்ணெய்பெண்போகந்தரலையமே, (க)

மேத்குமாதுலர்க்குச்சாலையேறுவிடுத்தல்கலை
யோதுவர்க்குண்டிவிலங்கிற்குணவோடுயர்பிணிநோய்க்
கீதல்மருந்துசிறைச்சோறளித்தவியல்பிறர்தம்
மாதுயர்காத்தனற்கன்னியர்தானம்வழங்கலுமே. (உ)

கற்றவறுசமயத்தோர்க்குணவுசருதும்விலை
யுற்றதளித்துயிர்மீட்டல்சிறுருக்குதவனற்பால்
மற்றுமகப்பெறுவித்தல்சிறுரைவளர்த்தலெனப்
பெற்றவிவற்றினையெண்ணன்கறமெனப்பேசுவரே." (ங)

அருணம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனம் புயமுங் கராம்புயமும்
சரணம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே.

(ப-ரை.) அருணம் - சிவந்த, அம்புயத்தும் - தாமரைமலரினும், என் - என்னுடைய, சித்தாம்புயத்தும் - இதயகமலத்தினும், அமர்ந்திருக்கும்-பொருந்தியிருக்கின்ற, தருணம்புயம் - மலரும் பருவத்துத் தாமரை அரும்பையொத்த, முலை - தனங்களையுடைய, தையல் நல்லாள் - பெண்கள்சிகாமணியின், தகை சேர் - அழகுபொருந்திய, நயனம் - கண்களாகிய, கருணம்புயமும் - கிருபைபொருந்திய தாமரை மலரும், வதனம் - முகமாகிய, அம்புயமும் - தாமரைமலரும், கராம் புயமும் - கைகளாகிய தாமரைமலரும், சரணம்புயமும் - பாதங்களாகிய தாமரைமலரும், அல்லால் - அல்லாமல், ஒரு தஞ்சமும் - ஓரடைக்கலஸ்தானமும், கண்டிலேன் - (நான்) காண்கிலேன், எ-று.

(பொ-ரை.) சிவந்த தாமரைமலரினும் என்னுடைய இதயகமலத்தினும் பொருந்தியிருக்கின்ற மலரும்பருவத்துத் தாமரை அரும்பை

யொத்த தனங்களையுடைய பெண்கள்சிகாமணியின் அழகுபொருந்திய கண்களாகிய கிருபைபொருந்திய தாமரைமலரும் முகமாகிய தாமரை மலரும் கைகளாகிய தாமரைமலரும் பாதங்களாகிய தாமரைமலரும் அல்லாமல் ஓரடைக்கலஸ்தானமும் நான் கண்டிலேன் என்றவாறு.

(க-ரை.) அபிராமியே எனக்கடைக்கல ஸ்தானமாம் என்பதாம்.

(வி-ரை.) அருணம் - செந்நிறம். சித்தம் - இதயம். தருணம் - பருவம். தையனல்லாள் என்றது அபிராமிதேவியை. கரம் - கை. சரணம் - பாதம். தஞ்சம் - பற்றுக்கோடு (ஆதரவு). ஏ-அசை. (௫அ)

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனொற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே.

(ப-ரை.) தஞ்சம் - அடைக்கலம், ஈதல்லது - (உன்னைக்குறித்துச்செய்யும்) தவநெறியல்லாது, பிறிது - வேறு, இல்லை என்று - இல்லையென்று, உன் தவநெறிக்கே - உன் தபோமார்க்கத்திற்கே, நெஞ்சம் - மனது, பயில - பொருந்த, நினைகின்றிலேன் - நினைந்தேனல்லேன்; ஒற்றை - ஒன்றாகிய, நீள் - நீண்ட, இக்கு சிலையும் - கருப்பு வில்லையும், அலர் - புஷ்பமாகிய, அஞ்சு அம்பும்-பஞ்சபாணத்தையும், ஆக நின்றாய் - உன்கையினதாக (எங்களை வருத்தும்படி) நின்றாய், பஞ்சு - பஞ்சுக்கு, அஞ்சும் - பயப்படுகின்ற, மெல்லடியார் - மிருதுவான அடிகளையுடைய (பூலோகஸ்த்ரீகள்), அறியார் எனினும் - பேதையராயினும், பெற்ற பாலரை - (தாம்) பெற்ற புதல்வரை, அடியார் - வருத்தார் (எல்லாமறிந்த நீ வருத்துவது நன்றன்று), எ-று.

(பொ-ரை.) அடைக்கலம் (உன்னைக்குறித்துச் செய்யும்) தவநெறி யல்லாது வேறு இல்லையென்று உன் தபோமார்க்கத்திற்கே மனது பொருந்த நினைந்தேனல்லேன், ஒன்றாகிய நீண்ட கருப்புவில்லையும் புஷ்பமாகிய பஞ்சபாணத்தையும் உன் கையினதாக (எங்களை வரு

த்தும்படி) நின்றாய், பஞ்சுக்குப் பயப்படுகின்ற மிருதுவான அடிகளை யுடைய (பூலோகஸ்த்ரீகள்) பேதையராயினும் தாம்பெற்ற புதல்வரை வருத்தார் (எல்லாமறிந்த நீ வருத்துவது நன்றன்று) என்றவாறு.

(க-ரை.) எங்களை மன்மதனால் வருத்தஞ் செய்வது நன்றல்ல வென்பதாம்.

(வி-ரை.) இக்கு: இக்ஷு என்னும் வடசொற்றிரிபு. 'பஞ்சஞ்சு மெல்லடியார்' என்றதனால் பாதங்களின் மென்மைத்தன்மையின் மிகுதி விளங்குகின்றது. ஏ-அசை. (௬௧)

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே.

(ப-ரை.) பாலினும் - பாலைப்பார்க்கிலும், சொல் இனியாய் - இனிய சொல்லையுடையவளே, பனி - குளிர்ந்த, மா - பெருமைபொருந்திய, மலர்ப்பாதம் வைக்க - பாததாமரைகளை வைப்பதற்கு, அடியேன் - அடிமையாகிய எனது, முடை - நாற்றத்தையுடைய, நாய்த்தலை - நாய்த்தலையையொத்த (என்றலை), மாலினும் - திருமால்தலையினும், தேவர் - தேவகூட்டங்கள், வணங்கநின்றோன் - தொழும்படி நின்ற பரமசிவனுடைய, வார் - நீண்ட, கொன்றை - கொன்றைமாலை யணிந்த, சடையின்மேலினும் - சடாபாரத்தினும், கீழ் நின்று - பரமசிவன்றிருவடியின்கீழ்ப் பாதுகையாகநின்று, பாடும் - அவரைத்துதிக்கின்ற, வேதங்கள் - வேதங்களாகிய, ஒரு - ஒப்பற்ற, மெய் - உண்மை பொருந்திய, பீடம் நாலினும் - நான்கு பீடங்களினும், சால - மிகவும், நன்றோ - மேன்மையானதோ (சொல்), எ-று.

(பொ-ரை.) பாலைப்பார்க்கிலும் இனிய சொல்லையுடையவளே! குளிர்ந்த பெருமைபொருந்திய பாததாமரைகளை வைப்பதற்கு அடிமை

யாகிய எனது நாற்றத்தையுடைய நாய்த்தலையையொத்த (என்றலை) திருமால் தலையினும் தேவகூட்டங்கள் தொழும்படிநின்ற பரமசிவனுடைய நீண்ட கொன்றைமாலையணிந்த சடாபாரத்தினும் பரமசிவன் றிருவடியின்கீழ்ப் பாதுகையாகநின்று அவரைத் துதிக்கின்ற வேதங்களாகிய ஒப்பற்ற உண்மைபொருந்திய நான்குபீடங்களினும் மிகவும் மேன்மையானதோ (சொல்) என்றவாறு.

(க-ரை.) தேவர்களுக்கு மெட்டாத உன்திருவடி என்றலையில் வைக்கக்கிடைத்த என்புண்ணியம் நன்றென்பதாம்.

(வி-ரை.) மால்: ஆகுபெயர். தலை நன்றேவென முடிந்தது. நன்றேவென்னு மோகாரம் எதிர்மறை. (கூo)

நாயேனையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண்டாய் நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மாறிருத் தங்கைச்சியே.

(ப-ரை.) தாயே - அன்னையே, மலைமகளே - பர்வதராஜன் புத்திரியே, செங்கண் - சிவந்த கண்களையுடைய, மால் - திருமாலின், திரு தங்கைச்சியே - சிறந்த தங்கையே, நாயேனையும் - நாய்போன்ற என்னையும், இங்கு - இவ்வுலகத்தில், ஒரு பொருளாக - ஒரு பொருளாக, நயந்து - விரும்பி, வந்து - வந்து, நீயே - நீயே, நினைவின்றி - நினைவில்லாமல், ஆண்டுகொண்டாய் - தடுத்தாட்கொண்டனை (அதுவுமன்றி), நின்னை - உன்னை, உள்ளவண்ணம் - உள்ளபடி, பேயேன் - பேய்போன்றநான், அறியும் அறிவு-அறிந்துகொள்ளு முணர்வையுங், தந்தாய் - கொடுத்தனை, என்ன பேறுபெற்றேன் - நான் என்ன பேறு பெற்றேன், எ-று.

(பொ-ரை.) அன்னையே! பர்வதராஜன் புத்திரியே! சிவந்த கண்களையுடைய திருமாலின் சிறந்த தங்கையே! நாய்போன்ற என்னையும் இவ்வுலகத்தில் ஒருபொருளாக விரும்பிவந்து நீயே நினைவில்லாமல்

தடுத்தாட்கொண்டனை, (அதுவுமன்றி) உன்னை உள்ளபடி பேய்போன்ற நான் அறிந்துகொள்ளுமுணர்வையும் கொடுத்தனை, நான் என்ன பேறுபெற்றேன் என்றவாறு.

(கு-ரை.) அன்னையே! மார்ஜால நியாயம்போல நீயே தடுத்தாட்கொள்ளும்படி நானென்ன தவஞ்செய்தே னென்பதாம்.

(வி-ரை.) நாயேனையும் என்றவும்மை இழிவுசிறப்பு. நயத்தல்-விரும்புதல். பேறு - பயன். 'தாயே மலைமக ளேசெங்கண் மாறிருத் தங்கைச்சியே' என்றது வியத்தற்குக் காரணமாதலறிக. (சுக)

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனதச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே.

(ப-ரை.) தங்கச்சிலை - (மகமேருவாகிய) வில்லை, கொண்டு - கையிற்கொண்டு, தானவர் - திரிபுராதிகளின், முப்புரம் - திரிபுரத்தை, சாய்த்து - எரித்து, மதம் - மதம்பொழியாநின்ற, வெங்கண் - கோபக் கண்ணையுடைய, கரியுரி - யானைத்தோலை, போர்த்த - தரித்த, செஞ் சேவகன் - செவ்விதாகிய வீரம்பொருந்திய பரமசிவனுடைய, மெய் அடைய - தேகத்தைப்பொருந்த, குரும்பை - தென்னங்குரும்பையொத்த, கொங்கை - குசத்தினது, குறியிட்ட - அடையாளமிட்ட, நாயகி - அம்மையே (யுனது), கோகனதம் - தாமரைமலரையொத்த, செங்கை - சிவந்த கையிற்றாங்கிய, கரும்பும் - கருப்புவில்லும், மலரும் - புஷ்ப பாணமும், எப்போதும் - எக்காலத்திலும், என் சிந்தைய - என்மனதின் கணுள்ளன, எ-று.

(பொ-ரை.) (மகமேருவாகிய) வில்லைக் கையிற்கொண்டு திரிபுராதிகளின் திரிபுரத்தை எரித்து மதம்பொழியாநின்ற கோபக்கண்களையுடைய யானைத்தோலைத் தரித்த செவ்விதாகிய வீரம்பொருந்திய பரமசிவனுடைய தேகத்தைப்பொருந்த தென்னங்குரும்பையொத்த

குசத்தினது அடையாளமிட்ட அம்மையே (யுனது) 'தாமரைமலரை யொத்த சிவந்தகையிற்றாங்கிய கருப்புவில்லும் புஷ்பபாணமும் எக்காலத்திலும் என்மனதின்கண்ணுள்ளன என்றவாறு.

(க-ரை.) எப்போதும் அம்மனுடைய கருப்புவில்லும் புஷ்ப பாணமும் என்மனதின்கணுள்ளன வென்பதாம்.

(வி-ரை.) சாய்த்தல் ஈண்டெரித்தன்மேற்று. தானவர்-தநுபுத்ரர். நாயகி: அண்மைவிளி. மேருமலை தங்கத்தானியன்றதாதலால் அதனை 'தங்கச்சிலை'என்றார்."தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்து மத, வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக், கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி' என்றது, சிவலிங்க பூஜாகாலத்தில் வந்த கம்பாநதிப்பெருக்குக்கஞ்சிச் சிவலிங்கத்தைத் தழுவி முலைத் தழும்பும் வளைத்தழும்பும் சிவலிங்கப்பெருமானுக் குண்டாக்கின வரலாற்றைக் குறித்தது. (சுஉ)

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமயம்
ஆறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.

(ப-ரை.) குறிக்கும்-வேதாகமங்களாற் குறித்துச்சொல்லப்பட்ட, சமயம் ஆறும்-ஆறுசமயங்களுக்கும், தலைவி - நாயகி, இவளாய் இருப்பது - இவ்வபிராமியாகவிருப்பதை, அறிந்திருந்தும் - யாவரும் அறிந்திருந்தும், சமயம் - சமயங்கள், வேறுமுண்டென்று - வேறும், இருக்கின்றனவென்று, கொண்டாடிய - பரவுகின்ற, வீணருக்கு - வீண் செயலையுடையவர்களுக்கு, முன் - இனி, செல் கதிக்கு - (அவர்கள்) அடையும் நற்கதிக்கு (வகை), தேறும்படி - அறியும்படி, சில ஏதுவும் காட்டி-சிலகாரணங்களையும் தெரியக்காட்டி, கூறும்-(அவர்க்குச்) சொல்லும், பொருள் - நற்போதனை (எதுபோலுமெனின்), குன்றில்-கன்மலையில், கொட்டும்-கடாவிய, தறி - மரஆப்பை (ஒக்கும்) என்று.

(பொ-ரை.) வேதாகமங்களாற் குறித்துச் சொல்லப்பட்ட ஆறு சமயங்களுக்கும் நாயகி இவ்வபிராமியாக விருப்பதை யாவரும் அறிந்திருந்தும் சமயங்கள் வேறும் இருக்கின்றனவென்று பரவுகின்ற வீண் செயலை யுடையவர்களுக்கு இனி (அவர்கள்) அடையும் நற்கதிக்கு (வகை) அறியும்படி சில காரணங்களையும் தெரியக்காட்டி (அவர்க்குச்) சொல்லும் நற்போதனை (எதுபோலுமெனின்) கன்மலையில் கடாவிய மரஆப்பை ஒக்கும் என்றவாறு.

(க-ரை.) மூடருக்குச் சொல்லு முபதேசம் பயன்படா தென்பதாம்.

(வி-ரை.) செல்கதியென்றது முத்தியை. தறி: பெயர்ப்பயனிலையாதலால் ஒக்கும் என்னும்சொல் வருவித்து முடிக்கப்பட்டது. (சுரு)

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே.

(ப-ரை.) வீணே-வீணாக, பலி கவர் - பலிகொள்ளுகின்ற, தெய்வங்கள்பால் - தேவதைகளிடத்தில், சென்று - போய், மிக்க அன்பு - மிகுந்தபக்தி, பூணேன் - செய்யேன்; உனக்கு - உன்றனுக்கு, அன்பு - பக்தியை பூண்டுகொண்டேன் - செய்ய உறுதிகொண்டேன்; நின் - உன்னுடைய, புகழ்ச்சிஅன்றி - புகழ்ச்சியேயல்லாமல்(வேறொன்றை), பேணேன் - கொண்டாடேன்; ஒருபொழுதும் - எப்பொழுதும், திருமேனி - உன்திருமேனியின், பிரகாசம் அன்றி-ஒளியையேயல்லாமல், இரு நிலமும்-பெரிய பூமியிலுள்ளவைகளையும், திசை நான்கும்-நான்கு திசைகளிலுள்ளவைகளையும், ககனமும் - ஆகாயத்திலுள்ளவைகளையும், காணேன் - பார்க்கமாட்டேன், எ-று.

(பொ-ரை.) வீணாகப் பலிகொள்ளுகின்ற தேவதைகளிடத்தில் போய் மிகுந்தபத்தி செய்யேன்; உன்றனுக்கு பக்தியை செய்ய உறுதி

கொண்டேன்; உன்னுடைய புகழ்ச்சியேயல்லாமல் (வேறொன்றைக்) கொண்டாடேன்; எப்பொழுதும் உன்றிருமேனியின் ஒளியையேயல்லாமல் பெரிய பூமியிலுள்ளவைகளையும் நான்கு திசைகளிலுள்ளவைகளையும் ஆகாயத்திலுள்ளவைகளையும் பார்க்கமாட்டேன் என்றவாறு.

(க-ரை.) நான் வேறு தெய்வங்களைத்தொழுவதும் மற்றைப்பொருள்களைப் பார்ப்பதுமில்லையென்பதாம்.

(வி-ரை.) வீணே பலிகவர் தெய்வங்கள் என்றது க்ஷுத்ரதேவதைகளை; "சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்" என்பது இக்கருத்தைப்பற்றி யெழுந்தது. பால்: ஏழனுருபு. பூணல் - ஈண்டுச் செய்தலின்மேற்று. இருமை-பெருமை. (சுச)

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

(ப-ரை.) வல்லி - கொடிபோன்றவளே, ககனமும் - அண்டங்களும், வானும் - தேவலோகமும், புவனமும் - பூலோகமுமாகிய விவற்றிலுள்ளன, காண - காணும்படி, வில் - கருப்புவில்லைத்தாங்கிய, காமன் - மன்மதனுடைய, அங்கம் - தேகத்தை, முன் - பூர்வத்தில், தகனஞ்செய்த - (நெற்றிக்கண்ணு) லெரித்த, தவம் - தவத்தினையுடைய, பெருமாற்கு - பரமசிவனுக்கு, முந்நான்கு - பன்னிரண்டாகிய, தடக்கையும் - நீண்டகரங்களும், இரு மூன்று - ஆறாகிய, செம் முகனும் - செவ்விதாகிய முகங்களும், எனத் தோன்றிய - எனக்காணப்பட்ட, மூதறிவின் - பேரறிவுடைய, மகன் - புத்திரன், உண்டாயதன்றே - உண்டானதல்லவா, நீ செய்த வல்லபம் - நீ செய்தவல்லமை, எ-று.

(பொ-ரை.) கொடிபோன்றவளே! அண்டங்களும் தேவலோகமும் பூலோகமுமாகிய விவற்றிலுள்ளன காணும்படி கருப்புவில்லைத்

தாங்கிய மன்மதனுடைய தேகத்தைப் பூர்வத்தில் (நெற்றிக்கண்ணு) லெரித்த தவத்தினையுடைய பரமசிவனுக்குப் பன்னிரண்டாகிய நீண்ட கரங்களும் ஆறுகிய செவ்விதாகிய முகங்களும் எனக் காணப்பட்ட பேரறிவுடைய புத்திரன் உண்டானதல்லவா நீசெய்த வல்லமை என்ற வாறு.

(க-ரை.) தவசியாகிய பரமசிவனை, நீ இல்லறத்தானுக்கினை யென்பதாம்.

(வி-ரை.) வல்லி: அண்மைவிளி. ககனம் வான் புவனம் என்பன அவற்றிலுள்ள வுயிர்களுக்காயிற்று. முகனும் என்பது இறுதிப்போலி. உம்: உயர்வுசிறப்பும்மை. ஏ-அசை. (சுஙு)

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே.

(ப-ரை.) பசும் - பசுமையாகிய, பொன் பொருப்பு-மகம்மேரு வாகிய, வில்லவர் தம்முடன் - வில்லையுடைய சிவபெருமானுடன், வீற்றிருப்பாய் - கூடியிருப்பவளே, சிறியேன் - சிறியேனாகிய நான், வல்லபம் ஒன்று - வல்லபமுள்ள வொருசெய்லை, அறியேன் - அறிந் திலேன்; நின் மலரடி-நின் பாதாம்புயமான, செம் - சிவந்த, பல்லவம் அல்லது - தளிர்களையல்லது, ஒன்றில் பற்று இலேன்-வேறொன்றி லன்பிலேன்; வினையேன்-தீவினையுடையயான், தொடுத்த-(பாமாலை யாகத்) தொடுத்த, சொல்-சொல்லானது, அவம் ஆயினும்-குற்றமுள்ள தாயினும், நின் திருநாமங்கள் - உன்னுடைய திருநாமங்களாதலால், தோத்திரம் - துதியேயாம் (பொறுத்தருள்வாயாக), எ-று.

(பொ-ரை.) பசுமையாகிய அழகிய மகம்மேருவாகிய வில்லை யுடைய சிவபெருமானுடன் கூடியிருப்பவளே! சிறியேனாகிய நான் வல்லபமுள்ள வொருசெயலை அறிந்திலேன்; நின்பாதாம்புயமாகிய

சிவந்த தளிர்களையல்லது வேறொன்றி லன்பிலேன்; தீவினையுடைய யான் (பாழ்ங்லையாகத்) தொடுத்த சொல்லானது குற்றமுள்ளதாயினும் உன்னுடைய திருநாமங்களாதலால் துதியேயாம் (பொறுத்தருள் வாயாக) என்றவாறு.

(க-ரை.) யான் புனைந்த பாமாலை குற்றமுள்ளதாயினும் உன் றிருநாமமாகையால் ஏற்றுக்கொள்க வென்பதாம்.

(வி-ரை) பல்லவம்-தளிர். தீவினை - பாவம். தோத்திரம் என்பத னீற்றில் தேற்றேகாரம் தொக்கது. (சுசு)

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின்றோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

(ப-ரை.) தோத்திரம் செய்தும்-(உன்னைத்) துதித்தும், தொழுதும் - பூசித்தும், மின் போலும்-மின்னல்போன்ற, நின் தோற்றம் - உன்றிருவுருவத்தை, ஒரு மாத்திரைப்போதும் - ஒரு மாத்திரைக்காலமாயினும், மனத்தில் வையாதவர் - தரிசித்துச் சிந்திக்காதவருடைய, வண்மை - புகழும், குலம் - குலமும், கோத்திரம் - கோத்திரமும், கல்வி - வித்தையும், குணம் - அழகும், நாளும்-நாளுக்குநாள், குன்றி - குறைந்து, பார் எங்கும் - பூமியிலுள்ள எந்த இடங்களிலும் போய், குடில்கடொறும் - வீடுகடோறும், பாத்திரம் கொண்டு-(பிச்சா) பாத்திரங்கொண்டு, பலிக்கு - பிச்சைக்கு, உழலாநிற்பர் - உழன்று திரிவார்கள், எ-று.

(பொ-ரை.) (உன்னைத்) துதித்தும் பூசித்தும் மின்னல்போன்ற உன்றிருவத்தை ஒரு மாத்திரைக்காலமாயினும் தரிசித்துச் சிந்திக்காதவரின் புகழும் குலமும் கோத்திரமும் வித்தையும் அழகும் நாளுக்குநாள் குறைந்து பூமியிலுள்ள எந்த இடங்களிலும்போய் வீடுகே

டோறும் (பிச்சா) பாத்திரங்கொண்டு பிச்சைக்கு உழன்று திரிவார்கள் என்றவாறு.

(க-ரை.) உன்னை வந்திக்காதவர் நித்திய தரித்திரராவார் என்பதாம்.

(வி-ரை.) "ஆற்ருேடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தமைப், போற்ரு தவர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்தில், சோற்ருவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்றே, ஏற்ருலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பர்களே" என்பதுமது. மாத்திரைப்போது-மக்களியல்பாய் கண்ணிமைக்குங் காலம், அல்லது கைநொடிக்குங் காலம். அகக்குணங்களாகிய சாந்தமுதலியவும் புறக்குணங்களாகிய அழகு முதலியவு மடங்கக் 'குணம்'எனப் பொதுப்படக் கூறிஞர். பார்: பண்பாகுபெயர். குடில்கள் - குடிசைகள் எனினுமாம். (சூஎ).

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

(ப-ரை.) பாரும் - பிருதிவியும், புனலும் - அப்பும், கனலும் - தேயுவும், வெங்காலும் - வெவ்விய வாயுவும், படர் - விசாலமாகிய, விசும்பும் - ஆகாயமுமாகிய பூதங்களும், ஊரும்-பரவுகின்ற, முருகு - கந்தமும், சுவை - ரசமும், ஒளி - ரூபமும், ஊறு - பரிசமும், ஒலி - சத்தமுமாகிய விடயங்களும், ஒன்றுபட - ஒன்ருக, சேரும் - பொருந்திய, தலைவி - நாயகி, சிவகாமசுந்தரி - சிவகாமசுந்தரி யென்னுந் திருநாமமுடையவள் (அவளது), சீறடிக்கு - சிற்றடியை, சாரும் - சேரும், தவம் உடையார் - தவத்தையுடையவர்கள், படையாத-பெருத, தனம் இல்லை-செல்வம் வேருென்றில்லை, எ-று.

(பொ-ரை.) பிருதிவியும் அப்பும் தேயுவும் வெவ்விய வாயுவும் விசாலமாகிய ஆகாயமுமாகிய பூதங்களும் பரவுகின்ற கந்தமும் ரச

மும் ரூபமும் பரிசமும் சத்தமுமாகிய விடயங்களும் ஒன்ருகப்பொருந் திய நாயகி சிவகாமசுந்தரியென்னுந் திருநாமமுடையவள் (அவளது) சிற்றடியைச் சேரும் தவத்தையுடையவர்கள் பெருத செல்வம் வேரென்றில்லை என்றவாறு.

(க-ரை.) அபிராமியின் திருவடியைச் சேர்ந்தவர்க்கு எல்லாப் பொருளும் குறைவில்லை யென்பதாம்.

(வி-ரை.) பாரும் என்று தொடங்கி ஒன்றுபடச் சேருந்தலைவி யென்றதனுல் எல்லாப்பொருள்களும் தேவியினுருவமே யென்றதாயிற்று. சிவகாமசுந்தரி - சிவபெருமானுக்குக் காமமுண்டாக்கவல்ல கட்டழகுடையவள். படையாத தனமில்லை யென்றமையால் எல்லாத் தனமும் படைப்பரென்றதாயிற்று. அடிக்கு-உருபுமயக்கம். (சுஅ)

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

(ப-ரை.) கனம் - மேகத்தினது உருவத்தை, தரும் - காட்டாநின்ற, பூங்குழலாள் - அழகிய கூந்தலையுடைய, அபிராமி - அபிராமியம்மனுடைய, கடைக்கண்கள் - கடாக்ஷங்கள், அன்பர் என்பவர்க்கு - தனது அடியார்களுக்கு, தனம் தரும்-திரவியத்தைக் கொடுக்கும்; கல்வி தரும்-கல்வியைக் கொடுக்கும்; ஒருநாளும்-எந்நாளும், தளர்வு அறியா-சோர்வடையாத, மனம் தரும் - மனதைக்கொடுக்கும்; தெய்வ வடிவும் தரும்-தெய்வ உருவத்தையுங் கொடுக்கும்; நெஞ்சில்-மனதில், வஞ்சம் இல்லா-கபடமில்லாத, இனம் தரும்-(அடியார்) கூட்டத்தையுந்தரும்; நல்லன எல்லாம் தரும் - மற்றும் நல்லனவாகிய எல்லாவற்றையுங் கொடுக்கும், எ-று.

(போ-ரை.) மேகத்தினது உருவத்தைக் காட்டாநின்ற அழகிய கூந்தலையுடைய அபிராமியம்மனுடைய கடாக்ஷங்கள் தனது அடியார்

களுக்குத் திரவியத்தைக் கொடுக்கும், கல்வியைக் கொடுக்கும், எந்நாளும் சோர்வடையாத மனதைக்கொடுக்கும், தெய்வ உருவத்தையுங் கொடுக்கும், மனதில் கபடமில்லாத (அடியார்) கூட்டத்தையுந்தரும், மற்றும் நல்லனவாகிய எல்லாவற்றையுங் கொடுக்கும் என்றவாறு.

(க-ரை.) அபிராமியின் கடாக்ஷத்தினால் சகல நன்மையு முண்டாமென்பதாம்.

(வி-ரை.) உம்மைகள்: உயர்வுசிறப்பு. எல்லாம்: முற்றும்மை, விகாரத்தாற்றொக்கது. ஏகாரங்களிரண்டனுள் முன்னையது பிரிநிலை பின்னையது அசை. கனந்தரும் என்பதில் தரும் என்பதை உவமவுருபாகவுங் கொள்ளலாம். (சுக)

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே.

(ப-ரை.) பண்-இராகம், களிக்கும் - சந்தோஷிக்கின்ற, குரல் - நரம்புபூட்டிய, வீணையும் - வீணையைக்கொண்ட, கையும் - கையையும், பயோதரமும் - ஸ்தனங்களையும், மண் - பூமியிலுள்ளோர், களிக்கும் - சந்தோஷிக்கின்ற, பச்சை வண்ணமும் - பச்சைநிறத்தையும், ஆகி - உடைய உருவமாகி, மதங்கர் குலப்பெண்களில் - பாணர் குலப் பெண்களில், தோன்றிய - உற்பவித்த, எம்பெருமாட்டி - எம்பெருமாட்டியின், பேரழகு - தட்டழகை, கடம்ப அடவியில் - கடம்பவனத்தில், கண் களிக்கும்படி - என் கண்ணானந்திக்கும்படி, கண்டுகொண்டேன் - தரிசித்தேன், எ-று.

(போ-ரை.) இராகஞ் சந்தோஷிக்கின்ற நரம்புபூட்டியவீணையைக் கொண்ட கையையும் ஸ்தனங்களையும் பூமியிலுள்ளோர் சந்தோஷிக்கின்ற பச்சைநிறத்தையும் உடைய உருவமாகிப் பாணர் குலப் பெண்க

ளில் உற்பவித்த எம்பெருமாட்டியின் கட்டழகைக் கடம்பவனத்தில் என்கண்ணுனந்திக்கும்படி தரிசித்தேன் என்றவாறு.

(க-ரை.) கடம்பவனத்தில் அம்மனைப் பாணர் பெண்வடிவமாகத் தரிசித்தேனென்பதாம்.

(வி-ரை.) மதங்கர் குலத்தில் தோன்றினதால் மாதங்கி என்னும் திருநாம முண்டாயிற்று. பயோதரம் - வடசொல்; இதற்குப் பாலைத் தரித்திருப்பதென்பது பொருள். பெருமாட்டிதன் என்பதில் தன் சாரியை. கடம்பவனம் - மதுரை. (எ0)

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பணி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே.

(ப-ரை.) இழவுற்றுநின்ற - (பேரானந்தத்தைப்) போக்கடித்துக்கொண்ட, நெஞ்சே - மனதே, அழகுக்கு - அழகில், ஒருவரும் - தனக்கொருவரும், ஒவ்வாத - ஒப்பாகாத, வல்லி - கொடிபோல்பவள், அருமறைகள் - அருமையாகிய வேதங்கள், பழகி - (பாதுகையாகச்) சேர்ந்திருப்பதால், சிவந்த - செந்நிறமாகிய, பதாம்புயத்தாள் - பாத தாமரையையுடையவள், பனி - குளிர்ச்சிபொருந்திய, மா மதியின் குழவி - பெருமைபொருந்திய இளஞ்சந்திரனை, திரு முடி - சிறந்த சிரசிலணிந்த, கோமளம் - அழகிய, யாமளை - யாமளையென்னுந் திருநாமத்தையுடையவளாகிய, கொம்பு - பூங்கொம்பையொத்தவள், இருக்க - (உனக்கிருமைக்கும் துணையாக) விருக்க, இரங்கேல் - வருந்தாதே, உனக்குஎன்குறை-உனக்கென்ன குறையிருக்கிறது, எ-று.

(பொ-ரை.) (பேரானந்தத்தைப்) போக்கடித்துக்கொண்ட மனதே! அழகில் தனக்கொருவரும் ஒப்பாகாத கொடிபோல்பவள், அருமையாகிய வேதங்கள் (பாதுகையாகச்) சேர்ந்திருப்பதால் செந்நிறமாகிய பாததாமரையையுடையவள், குளிர்ச்சிபொருந்திய பெருமைபொருந்

திய இளஞ்சந்திரனைச் சிறந்த சிரசிலணிந்த அழகிய யாமளையென்னுந் திருநாமத்தையுடையவளாகிய பூங்கொம்பையொத்தவள் (உனக்கிருமைக்குந் துணையாக) விருக்க வருந்தாதே, உனக்கென்ன குறையிருக்கிறது என்றவாறு.

(க-ரை.) மனமே! உனக்கு உமையவள் துணையிருப்பதால் யாதொரு குறையுமில்லை யென்பதாம்.

(வி-ரை.) வல்லி: ஆகுபெயர். கொம்பும் அது. அழகுக்கு: உருபு மயக்கம். இருமை - இம்மை, மறுமை. என்குறை யென்றவினா ஒரு குறையு மில்லையெனப் பொருள்தந்துநின்றது. ஏ. அசை. (எக)

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கில்
நின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

(ப-ரை.) இரு - பெருமைபொருந்திய, நிள் - நீண்ட, விசும்பின் - ஆகாயத்தில்தோன்றிய, மின் - மின்னலுக்கும், குறை காட்டி - குறைவைக்காட்டி, மெலிகின்ற - (அதிலும்) நுட்பமாகிய, நேரிடை - சிறிய இடையினையுடைய, மெல் இயலாய்-மிருதுவாகிய சாயலையுடையவளே, எங்கோன் - எம்பிரானாகிய பரமசிவன், தன் குறை - (ஊடலால்) தனக்குவந்த குற்றத்தை, தீர - நீக்கிக்கொள்ள, சடைமேல் - சடாபாரத்தின்மேல், வைத்த - சூட்டிக்கொண்ட, தாமரை - (பாத) தாமரையை, என் குறை தீர - எனது குற்றந்தீர, ஏத்துகின்றேன் - துதிக்கின்றேன், இனி யான் பிறக்கில் - இன்னமும் யான் பூமியிற் பிறந்தால், நின் குறையே அன்றி - (அது) உன்குறையே யல்லாமல், யார் குறை - யாருடையகுற்றஞ் சொல்வாயாக, எ-று.

(பொ-ரை.) பெருமைபொருந்திய நீண்ட ஆகாயத்தில் தோன்றிய மின்னலுக்கும் குறைவைக்காட்டி (அதிலும்) நுட்பமாகிய சிறிய இடையினையுடைய மிருதுவாகிய சாயலையுடையவளே! எம்பிரானாகிய பரம

சிவன் ஊடலால் தனக்குவந்த குற்றத்தை நீக்கிக்கொள்ள சடாபாரத்தின்மேல் சூட்டிக்கொண்ட பாததாமரையை எனது குற்றந்தீரத் துதிக்கின்றேன், இன்னமும் யான் பூமியிற் பிறந்தால் (அது) உன் குறையேயல்லாமல் யாருடையகுற்றஞ் சொல்வாயாக என்றவாறு.

(க-ரை.) தாயே! நான் உன்னை வணங்கினபின்னும் பூமியிற் பிறந்தால், உலகம் உன்னை நிந்தனைசெய்யும் என்பதாம்.

(வி-ரை.) தாமரை யேத்துகின்றேன் என வியையும். யார் குறையென்னும் வினு நின்குறையேயென வற்புறுத்தற்பொருளது. காண் - ஆராய்ந்துபார் எனினுமாம். காண் : முன்னிலையசையிடைச் சொல்லுமாம். ஏ: அசை. (எஉ)

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே.

(ப-ரை.) வயிரவர் - வைரவர்கள், யாமம் - அர்த்தராத்திரியில், எத்தும்பொழுது - (அம்மனைப்) பூசித்துத் துதிக்கும்பொழுது, திரிபுரைநாமம் - திரிபுரசுந்தரியென்றும் பெயரையுடைய, அம்மை-உமாதேவி (அவர்களுக்கு), தாமம் கடம்பு-கடப்பமாலையும், படை-படுத்தற்குரிய, பஞ்சபாணம் - பஞ்சபுஷ்பபாணமும், தனுக்கரும்பு - கரும்பு வில்லும், சேமம் - இன்பத்தைக் கொடுக்கும்படி, எமக்கென்று-எங்களுக்காக, வைத்த - எற்படுத்திய, திருவடி - திருவடியும், செம் - சிவந்த, கைகள் நான்கு-நான்குகைகளும், செம்மை ஒளி-சிவந்ததேக ஒளியும், ஒன்றோடு இரண்டு-மூன்றாகிய, நயனங்கள் - கண்களுமாகத் தரிசனைகொடுத்தனள், எ-று. ஏ - அசை.

(பொ-ரை.) வைரவர்கள் அர்த்தராத்திரியில் அம்மனைப் பூசித்துத் துதிக்கும்பொழுது திரிபுரசுந்தரியென்னும் பெயரையுடைய உமாதேவி, (அவர்களுக்குக்) கடப்பமாலையும் படுத்தற்குரிய பஞ்சபுஷ்ப

பாணமும் கரும்பு வில்லும் இன்பத்தைக் கொடுக்கும்படி எங்களுக்காக ஏற்படுத்திய திருவடியும் சிவந்த நான்குகைகளும் சிவந்த தேகஒளியும் மூன்றாகிய கண்களுமாகத் தரிசனை கொடுத்தனள் என்றவாறு.

(க-ரை.) வைரவர்கள் அம்மனைப் பூசிக்கும் நடுராத்திரியில் அவர்களுக்குக் காட்சிகொடுத்த உருவத்தைத் கூறியதாம்.

(வி-ரை.) ஏத்தல் - துதித்தல். தாமம்: வடசொல். படுத்தல் - சொல்லுதல். சேமம் - காவல் எனினுமாம். (எரு)

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனும்
அயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினிற் றங்குவரே.

(ப-ரை.) நயனங்கள் - கண்கள், மூன்றுடை - மூன்றையுடைய, நாதனும் - பரமசிவனும், வேதமும் - நான்குவேதங்களும், நாரணனும் - திருமாலும், அயனும் - பிரமதேவனும், பரவும் - வணங்காநின்ற, அபிராமவல்லி - அபிராமவல்லியின், அடி இணையை - உபயபாதங்களை, பயன் என்று - எல்லாப்பொருளுங் கொடுக்கும் பயனுள்ளனவென்று, கொண்டவர் - மதித்துப்பூசித்தவர், பாவையர் - பெண்கள், ஆடவும் - நடனஞ்செய்யவும், பாடவும் - பாடவும், பொன் சயனம் - பொன்னாற்செய்த சயனங்கள், பொருந்து - பொருந்தியிராநின்ற, தபனியக்காவினில் - பொன்மயமாகிய கற்பகச்சோலையில், தங்குவர் - (இந்திரனாக) வீற்றிருப்பர், எ-று.

(பொ-ரை.) கண்கள் மூன்றையுடைய பரமசிவனும் நான்குவேதங்களும் திருமாலும் பிரமதேவனும் வணங்காநின்ற அபிராமிவல்லியின் உபயபாதங்களை எல்லாப்பொருளுங் கொடுக்கும் பயனுள்ளனவென்று மதித்துப் பூசித்தவர், பெண்கள் நடனஞ்செய்யவும் பாடவும் பொன்னாற்செய்த சயனங்கள் பொருந்தியிராநின்ற பொன்மயமாகிய கற்பகச்சோலையில் இந்திரனாக வீற்றிருப்பர் என்றவாறு.

(க-ரை.) அம்மனைப் பூசித்தவர் இந்திரபோகம் பெறுவரென்பதாம்.

(வி-ரை.) நாரணன்-நாராயணன் என்பதன் மரூஉ. அயன்-அஜ: என்னும் வடசொற்றிரிபு; பிறவாதவன் என்பதுபொருள்; இது மங்கல வழக்கு. பாவையர்-தேவதாசிகள். தபநியம்-பொன். (எச)

தங்குவர் கற்பக தாருவி னீழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே.

(ப-ரை.) மால் வரையும் - பெரியமலைகளையும், பொங்கும்-அலைகள் பொங்காநின்ற, உவர் — உப்புநீர் பொருந்திய, ஆழியும் - கடலையும், ஈரேழு புவனமும் - பதினாலு உலகங்களையும், பூத்த - பெற்ற, உந்தி - நாபியையும், கொங்கு - வாசனை, இவர் - நிறைந்த, பூங்குழலாள் - பூவையணிந்த குழலினையுமுடைய அம்மையின், திருமேனி - திருமேனியை, குறித்தவர் - தியானித்துப் பூசித்தவர், கற்பகத்தாருவின் - கற்பகவிருக்ஷத்தின், நீழலில் - நிழலிலே, தங்குவர் - தங்கிய இந்திரனாவர்; தாயர் — (இனித்தமக்கொரு) தாயர், மண்ணில் - பூமியில், இன்றி - இல்லாமல், வழுவா - தப்பாத, பிறவியை - பிறவித்துன்பத்தை, மங்குவர் - நீங்குவர், எ-று.

(பொ-ரை.) பெரியமலைகளையும் அலைகள் பொங்காநின்ற உப்புநீர்பொருந்திய கடலையும் பதினாலு உலகங்களையும் பெற்ற நாபியையும் வாசனைநிறைந்த பூவையணிந்த குழலினையுமுடைய அம்மையின் திருமேனியைத் தியானித்துப் பூசித்தவர் கற்பகவிருக்ஷத்தின் நிழலிலே தங்கிய இந்திரனாவர், இனித்தமக்கொரு தாயர் பூமியில் இல்லாமல் தப்பாத பிறவித்துன்பத்தை நீங்குவர் என்றவாறு.

(க-ரை.) அபிராமியின் திருமேனியைத் தியானித்தவர்கள், இந்திரபதம்பெற்றுப் பிறவித்துன்பத்தை நீக்குவர் என்பதாம்.

(வி-ரை.) குறித்தல் - தியாநித்தல். (எரு)

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி [ய்யில்
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றைமெ
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே.

(பத-ரை.) வண்டு கிண்டி - வண்டுகள்குடைய, வெறி - வாசனை பொருந்திய, தேன் - மது, அவிழ் - விரிகின்ற, கொன்றை - கொன்றைமலர் மாலையையணிந்த, வேணி - சடையையுடைய, பிரான் - பரமசிவனது, மெய்யில் - தேகத்தில், ஒரு கூற்றை - ஒருபங்கை, பறித்து- அபகரித்து, குடிபுகுதும் - அதில் குடியிருக்கும், பஞ்சபாணம் - பஞ்சபாணத்தையுடைய, பயிரவியே - பைரவியென்னுந் திருநாமமுடையவளே, நின் குறிப்பு - உனது திருவுளக்குறிப்பை, அறிந்து-தெரிந்து, நின் கோலம் எல்லாம் - உன் அழகையெல்லாம், மனத்தினில் - என் மனதில், குறித்தேன் - எழுதினேன்; மறலி - இயமன், வருகின்ற - வாராநின்ற, நேர் வழி - சரியான வழியை, மறித்தேன் - தடுத்தேன், எ-று.

(பொ-ரை.) வண்டுகள்குடைய வாசனைபொருந்திய மது விரிகின்ற கொன்றைமலர்மாலையையணிந்த சடையையுடைய பரமசிவனது தேகத்தில் ஒருபங்கை அபகரித்து அதில் குடியிருக்கும் பஞ்சபாணத்தையுடைய பைரவியென்னுந் திருநாமமுடையவளே! உனது திருவுளக்குறிப்பைத் தெரிந்து உன் அழகையெல்லாம் என் மனதில் எழுதினேன்; இயமன் வாராநின்ற சரியானவழியைத் தடுத்தேன் என்றவாறு.

(க-ரை.) உன் திருவுருவைச் சிந்தித்தலால் இனி என்னிடத்தில் இயமன் வாரானென்பதாம்.

(வி-ரை.) கிண்டி - எச்சந்திரிபு. கிண்டல் - குடைதல் (உழுதல்). பறித்தல் - கவர்தல். குறிப்பு - கருத்து. குறித்தல் - எழுதல் ()

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

(ப-ரை.) பயிரவி - பைரவியென்றும், பஞ்சவி - பஞ்சவியென்றும், பாசாங்குசை - பாசாங்குசையென்றும், பஞ்சபாணி - பஞ்சபாணியென்றும், வஞ்சர் - வஞ்சகரின், உயிர் - உயிராகிய, அவி - பலியை, உண்ணும் - உண்ணுகின்ற, உயர் சண்டி - உயர்ந்த சண்டிகையென்றும், காளி - காளியென்றும், ஒளிரும்-பிரகாசிக்கின்ற, கலாவயிரவி- கலைகள்நிறைந்த வைரவியென்றும், மண்டலி - மண்டலியென்றும், மாலினி - மாலினியென்றும், சூலி - சூலியென்றும், வராகி என்று - வராகியென்றும், செயிர்-குற்றம், அவி - நீங்கிய, நான்மறை - நான்கு வேதங்களில், சேர் திருநாமங்கள் - சொல்லிய திருநாமங்களை, செப்புவர் - (அறிஞர் யாவருஞ்) சொல்லித்துதிப்பர், எ-று.

(பொ-ரை.) பைரவியென்றும், பஞ்சவியென்றும், பாசாங்குசையென்றும், பஞ்சபாணியென்றும்,வஞ்சகரின் உயிராகிய பலியை உண்ணுகின்ற உயர்ந்த சண்டிகையென்றும், காளியென்றும், பிரகாசிக்கின்ற கலைகள் நிறைந்த வைரவியென்றும், மண்டலியென்றும், மாலினியென்றும், சூலியென்றும், வராகியென்றும், குற்றம் நீங்கிய நான்கு வேதங்களில் சொல்லிய திருநாமங்களை (அறிஞர் யாவருஞ்) சொல்லித் துதிப்பர் என்றவாறு.

(க-ரை.) வேதங்களில் சொல்லிய திருநாமங்களைக்கொண்டு பெரியோர் யாவரும் துதிப்பரென்பதாம்.

(வி-ரை.) பயிரவி வயிரவி யென்பன பீரு என்னும் வடசொற் பகுதியடியாகத் தோன்றின பெயர்கள்; இவற்றிற்கு அச்சத்தைச் செய்பவள் என்பது பொருள். (எஎ)

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே.

(ப-ரை.) செப்பும் – (ரத்தின) செப்பையும், கனக கலசமும் – தங்கக்கலசத்தையும், போலும்-ஒத்த, திரு-சிறந்த, முலைமேல் – குசங்களின்மேல், களபம் – கலவைச்சாந்தை, அப்பும் – பூசிய, அபிராம வல்லி – அபிராமவல்லி, அணி – தரிக்கும், தரளக்கொப்பும் – முத்துக் கொப்பையும், வயிரக்குழையும் – வைரரத்தினத்திலுற்செய்த குண்டலத்தையும், விழியின் – கண்ணின், கொழும் – செழித்த, கடையும் – கடையையும், துப்பும் – பவளத்தையொத்த (வாயினையும்), நிலவும் – நிலவையொத்த தந்தவரிசையையும், என் – என்னுடைய, துணை விழிக்கு – இரண்டு கண்களிலும், எழுதிவைத்தேன்-(எப்போதுமிருக்கும்படி) எழுதிவைத்தேன், எ-று.

(பொ-ரை.) (ரத்தின)செப்பையும் தங்கக்கலசத்தையும் ஒத்த சிறந்த குசங்களின்மேல் கலவைச்சாந்தைப் பூசிய அபிராமவல்லி தரிக்கும் முத்துக்கொப்பையும், வைரரத்தினத்திலுற்செய்த குண்டலத்தையும், கண்ணின் செழித்த கடையையும், பவளத்தையொத்த (வாயினையும்), நிலவையொத்த தந்தவரிசையையும் என்னுடைய இரண்டு கண்களிலும் எப்போது மிருக்கும்படி எழுதிவைத்தேன் என்றவாறு.

(க-ரை.) அம்மையின் றிருவுருவம் எப்போதும் என் கண்ணை விட்டு நீங்காதென்பதாம்.

(வி-ரை.) செப்பு - பரணி. கலசம் - குடம். அப்புதல் - பூசுதல். கலவைச்சாந்து – கலவைச்சந்தனம். தரளம் - முத்து. கொப்பு - ஓர் வகைக் காதணி. விழிக்கு: உருபுமயக்கம். (எஅ)

விழிக்கே யருளுண் டபிராமி வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்

பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

(ப-ரை.) அபிராமவல்லி - அபிராமவல்லியே, விழிக்கு - (உன்) கண்களுக்கு, அருள் உண்டு-கிருபையுண்டு; வேதம் சொன்ன-வேதங்கள் சொல்லிய, வழிக்கு - வழியின்கண், வழிபட - (சென்று) வழிபட, எமக்கு - எங்களுக்கு, நெஞ்சு உண்டு - மனமுண்டு; அவ்வழி கிடக்க - அவ்வழியிருக்க (அதைவிட்டு), பழிக்கு - நிந்தைக்கு, சுழன்று - திரிந்து, வெம் - கொடிய, பாவங்கள் - பாவங்களை, செய்து - பண்ணி, பாழ் - பாழாகிய, நரகக்குழிக்கு - நரகபள்ளத்தில், அழுந்தும் - அழுந்துகின்ற, கயவர்தம்மோடு-கீழ்மக்களோடு, இனி - இனிமேல், என்ன கூட்டு - எனக்கு என்னகூட்டுறவு (வேண்டுவதில்லை), எ-று.

(பொ-ரை.) அபிராமவல்லியே! (உன்) கண்களுக்குக் கிருபையுண்டு; வேதங்கள் சொல்லிய வழியின்கண் (சென்று) வழிபட எங்களுக்கு மனமுண்டு; அவ்வழியிருக்க (அதைவிட்டு) நிந்தைக்குத் திரிந்து கொடிய பாவங்களைப் பண்ணிப் பாழாகிய நரகபள்ளத்தில் அழுந்துகின்ற கீழ்மக்களோடு இனிமேல் எனக்கு என்ன கூட்டுறவு (வேண்டுவதில்லை) என்றவாறு.

(க-ரை.) அம்மையே! உன்னையன்றி வேறுதுணை யில்லையென்பதாம்.

(வி-ரை.) ஏ: அசை. விழிக்கு, வழிக்கு, குழிக்கு: வேற்றுமை மயக்கு. வல்லிக்கு: இதில் கு-சாரியை. அபிராமவல்லி: அண்மைவிளி. பழிக்கு: இதில் குவ்வுருபு பொருட்டுப்பொருளது. (எசு)

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
ஓட்டிய வாவென்கண் ணோடிய வாதன்னை யுள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
ஆட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே.

(ப-ரை.) அகத்தாமரை - என் இதயதாமரைமலரில், நடமாடு - நடனஞ்செய்யாநின்ற, ஆரணங்கு - அழகிய அபிராமி, என்னை - அடியேனை, தன்னடியாரில் - தன்னடியார்களில், கூட்டியவா - சேர்த்தவாறும், கொடியவினை - என் கொடியவினையை, ஓட்டியவா - ஓட்டியவாறும், என்கண் - என்னிடத்தினின்றும், ஓடியவா - (அது) ஓடியவாறும், தன்னை - தன்னுடைய, உள்ளவண்ணம் - நிசரூபத்தை, காட்டியவா - (எனக்குக்) காட்டியவாறும், ஆட்டியவா - என்னையாட்டியவாறும், கண்ட - பார்த்த, கண்ணும் - கண்களும், மனமும் - மனதும், களிக்கின்றவா - சந்தோஷிக்கின்றவாறும் (என்னவியப்பு), எ-று.

(பொ-ரை.) என் இதயதாமரைமலரில் நடனஞ்செய்யாநின்ற அழகிய அபிராமி அடியேனைத் தன்னடியார்களில் சேர்த்தவாறும், என் கொடியவினையை ஓட்டியவாறும், என்னிடத்தினின்றும் (அது) ஓடியவாறும், தன்னுடைய நிசரூபத்தை (எனக்குக்) காட்டியவாறும், என்னையாட்டியவாறும் பார்த்த கண்களும் மனதும் சந்தோஷிக்கின்றவாறும் (என்னவியப்பு) என்றவாறு.

(க-ரை.) அபிராமியம்மன் எனக்குச்செய்த நன்றியைக் கண்டு என் கண்ணும் மனமும் சந்தோஷிக்கின்றன' வென்பதாம்.

(வி-ரை.) ஏ, ஆ: அசைகள். தன்னை: வேற்றுமைமயக்கு. ஆறு என்பன ஈறுகெட்டன. அகம் - இதயம். தாமரை: ஆகுபெயர். நடம் - நடனம். வினை பிறவித்துன்பத்தை யுண்டாக்கலால் அதனைக் 'கொடியவினை' என்றார். (அ0)

அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை, வாழ்த்துகிலே னெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே;

(ப-ரை.) அணங்கே - அழகியவம்மையே, அணங்குகள் - தெய்வங்கள், நின் - உன்னுடைய, பரிவாரங்கள் - படைகள், ஆகையினல் - ஆதலினுலும், அறிவொன்றிலேன் - ஓரறிவுமிலேனுன, என்கண் - என்னிடத்தில், நீ வைத்த - நீவைத்த, பேரளி - மிக்ககிருபையினுலும், ஒருவரை - எப்படிப்பட்டவர்களையும், வணங்கேன் - (தேகத்தால்) தொழேன்; நெஞ்சில் - மனதால் (நினையேன்); வாழ்த்துகிலேன் - (வாக்கால்) துதியேன்; வஞ்சகரோடு - வஞ்சகருடன், இணங்கேன் - கூடேன்; சிலர் - சிலபேர், எனது - (இது) என்னுடையது, உனது - (இது) உன்னுடையது, என்று இருப்பார் - என்றெண்ணியிருப்பவர்கள், யாவரோடும் - யாவரோடும், பிணங்கேன் - நெருங்கமாட்டேன், எ-று.

(பொ-ரை.) அழகியவம்மையே! தெய்வங்கள் உன்னுடைய படைகள் ஆதலினுலும் ஓரறிவுமிலேனுன என்னிடத்தில் நீ வைத்த மிக்க கிருபையினுலும் எப்படிப்பட்டவர்களையும் (தேகத்தால்) தொழேன், மனதால் (நினையேன்), (வாக்கால்) துதியேன், வஞ்சகருடன் கூடேன், சிலபேர் (இது) என்னுடையது (இது) உன்னுடையது என்றெண்ணி யிருப்பவர்கள் யாவரோடும் நெருங்கமாட்டேன் என்றவாறு.

(க-ரை.) தாயே! நீ என்மேல்வைத்த கிருபையால் மற்றவர்களைத் தொழுது சிந்தித்து வாழ்த்தேன் என்பதாம்.

(வி-ரை.) அணங்கே யென்பதற்குத் தெய்வப்பெண்ணேயென்றுரைத்தலுமாம். வணங்குதல் முதலியவற்றிற்கு வினைமுதல்கள் வருவிக்கப்பட்டன. பேரளி - பெருங்கருணை. (அக)

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
ஒளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுந்தொறும்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே.

(ப-ரை.) அளி - வண்டுகள், ஆர் - பொருந்திய, கமலத்தில் - தாமரைமலரிலிருக்கும், ஆரணங்கே - அழகுநிறைந்தவளே, அகிலம் - பூமியும், அண்டமும் - அண்டங்களும், நின் - உன்னுடைய, ஒளியாக நின்ற - பிரகாசமாகநின்ற, ஒளிர் - விளங்குகிற, திருமேனியை - திருமேனியினை, உள்ளுதொறும் - (யான்) நினைக்குந்தோறும், அந்தக் கரணங்கள் - (என்) அந்தக்கரணங்களில், களியாகி - ஆனந்தமதுப் பெருகி, விம்மி - அதிகரித்து, கரைபுரண்டு - வரம்புகடந்து, வெளி யாய்விடின் - பொங்குமாயின், எங்ஙன் - எப்படி, நின் - உன்னுடைய, விரகினை - ஆசையை, மறப்பேன் - மறந்திருப்பேன், எ-று.

(பொ-ரை.) வண்டுகள் பொருந்திய தாமரைமலரிலிருக்கும் அழகு நிறைந்தவளே! பூமியும் அண்டங்களும் உன்னுடைய பிரகாச மாகநின்ற விளங்குகின்ற திருமேனியினை (யான்) நினைக்குந்தோறும் (என்) அந்தக்கரணங்களில் ஆனந்தமதுப்பெருகி அதிகரித்து வரம்பு கடந்து பொங்குமாயின் எப்படி உன்னுடைய ஆசையை மறந்திருப் பேன் என்றவாறு.

(க-ரை.) அம்பாள் நின்தேக ஒளி என்னுளத்தில் நீங்காதிருத்த லால் எப்படி மறப்பே னென்பதாம்.

(வி-ரை.) அகிலாண்டம் என்பதற்கு எல்லாவுலகங்களும் எனி னுமாம். மது - தேன். வெளியாய்விடின் என்பதற்கு வெளிப்படுமா யின் எனினுமமையும். எங்ஙனே மறப்பேன் என்பதற்கு மறக்க வியலாதென்ப துள்ளுறை. (அஉ)

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியும்
உரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே.

(ப-ரை.) விரவும் - (தேன்) பொருந்திய, புது மலர் - அன்றலர்ந்தமலர்களை, இட்டு - தூவி, நின் - உன்னுடைய, பாதம் - திருவடி

யாகிய, விரை - வாசனைபொருந்திய, கமலம் - தாமரைமலரை; இரவும் பகலும் - எப்பொழுதும், இறைஞ்சவல்லார்-பூசிப்பவர்கள், இமையோர் எவரும் - தேவர்களெல்லாரும், பரவும் - தொழுகின்ற, பதமும்-(இந்திர)பதமும், அயிராவதமும் - வெள்ளையானையும், பகீரதியும் - ஆகாசகங்கையும், உரவும்-(தேக) வலியும், குலிசமும்-வச்சிராயுதமும், கற்பகக்காவும் - கற்பகச்சோலையும், உடையவர் - உடைய(இந்திர)ராவர், எ-று.

(பொ-ரை.) (தேன்) பொருந்திய அன்றலர்ந்த மலர்களைத் தூவி உன்னுடைய திருவடியாகிய வாசனைபொருந்திய தாமரைமலரை எப்பொழுதும் பூசிப்பவர்கள் தேவர்களெல்லாரும் தொழுகின்ற (இந்திர) பதமும் வெள்ளையானையும் ஆகாசகங்கையும் (தேக) வலியும் வச்சிராயுதமும் கற்பகச்சோலையும் உடைய (இந்திர)ராவர் என்றவாறு.

(க-ரை.) அபிராமியைப் பூசித்தவர்கள் இந்திரபதம் பெறுவரென்பதாம்.

(வி-ரை) கமலம்: ஆகுபெயர். இறைஞ்சல் - வணங்கலுமாம். இறைஞ்சலி னருமைதோன்ற 'இறைஞ்சவல்லார்' என்றார். அயிராவதம் - இராவதி நதிதீரத்திற் பிறந்த வெண்ணிற யானை. பகிரதன் கொண்டுவந்தமையால் 'ஆகாயகங்கைக்குப் 'பகீரதி' என்னும் பெயருண்டாயிற்று. (அ௩)

உடையாளை யொல்குசெம்பட்டுடை யாளையொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை யெங்கள்பெம் மானிடை யாளையிங்கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

(ப-ரை.) (உலகர்களே!) உடையாளை - என்னையடிமையாகவுடையவளை, ஒல்கு - அசைகின்ற, செம்பட்டு - சிவந்தபட்டாகிய, உடையாளை - ஆடையையுடையவளை, ஒளிர் மதி-பிரகாசிக்கின்ற சந்திரனை (யணிந்த), செஞ்சடையாளை - சிவந்த சடாபாரத்தையுடையவளை,

வஞ்சர் நெஞ்சு - வஞ்சகர் மனதில், அடையாளை-சேராதவளை, தயங்கும் - அசைகின்ற, நுண் - நுட்பமாகிய, நூல் - நூல்போன்ற, இடையாளை - இடையையுடையவளை, எங்கள் பெம்மான் - எங்கள்பிரானாகிய பரமசிவனுடைய, இடையாளை - வாமபாகத்திலிருப்பவளை, இங்கு-இவ்வுலகத்தில்; என்னை - என்றனை, இனி - இனிமேல், படையாளை-பிறக்கச்செய்யாதவளை, உங்களையும்-(வீணராகிய) உங்களையும், படையாவண்ணம் - (பூமியில்) பிறக்காமலிருக்கும்படி, பார்த்திரும் - தேடி (இவள் திருவடியை) யடையுங்கள், எ-று.

(பொ-ரை.) (உலகர்களே!) என்னை யடிமையாக உடையவளை, அசைகின்ற சிவந்தபட்டாகிய ஆடையையுடையவளைப், பிரகாசிக்கின்ற சந்திரனை (யணிந்த) சிவந்த சடாபாரத்தையுடையவளை, வஞ்சகரின் மனதில் சேராதவளை, அசைகின்ற நுட்பமாகிய நூல்போன்ற இடையையுடையவளை, எங்கள் பிரானாகிய பரமசிவனுடைய வாமபாகத்திலிருப்பவளை, இவ்வுலகத்தில் என்றனை இனிமேல் பிறக்கச்செய்யாதவளை, (வீணராகிய) உங்களையும் (பூமியில்) பிறக்காமலிருக்கும்படி தேடி (இவள் திருவடியை) யடையுங்கள் என்றவாறு.

(க-ரை.) உலகத்தவர்களே! நீங்கள் இனிப்பூமியில் பிறவாமலிருக்கும்படி அபிராமி திருவடியைப் பூசனைசெய்யுங்க ளென்பதாம்.

(வி-ரை.) இடம் இடையெனத் திரிந்துநின்றது. உடையாளையெனப் பொதுப்படக் கூறினமையால் எல்லாவுலகங்களையும் உடையவளை யென்றுரைத்தலுமமையும். உடை - உடுக்கப்படுவது. இறைவற்குள்ள செஞ்சடைமுதலியவும் இறைவிக்கு முண்மையால் 'ஒளிர்மதிச் செஞ்சடையாளை' என்றார். (அச)

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாம்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே.

(ப-ரை.) பார்க்கும் - (யான்) பார்க்கின்ற, திசைதோறும்-திக்குகள்தோறும் (காணப்படுவன), பாசாங்குசமும் - பாசாங்குசமும், சிறை வண்டு - சிறகுகளையுடைய வண்டுகள், ஆர்க்கும்-சத்திக்கா நின்ற, பனி-குளிர்ச்சிபொருந்திய, புதுமலர் - புதுப்பூவாகிய, ஐந்தும்-ஐந்து (பாணங்களும்), கரும்பும் - கரும்புவில்லும், என் - என்னுடைய, அல்லல் எல்லாம் - துன்பங்களையெல்லாம், தீர்க்கும் - நீக்கும், திரிபுரையாள் - திரிபுரசுந்தரியின், திருமேனியும் - திருவுருவும், சிற்றிடையும் - சிறிய விடையும், வார் - கச்சிறுக்கிய, குங்குமம் - செஞ்சாந்தையணிந்த, முலையும் - குசங்களும், முலைமேல் - ஸ்தனங்களின்மே (லணிந்த), முத்துமாலையும் - முத்துமாலையுமேயாம், எ-று.

(பொ-ரை.) (யான்) பார்க்கின்ற திக்குகள்தோறுங் (காணப்படுவன) பாசாங்குசமும், சிறகுகளையுடைய வண்டுகள் சத்திக்காநின்ற குளிர்ச்சிபொருந்திய புதுப்பூவாகிய ஐந்து (பாணங்களும்), கரும்புவில்லும், என்னுடைய துன்பங்களையெல்லாம் நீக்கும் திரிபுரசுந்தரியின் திருவுருவும், சிறியவிடையும், கச்சிறுக்கிய செஞ்சாந்தையணிந்த குசங்களும், ஸ்தனங்களின்மே (லணிந்த) முத்துமாலையுமேயாம் என்றவாறு.

(க-ரை.) அபிராமியின் திருமேனியின் சின்னங்களே திக்குகள் தோறும் எனக்குத் தோன்றுவனவன்றி வேறுபொருள் காணேனென்பதாம்.

(வி-ரை.) தொறும் - எஞ்சாமைப் பொருடருவதோரிடைச்சொல். ஆர்த்தல் - சத்தித்தல். (அ௬)

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பனிமொழியே.

(ப-ரை.) பாலையும் - பாலையும், தேனையும் - தேனையும், பாகையும் - சருக்கரைப்பாகையும், போலும் - ஒத்த, பனி மொழியே-குளிர்ந்த சொல்லையுடையவளே, கதித்த - பருத்த, கப்பு - கிளைத்த, வேலை; சூலத்தை, வெம் - குரூரமாகிய, காலன் - இயமன், என்மேல் - என்றன்மேல், விடும்போது - எறியும்போது, மால் - விஷ்ணுவும், அயன்-பிரமனும், தேட - தேடவும், மறை தேட - வேதங்கள்தேடவும், வானவர் தேட - தேவர்கள் தேடவும், நின்ற-அரிதாய்நின்ற, காலையும்-உன் பாதங்களையும், சூடகம் - வளையலையணிந்த, கையையும் - உன் கைகளையும், கொண்டு - (தரிசனைகாட்டிக்)கொண்டு, வெளிநில் - (என்) எதிர்நிற்பாயாக, எ-று.

(பொ-ரை.) பாலையும் தேனையும் சருக்கரைப்பாகையும் ஒத்த குளிர்ந்த சொல்லையுடையவளே! பருத்த கிளைத்த சூலத்தைக் குரூரமாகிய இயமன் என்றன்மேல் எறியும்போது விஷ்ணுவும் பிரமனும் தேடவும் வேதங்கள் தேடவும் தேவர்கள் தேடவும் அரிதாய்நின்ற உன் பாதங்களையும் வளையலையணிந்த உன் கைகளையும் (தரிசனைகாட்டிக்) கொண்டு (என்) எதிர்நிற்பாயாக என்றவாறு

(க-ரை.) அம்பா! இயமன் என்மேல் வரும்போது நீ தரிசனையளிப்பாயாக வென்பதாம்.

(வி-ரை.) பணிமொழியென்றும் பாடம்; இதற்குத் தாழ்வாகிய சொல் என்பதுபொருள். பனிமொழி: அன்மொழித் தொகைக்காரணப் பெயர்; சதுர்வித புருஷார்த்தங்களும் மறைந்திருத்தற் கிடமாயிருத்தலால் வேதம் 'மறை' எனப்பட்டது. கண்டாய்: முன்னிலையசை. (அக)

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்திரு மூர்த்தமென்றன்
விழிக்கும் மனக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
அழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே.

(ப-ரை.) விழியால் - (நெற்றிக்) கண்ணினால், மதனை - மன்மதனை, அழிக்கும் - எரிக்கும், தலைவர் - பரமசிவனுடைய, அழியா-கெடாத, விரதத்தை - தவத்தினை, அண்டம் எல்லாம் - அண்டங்களெல்லாம், பழிக்கும்படி - (அவரை) நிந்திக்கும்படி (கெடுத்து), ஒருபாகம் - (அவர் திருமேனியில்) ஓர்பாகத்தை, கொண்டு - (உன்னதாக்கிக்) கொண்டு; ஆளும் - ஆளுகிற, பராபரையே - பராபரையே, மொழிக்கும் - சொல்லுக்கும், நினைவுக்கும் - சிந்தைக்கும், எட்டாத-எட்டாத, நின் - உன்னுடைய, திருமூர்த்தம்-சிறந்த உருவம், என்றன் - என்னுடைய, விழிக்கும் - கண்களுக்கும், மனக்கும் - கருத்துக்கும், வெளி நின்றது - காட்சிதந்தது (என்ன ஆச்சரியம்), எ-று.

(பொ-ரை.) (நெற்றிக்) கண்ணினால் மன்மதனை எரிக்கும் பரமசிவனுடைய கெடாத தவத்தினை அண்டங்களெல்லாம் (அவரை) நிந்திக்கும்படி (கெடுத்து) (அவர் திருமேனியில்) ஓர்பாகத்தைத் (தன்னதாக்கி)கொண்டு ஆளுகிற பராபரையே! சொல்லுக்கும் சிந்தைக்கும் எட்டாத உன்னுடைய சிறந்த உருவம் என்னுடைய கண்களுக்கும் கருத்துக்கும் காட்சிதந்தது (என்ன ஆச்சரியம்) என்றவாறு.

(க-ரை.) பராபரையே! மனம்வாக்குக்கெட்டாத உன்றிருவுருவம் என் கண்ணுங் கருத்தும் காணும்படி காட்சிதந்தது என்ன ஆச்சரியமென்பதாம்.

(வி-ரை.) மதனையழிக்கும் என மேல்வருதலால், விழியால் என்றதற்கு நெற்றிக்கண்ணினால் என்றுரைக்கலாயிற்று. அண்டம்: ஆகுபெயர். என்றன் என்பதில் தன் சாரியை. மனக்கு: இதில் அத்துச் சாரியை குறைந்துநின்றது. ஆல்-ஆச்சர்ய சூசகம். (அ௭)

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன் றிவனென்று தள்ளப் பெறுதரி யாரமுணர்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன் று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே.

(ப-ரை.) தரியார் - பகைவராகிய, அவுணர் - திரிபுராதியரின், புரம் - திரிபுரம், அன்று - பூர்வத்தில், எரிய - எரியும்படி, பொருப்பு வில் - மகம்மேருவாகியவில்லை; வாங்கிய - வளைத்தவனும், போதில் - தாமரைப்புஷ்பத்திலிராநின்ற, அயன் - பிரமதேவனுடைய, சிரம் ஒன்று செற்ற - ஒருதலையைக்கிள்ளிய, கையான் - கையையுடையவனுமாகிய (சிவபெருமானது), இடப்பாகம் - வாமபாகத்தில், சிறந்தவளே - சிறப்புற்றிருப்பவளே, உனை - உன்னையே, பரம் என்று - கடவுளென்று, தமியேனும்-ஒன்றியாகியயானும், உன் பத்தருக்குள் - உன்னடியார்களுக்குள், அடைந்தேன் - (ஒருவனாகச்) சேர்ந்தேன், இவன் - இவன், தரம் அன்றென்று - தக்கவனல்லவென்று, தள்ளப்பெறு - தள்ளிவிடலாகாது, எ-று.

(பொ-ரை.) பகைவராகிய திரிபுராதியரின் திரிபுரம் பூர்வத்தில் எரியும்படி மகம்மேருவாகிய வில்லை வளைத்தவனும் தாமரைப் புஷ்பத்திலிராநின்ற பிரம்மதேவனுடைய ஒருதலையைக் கிள்ளிய கையையுடையவனுமாகிய (சிவபெருமானது) வாமபாகத்தில் சிறப்புற்றிருப்பவளே! உன்னையே கடவுளென்று ஒன்றியாகியயானும் உன்னடியார்களுக்குள் (ஒருவனாகச்) சேர்ந்தேன், இவன் தக்கவனல்லவென்று தள்ளிவிடலாகாது என்றவாறு.

(க-ரை.) அபிராமி! நீயே கடவுளென்று உன்னடியார்களுள் அடைந்தேன், என்னைத், தக்கவனல்லவென்று தள்ளிவிடாதே யென்பதாம்.

(வி-ரை.) தள்ளப்பெறு: ஒருமைபன்மைமயக்கு. வில்வாங்கிய என மேல்வருகையால் மலை மேருமலையைக் குறித்தது. வாங்கல் - வளைத்தல். (அஅ)

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
உறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே.

(ப-ரை.) கமலத்திருவே - தாமரைமலரிலிருக்கும் இலக்குமியே, துறக்கம் தரும் - இந்திரபதத்தைத்தருகிற, சிறக்கும் - சிறந்த, நின் சேவடி - உன் செய்யதிருவடியை, சென்னி வைக்க - (என்) சிரசில்வைக்க, நின் - உன்னுடைய, துணைவரும் - தலைவரும், நீயும் - நீயும், துரியம்அற்ற-துரியாவஸ்தைகடந்த,உறக்கம்தரவந்து-(நிராபார) நித்திரையைக் கொடுக்கவந்து, உடம்போடு - உடம்பிற்கும், உயிர் - உயிருக்கும், உறவு அற்று - (உள்ள) உறவு நீங்கி, அறிவு - உணர்வு, மறக்கும்பொழுது - மறக்குங்காலத்தில், வருந்தியும் - (நீங்கள்) வருத்தப்பட்டேனும், என் முன்னே - எனக்குமுன்பு, வரல்வேண்டும் - வருவீராக, எ-று.

(போ-ரை.) தாமரைமலரிலிருக்கும் இலக்குமியே! இந்திரபதத்தைத்தருகிற சிறந்த உன் செய்ய திருவடியை (என்) சிரசில்வைக்க உன்னுடைய தலைவரும் நீயும் துரியாவஸ்தை கடந்த (நிராபார) நித்திரையைக் கொடுக்கவந்து உடம்பிற்கும் உயிருக்கும் (உள்ள) உறவு நீங்கி உணர்வு மறக்குங்காலத்தில் (நீங்கள்) வருத்தப்பட்டேனும் எனக்குமுன்பு வருவீராக என்றவாறு.

(க-ரை.) திருவே! சரமதிசையில் உன் தலைவரும் நீயும் எனக்குக் காட்சி தந்தருள்வீராக வென்பதாம்.

(வி-ரை.) உடம்பொடு: வேற்றுமைமயக்கு. ஏ: அசை. துரியம் - நான்காமவஸ்த்தை. உறவு - சம்பந்தம். அறிவு மறக்கும்பொழுது என்றது மரணகாலத்தை. மரணகாலத்தில் அறிவுகெடுமென்பது பிரத்தியக்ஷாநுபவத்தினாலும் "வந்திடு மரணத்துன்ப மறித்துரை செய்யப்போமோ, உந்திமேலையும் பித்துமுணர்வொடு பொறிகலங்கி", "ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து, மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது", "அகமுங் குலைந்து மெய்யறிவுந் தொலைந்து விழியவி ரொளியிழந்து செருகி, யையுந்தொடர்ந்து மேனுவறண் டைம்பொறியு மலமந்து நிலைகலங்கி, மிகுநொந்து தொகுமைந்தாதிய

ரருத்துப்பால்வீக்கி யுடல்விடுநாளில்" என்றற்றொடக்கத் தான்றோர் செய்யுட்களாலும் விளங்கும். (அகூ)

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே.

(பு-ரை.) விண் - தேவலோகத்தில், மேவும் - பொருந்திய, புலவருக்கு - தேவர்களுக்கு, வேலை - சமுத்திரத்தில்தோன்றிய, மருந்தானதை - அமுதத்தை, விருந்தாக - விருந்தாக, நல்கும் - கொடுக்கின்ற, மெல்லியல் - அபிராமி, வருந்தாவகை - (நான்) வருந்தாதபடி, என் - என்னுடைய, மனத்தாமரையினில் - இதயாரவிந்தத்தில், வந்து புகுந்து - வந்துசேர்ந்து, பழைய இருப்பிடமாக - பழைய கோயிலாக (எண்ணி), இருந்தாள் - நிலைத்திருந்தாள் (ஆதலால்), இனி - இனிமேல், எனக்கு - என்றனுக்கு, பொருந்தாது - கிடையாதது, ஒரு பொருள் - ஒருபொருளும், இல்லை - இல்லை, எ-று.

(பொ-ரை.) தேவலோகத்தில் பொருந்திய தேவர்களுக்கு சமுத்திரத்தில்தோன்றிய அமுதத்தை விருந்தாகக் கொடுக்கின்ற அபிராமி (நான்) வருந்தாதபடி என்னுடைய இதயாரவிந்தத்தில் வந்துசேர்ந்து பழையகோயிலாக (எண்ணி) நிலைத்திருந்தாள் (ஆதலால்) இனிமேல் என்றனுக்குக் கிடையாதது ஒருபொருளும் இல்லை என்றவாறு.

(க-ரை.) அபிராமி ஏன் இதயாரவிந்தத்தில் நீங்காதிருத்தலால் இனி எனக்கு ஒன்றுங் குறைவில்லை யென்பதாம்.

(வி-ரை.) ஏ: அசை. புலவர் - தேவர். வேலாயென்னும் வடசொல் வேலையென் வீறுதிரிந்தது. மெல்லியல்: அன்மொழித்தொகைக் காரணப்பெயர். சாதாரண விசையெச்சங்கள் வருவித் துரைக்கப்பட்டன. (கூ0)

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பகடூரும் பதந்தருமே.

(ப-ரை.) மெல்லிய - மிருதுவாகிய, நுண் இடை - நுட்பமாகிய விடையினையுடைய, மின் - மின்னலை, அனையாளை - ஒத்தவளை, விரி - விரிந்த, சடையோன் - சடையையுடைய பரமசிவன், புல்லிய - தழுவிய, மென்முலை - மிருதுவாகிய குசங்களையுடைய, பொன் - பொன்னை, அனையாளை - ஒத்தவளை, புகழ்ந்து - தோத்திரஞ்செய்து, மறை - வேதங்கள், சொல்லியவண்ணம்-சொன்னவிதிப்படி, தொழும்- பூசிக்கின்ற, அடியாரை - அடியவரை, தொழுமவர்க்கு - வணங்குபவர்களுக்கு (அவ்வணக்கம்), பல்லியம்-பலவாத்தியங்கள், ஆர்த்தெழ- சப்திக்க, வெண்பகடு - ஐராவதத்தை, ஊரும் - செலுத்தாநின்ற, பதம் - இந்திரபதத்தை, தரும் - கொடுக்கும், எ-று.

(பொ-ரை.) மிருதுவாகிய நுட்பமாகிய விடையினையுடைய மின்னலை ஒத்தவளை விரிந்த சடையையுடைய பரமசிவன் தழுவிய மிருதுவாகிய குசங்களையுடைய பொன்னை ஒத்தவளைத் தோத்திரஞ்செய்து வேதங்கள் சொன்னவிதிப்படி பூசிக்கின்ற அடியவரை வணங்குபவர்களுக்கு (அவ்வணக்கம்) பலவாத்தியங்கள் சப்திக்க ஐராவதத்தைச் செலுத்தாநின்ற இந்திரபதத்தைக் கொடுக்கும் என்றவாறு.

(க-ரை.) அபிராமியம்மையை விதிப்படி பூசிப்பவரை வணங்கின் அவ்வணக்கம் இந்திரபதந்தருமென்பதாம்.

(வி-ரை.) ஏ : அசை. புல்லல் - தழுவல். பொன் - திருமகள், அன்றி சுவர்ணம் எனினுமமையும். ஆர்த்தல் - சத்தித்தல், பல்லியம்- வாத்தியம்; பல் இயம் எனப் பிரித்துப் பலவாத்தியங்கள் என்றலுமொன்று. பகடு - யானை. வெண்பகடு - வெள்ளையானை. ஊர்தல் - ஏறிநடத்துதல். (கக)

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே.

(ப - ரை.) முதல் - முதன்மையாகிய, தேவர் - தேவர்களான, மூவரும்-மூவராகிய பிர்ம்மாவிஷ்ணு உருத்திரரும், யாவரும்-மற்றைத் தேவர்யாரும், போற்றும்-வணங்குகின்ற, முகிழ்-(முல்லை) அரும்பை யொத்த, நகையே - தந்தபந்தியையுடையவளே, பதத்தே - (ஆகம) வழியிலேநின்று, நின்பாதத்தில் - உனது திருவடியில், உருகி - உருக் கத்தோடு, மனம் பற்றி - மனம்பொருந்தி, உன்றன் - உன்னுடைய, இதத்தே - இஷ்டப்படி, ஒழுக - (நான்)நடக்க, அடிமை கொண்டாய் - (நீயே) அடிமையாக்கிக்கொண்டாய் (ஆதலால்), இனி யான் - இனி மேல்யான், ஒருவர் - வேறொருவருடைய, மதத்தே - சமயத்திலே, மதி மயங்கேன் - (சேர்ந்து) புத்திமயங்கேன், அவர் போன - அவர்க ளனுசரித்த, வழியும் - வழியிலும், செல்லேன் - போகேன், எ-று.

(பொ - ரை.) முதன்மையாகிய தேவர்களான பிர்ம்மா விஷ்ணு உருத்திரரும் மற்றைத்தேவர் யாரும் வணங்குகின்ற (முல்லை) அரும் பையொத்த தந்தபந்தியையுடையவளே! (ஆகம)வழியிலேநின்று உனது திருவடியில் உருக்கத்தோடு மனம்பொருந்தி உன்னுடைய இஷ்டப்படி (நான்)நடக்க (நீயே) அடிமையாக்கிக்கொண்டாய் (ஆத லால்) இனிமேல் நான் வேறொருவருடைய சமயத்திலே (சேர்ந்து) புத்திமயங்கேன், அவர்களனுசரிக்கும் வழியிலும் போகேன் என்ற வாறு.

(க - ரை.) தாயே! நீயே என்னைத் தடுத்தாட்கொண்டனை, யான் இனி வேறுசமயத்தை நினையேனென்பதாம்.

(வி - ரை.) முகிழ்நகை: அன்மொழித்தொகைக்காரணப்பெயர். இதம் - விருப்பம். (கஉ)

நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநாம்
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே.

(ப-ரை.) இந்த ஞாலம் எல்லாம் - இவ்வுலகங்களையெல்லாம், பெற்ற-(கருவுறாது) ஈன்ற, நாயகிக்கு-உமையவளுக்கு, முகிழ் முலை-குவிந்தஸ்தனம், முகையே - (தாமரை) அரும்பே; கண் - விழி, முது மானே - முதுமையான மானே; முடிவு இல் - அழிவற்ற, பிறவியும் - தோற்றமும், அந்தவகையே - அந்தவிதமே; நாம் - யாம், மலைமகள் என்பது - இவளைப் பர்வதராஜபுத்திரியென்பதும், வம்பே - நிலையற்றதே (இப்படியிருக்க), இவடன் - இவளுடைய, தகைமையை - இயற்கையை, நாடி - ஆராய்ந்து, விரும்புவது - விரும்புவது, மிகையே - குற்றமே (ஆதலால்), இஃது - இது, நகையே - யாவரும் நகைக்கத்தக்கதே, எ - று.

(பொ-ரை.) இவ்வுலகங்களையெல்லாம் (கருவுறாது) ஈன்ற உமையவளுக்குக் குவிந்தஸ்தனம் (தாமரை) அரும்பே, விழி முதுமையான மானே, அழிவற்ற தோற்றமும் அந்தவிதமே, யாம் இவளைப் பர்வதராஜபுத்திரியென்பதும் நிலையற்றதே, (இப்படியிருக்க) இவளுடைய இயற்கையை ஆராய்ந்து விரும்புவது குற்றமே, (ஆதலால்) இது யாவரும் நகைக்கத்தக்கதே என்றவாறு.

(க-ரை.) இஃது நிந்தையாகச் சிறப்பித்ததாம்.

(வி-ரை.) நாயகி - தலைவி. தகைமை - பெருமையெனினுமிழுக்காது. நகை: ஆகுபெயர். (கூ)

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே.

(பு-ரை.) விரும்பி - இச்சித்து, தொழும் - பூசிக்கின்ற, அடியார் - அடியார்களுக்கு (அச்செயல்), விழி நீர் மல்கி - கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்பெருகி, மெய் - தேகம், புளகம் அரும்பி - புளகித்து, ததும்பிய - நிறைந்த, ஆனந்தமாகி - ஆனந்தமயமாகி, அறிவு இழந்து-பசுப்போதமற்று, சுரும்பின்-(தேனுண்ட) வண்டைப்போல, களித்து - மயங்கி, மொழி - சொல், தடுமாறி-கலங்கி, முன் சொன்ன எல்லாம் - முன்சொல்லிய அனைத்தையும், தரும் - கொடுக்கும் (மேலும்), பித்தர் ஆவரென்றால்-(ஞான) பைத்தியமுங்கொள்ளுவார்களென்றால், அபிராமி - அபிராமியின், சமயம் - சமயக்கோட்பாடு, நன்று - நன்றாம், எ-று.

(பொ-ரை.) இச்சித்துப் பூசிக்கின்ற அடியார்களுக்கு (அச்செயல்) கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் பெருகி, தேகம் புளகித்து, நிறைந்த ஆனந்தமயமாகி, பசுப்போதமற்று, தேனுண்டவண்டைப்போல மயங்கி, சொல் கலங்கி, முன்சொல்லிய அனைத்தையும் கொடுக்கும், (மேலும்) (ஞான)பைத்தியமுங் கொள்ளுவார்களென்றால் அபிராமியின் சமயக்கோட்பாடு நன்றாம் என்றவாறு.

(க-ரை.) இஃது நிந்தையாகச் சிறப்பித்ததாம்.

(வி-ரை.) மல்கல் - பெருகல். சுரும்பு - வண்டு. களித்தல் - மயங்கல். நன்றென்றது வஞ்சப்புகழ்ச்சி. நன்றேயென நிறுத்தி ஏற்றேகாரம் எதிர்மறையென்றலு மொன்று. அபிராமிசமயம்-வாமம். ()

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே.

(ப-ரை.) அழியாத - கெடாத, குணக்குன்றே - குணமேருவே, அருள் கடலே-கிருபாசமுத்திரமே, இமவான் - பர்வதராஜன், பெற்ற-(தவப்பெண்ணாகப்) பெற்ற, கோமளமே - அழகுபொருந்தியவளே,

எனக்கு - என்றனுக்கு, உள்ளவெல்லாம் - உள்ளனவற்றையெல்லாம், அன்றே - (நான் உனக்கு) அடிமைப்பட்டபோதே, உனது என்று - உன்னுடையதென்று, அளித்துவிட்டேன்-கொடுத்துவிட்டேன். (ஆதலால்), நன்றே வருகினும் - (எனக்கு) நன்மைவந்தாலும், தீதே விளைகினும் - தீமையுண்டாயினும், உனக்கே பரம் - உனக்கேபாரமல்லது, நான் அறிவது-நானறிந்துகொள்வது, ஒன்றேயுமில்லை - ஒன்றுமில்லை, எ-று.

(பொ-ரை.) கெடாத குணமேருவே! கிருபாசமுத்திரமே! பர்வதராஜன் (தவப்பெண்ணாகப்) பெற்ற அழகு பொருந்தியவளே! என்றனுக்கு உள்ளனவற்றையெல்லாம் (நான் உனக்கு) அடிமைப்பட்டபோதே உன்னுடையதென்று கொடுத்துவிட்டேன், (ஆதலால்) (எனக்கு) நன்மைவந்தாலும் தீமையுண்டாயினும் உனக்கே பாரமல்லது நானறிந்துகொள்வது ஒன்றுமில்லை என்றவாறு.

(க-ரை.) அம்மையே! என்னுடல் பொருளாவிமூன்றும் உன்னதானபின் எனக்குவரும் நன்மைதீமைகளுன்னுடையதேயாமென்பதாம்.

(வி-ரை.) குணக்குன்று - குணமலை (மேரு). உள்ளவெல்லாம். என்றது உடல் பொருள் ஆவி என்பவற்றை; "அன்றேயென்றனாவியுமுடலு முடைமை யெல்லாமும், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோ ரிடையூறெனக்குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ விதற்கு நாயகமே" என்றார் மேலோரும். ஒன்றேயும் என்பதில் ஏயும் ஏனும் என்பதன் மரூஉ. (கரு)

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மால்
ஆமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே.

(ப-ரை.) கோமளம் - இளமையாகிய, வல்லியை-கொடிபோன்றவளை, அல்லி - அகவிதழையுடைய, அம் - அழகிய, தாமரை - தாமரைப்பூவாகிய, கோயில் வைகும் - கோயிலிலிருக்கும், யாமளவல்லியை - யாமளையென்னுந் திருநாமமுடையவளை, ஏதம் இலாளை - குற்றமற்றவளை, எழுதரிய - எழுதற்கருமையாகிய, சாமளமேனி - பச்சைமேனியையுடைய, சகலகலா - சகலகலைகளையுமறிந்த, மயில்தன்னை - மயில்போன்றவளை, தம்மால் - தங்களால், ஆமளவும்-கூடியமட்டும், தொழுவார் - பூசிப்போர், எழுபாருக்கும் - சப்தலோகங்களுக்கும், ஆதிபர் - தலைவராவர், எ - று.

(பொ-ரை.) இளமையாகிய கொடிபோன்றவளை, அகவிதழையுடைய அழகிய தாமரைப்பூவாகிய கோயிலிலிருக்கும் யாமளையென்னுந் திருநாமமுடையவளை, குற்றமற்றவளை, எழுதற்கருமையாகிய பச்சைமேனியையுடைய சகலகலைகளையுமறிந்த மயில்போன்றவளை, தங்களால் கூடியமட்டும் பூசிப்போர் சப்தலோகங்களுக்கும் தலைவராவர் என்றவாறு.

(க-ரை.) அம்மையைப் பூசிப்போர் சப்தலோகங்களுக்குந் தலைவராவா ரென்பதாம்.

(வி-ரை.) ஏ: அசை. வல்லி: ஆகுபெயர். அகவிதழ் - உள்ளிதழ். எழுதல் - சித்திரித்தல். (கூசு)

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே.

(ப-ரை.) ஆதித்தன் - சூரியனும், அம்புலி - சந்திரனும், அங்கி - அக்கினிதேவனும், குபேரன் - குபேரனும், அமரர்தங்கோன் - இந்திரனும், போதில் - தாமரைமலரில் வாசஞ்செய்யும், பிரமன் - பிரமனும், புராரி - சிவபெருமானும், முராரி - விஷ்ணுவும், பொதியமுனி-

அகத்தியனும், காதி - (சத்துருக்களை) மோதி, பொரு படை யுத்தஞ் செய்யும் வேலாயுதத்தையுடைய, கந்தன் - சுப்பிரமணியனும், கணபதி- விநாயகனும், காமன் - மன்மதனும், முதல் - முதலாகிய, சாதித்த புண்ணியர் - தவஞ்செய்த புண்ணியர்களாகிய, எண்ணிலர் - அளவற்றவர்கள், தையலை - அபிராமியை, போற்றுவர் - பூசிப்பார், எ-று.

(பொ-ரை.) சூரியனும் சந்திரனும் அக்கினிதேவனும் குபேரனும் இந்திரனும் தாமரைமலரில் வாசஞ்செய்யும் பிரமனும் சிவபெருமானும் விஷ்ணுவும் அகத்தியனும் (சத்துருக்களை) மோதி யுத்தஞ் செய்யும் வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியனும் விநாயகனும் மன்மதனும் முதலாகிய தபஞ்செய்த புண்ணியர்களாகிய அளவற்றவர்கள் அபிராமியைப் பூசிப்பார் என்றவாறு.

(கு-ரை.) அம்மையைத் தேவர் முதலியோர் தொழுவரென்பதாம்.

(வி-ரை.) ஏ: அசை. ஆதித்தன் - அதிதிபுத்திரன். அங்கி - அக்நியென்னும் வடசொற்றிரிபு. போது - மலர், அது பிரமன் என மேல் வருதலால் தாமரைமலரைக் குறித்தது. புராரி - புர, அரி=திரிபுரசத்துரு. முராரி-முர, அரி=முராசுரனைச்சங்கரித்தவன். காதுதல்-தாக்குதல். பொருதல்-சண்டைசெய்தல். கந்தன் என மேல்வருதலால் படை வேலாயுதத்தைக் குறித்தது. தையல் ÷ கைபுனையப்பட்டவள். (கள)

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே.

(ப-ரை.) விரகர் தங்கள் - அன்பர்களுடைய மெய்வந்த - உண்மையுள்ள, நெஞ்சில் - மனதில், அல்லால்-அல்லாமல், ஒருகாலும் - எப்போதும், பொய்வந்த - பொய்யாகிய, நெஞ்சில் புக - மனதில் சேர, அறியா - அறியாத, மடம் - மடமையாகிய, பூங்குயிலே - அழகியகுயில்

போன்றவளே, நின் - உன்னுடைய, அடித்தாமரை - பாததாமரை மலரை, தைவந்து - வருடி, சூடிய - (அதைச்சிரசிற்) சூடிய, சங்கரற்கு - பரமசிவனுக்கு, கைவந்த - கையிலுள்ள, தீயும் - மழுவும், தலைவந்த - சிரத்திலுள்ள, ஆறும் - கங்கையும் (அப்போது), கரந்தது - (உனக்குத் தீங்கு செய்யாது) ஒளித்தது, எங்கு - எவ்விடத்தில் (சொல்வாயாக), எ-று.

(பொ-ரை.) அன்பர்களுடைய உண்மையுள்ள மனதில் அல்லாமல் எப்போதும் பொய்யாகிய மனதில் சேர அறியாத மடமையாகிய அழகிய குயில்போன்றவளே! உன்னுடைய பாததாமரைமலரை வருடி (அதைச்சிரசிற்) சூடிய பரமசிவனுக்குக் கையிலுள்ள மழுவும் சிரத்திலுள்ள கங்கையும் (அப்போது) (உனக்குத் தீங்குசெய்யாது) ஒளித்தது எவ்விடத்தில் (சொல்வாயாக) என்றவாறு.

(க-ரை.) தாயே! சிவபெருமான் உனது ஊடலைத் தீர்க்கத் திருவடியைவருடி வணங்கையில் மழுவும் கங்கையும் தீங்கு செய்யாமல் ஒளித்த காரணஞ் சொல்வாயாக வென்பதாம்.

(வி-ரை.) தைவந்து என்பதற்குப் பகுதி தைவா. காத்தல் - ஒளித்தல். (கூஅ)

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியல்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே.

(ப-ரை.) அன்று உ மேனாள், இமவான் - பர்வதராஜன், அளித்த - பெற்ற, கனம் குழை - காதணியையுடைய (அபிராமியானவள்), கயிலாயருக்கு - கயிலாயத்தையுடைய பரமசிவனுக்கு, கடம்பாடவியிடை - கடம்பவனத்தில், குயிலாயிருக்கும் - குயில்போலிருப்பாள், இமயாசலத்திடை - இமயமலையில், கோலம் - அழகிய, இயல் - லக்ஷணத்தை யுடைய, மயிலாயிருக்கும் - மயில்போலிருப்பாள், விசும்பில் - ஆகாயத்

தில், வந்து உதித்த - வந்துதோன்றிய, வெயிலாயிருக்கும் - சூரியனாக விருப்பாள், கமலத்தின்மீது-தாமரைமலரில், அன்னமாம் - அன்னம் போலிருப்பாள், எ-று.

(பொ-ரை.) மேனாள் பர்வதராஜன் பெற்ற காதணியையுடைய (அபிராமியானவள்) கயிலாயத்தையுடைய பரமசிவனுக்குக் கடம்ப வனத்தில் குயில்போலிருப்பாள், இமயமலையில் அழகிய லக்ஷணத்தை யுடைய மயில்போலிருப்பாள், ஆகாயத்தில் வந்துதோன்றிய சூரியனாகவிருப்பாள், தாமரைமலரில் அன்னம்போ லிருப்பாள் என்றவாறு.

(க-ரை.) திரிபுரசுந்தரி இடங்கடோறும் இவ்வாறு வெவ்வேறு உருவத்தோடு இருப்பளென்பதாம்.

(வி-ரை.) ஏ-அசை. கனங்குழை: அன்மொழித்தொகைக் காரணப்பெயர். கடம்பாடவி - கடம்ப அடவி எனப்பிரித்து கடப்பமரக் காடு என்க. இமயாசலம் - இமய அசலம் எனப்பிரித்து இமயமாகிய மலையென்க. அசலம்-மலை (அசையாதிருப்பது). வெயில்: ஆகுபெயர்.

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப்பொருகண்ணு நெஞ்சிலெப்போது முதிக்கின்றவே.

(ப-ரை.) குழையை - தளிரை, தழுவிய-கலந்த, அம் கொன்றைத்தார் - அழகிய கொன்றைமலர்மாலை, கமழ் - பரிமளிக்கின்ற, கொங்கை - ஸ்தனங்களையுடைய, வல்லி - அபிராமியின், கழையை - மூங்கிலை, பொருத-பொருதுவருத்துகின்ற, திரு நெடுந்தோளும் - சிறந்த நீண்ட கைகளும், கருப்புவில்லும் - கரும்புவில்லும், விழைய - ஆசையுண்டாக, பொரு திறல் - போர்செய்கின்ற, பலமான, வேரி - தேன் பொருந்திய, அம் பாணமும் - அழகிய புஷ்பபாணமும், வெண்ணகையும் - வெள்ளிய தந்தபந்தியும், உழையை - மானை, பொரு கண்ணும் -

ஒத்தகண்களும், நெஞ்சில் - (என்) மனதில், எப்போதும் - எந்தவேளையும், உதிக்கின்ற - தோன்றுகின்றன, எ-று.

(பொ-ரை.) தளிரைக்கலந்த அழகிய கொன்றையலர்மாலை பரிமளிக்கின்ற ஸ்தனங்களையுடைய அபிராமியின் மூங்கிலைப் பொருது வருத்துகின்ற சிறந்த நீண்டகைகளும் கரும்புவில்லும் ஆசையுண்டாகப் போர்செய்கின்ற பலமான தேன்பொருந்திய அழகிய புஷ்பபாணமும் வெள்ளிய தந்தபந்தியும் மானை ஒத்த கண்களும் என் மனதில் எந்த வேளையும் தோன்றுகின்றன என்றவாறு.

(க-ரை.) எப்போதும் அபிராமியின் திருவுருவம் என் கண்ணை விட்டு நீங்காதென்பதாம்.

(வி-ரை.) ஐ, எ: அசைகள். கழை-மூங்கில். தோள்-இவ்விடத்துக் கையைக்குறித்தது. கரும்பு-கருப்பு என வலித்தல் பெற்றது. விழைவு-ஆசை. திறல் - வெற்றியெனினுமமையும். நகை - பல். பந்தி-வரிசை. உழை-மான். (௧௦௦)

நூற்பயன்.

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்கையிற் பாசாங் குசமுங் கரும்புவில்லும்
சேர்த்தாளைமுக்கண்ணியைத்தொழுவார்க்கொருதீங்கில்லையே.

(ப-ரை.) ஆத்தாளை-(சராசரங்களுக்குத்) தாயானவளை, எங்கள்-எங்களுடைய, அபிராமவல்லியை - அபிராமியம்மனை, அண்டம் எல்லாம் - அண்டங்களையெல்லாம், பூத்தாளை - சிருஷ்டித்தவளை, மாதுளம்பூ - மாதுளம்பூவையொத்த, நிறத்தாளை - நிறம்பொருந்திய திருமேனியையுடையவளை, புவி அடங்க - உலகமுழுமையும், காத்தாளை-ரக்ஷித்தவளை, அம் கையில் - அழகியகையிலே, பாசாங்குசமும் - பாசத்தையும் அங்குசத்தையும், கரும்பு வில்லும் - கரும்புவில்லையும், சேர்த்

தாளை-தாங்கினவளை, முக்கண்ணியை-மூன்று கண்களையுடையவளை, தொழுவார்க்கு-தொழுது பூசிப்பவர்க்கு, ஒரு தீங்கு - யாதொரு பொல்லாங்கும், இல்லை - உண்டாவதில்லை, எ-று.

(பொ-ரை.) (சராசரங்களுக்குத்) தாயானவளை, எங்களுடைய அபிராமியம்மனை, அண்டங்களையெல்லாம் சிருஷ்டித்தவளை, மாதுளம் பூவையொத்த நிறம்பொருந்திய திருமேனியை யுடையவளை, உலக முழுமையும் ரக்ஷித்தவளை, அழகியகையிலே பாசத்தையும் அங்குசத்தையும் கரும்புவில்லையும் தாங்கினவளை, மூன்று கண்களையுடையவளைத் தொழுது பூசிப்பவர்க்கு யாதொரு பொல்லாங்கும் உண்டாவதில்லை என்றவாறு.

(க-ரை.) இஃது அபிராமியம்மனைத் தொழுது பூசிப்பவர்க்கு உண்டாகும் பயனைக் கூறியதாம்.

(வி-ரை.) ஏ: அசை. அண்டம் - உலகம். பூத்தல் - படைத்தல். அடங்க - முழுதும்.

அபிராமியந்தாதி மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

உ

சிவமயம்.

தேவிசகாயம்.

அபிராமியந்தாதியின் செய்யுள் முதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
அ	
அணங்கே	83
அதிசயமான	19
அரணம்பொரு	54
அருணம்புய	61
அழகுக்கொருவரு	74
அளியார்கமல	84
அறிந்தே	5
அன்றேதடுத்	32
ஆ	
ஆசைக்கடலி	34
ஆதித்தனம்புலி	99
ஆத்தாளை	103
ஆளுகைக்குன்ற	42
ஆனந்தமா	13
இ	
இடங்கொண்டு	45
இல்லாமை	57
இழைக்கும்	35
உ	
உடைத்தனை	29
உடையாளை	86
உதிக்கின்ற	2
உமையுமுமை	33
உறைகின்ற	22
எ	
என்குறைதீர	75
ஏ	
ஏத்துமடியவ	28
ஐ	
ஐயனளந்த	59
ஒ	
ஒன்றாயரும்பி	58
க	
ககனமும்	68
கண்களிக்கும்	73
கண்ணிய	14
கருத்தன	11
கி	
கிளியே	18
கு	
குயிலாயிரு	101
குரம்பை	52
குழையைத்தழுவி	102
குறித்தேன்	79
கூ	
கூட்டியவா	82
கை	
கைக்கே	39
கொ	
கொடியே	24
கொள்ளேன்	25
கோ	
கோமளவல்லி	98
சி	
சித்தியுஞ்	31
சிறக்குங்கமல	91
சின்னஞ்சிறிய	56
சு	
சுடருங்கலை	51
சுந்தரி	10
செ	
செப்புங்	81

பாட்டு.	பக்கம்.
சென்னியதுன்	8
சொ	
சொல்லும்பொ	30
த	
தங்கச்சிலை	65
தங்குவர்	78
தஞ்சம்	62
தண்ணளி	17
ததியுறு	9
தவளேயிவ	47
தனந்தருங்	72
தா	
தாமங்கடம்பு	76
தாரமர்	1
தி	
திங்கட்பகை	37
து	
துணையுந்	4
தே	
தேறும்படி	66
தை	
தைவந்து	100
தொ	
தொண்டுசெய்	48
தோ	
தோத்திரஞ்செய்	70
ந	
நகையே	96
நயனங்கண்	77
நன்றேவருகினு	97
நா	
நாயகி	53
நாயேனையு	64
நி	
நின்றுமிருந்து	12
ப	
பதத்தேயுருகி	95
பயிரவி	80
பரமென்றுனை	90
பரிபுரச்சீறடி	46
பவளக்கொடி	41
பா	
பாரும்புனலு	71
பார்க்குந்திசை	87
பாலினுஞ்சொல்	63
பி	
பின்னேதிரிந்து	27
பு	
புண்ணியஞ்	44
பூ	
பூத்தவளே	15
பொ	
பொருந்திய	7
பொருளே	38
ம	
மங்கலை	23
மணியே	26
மனிதருந்	6
மா	
மாலயன்தேட	88
மி	
மின்னாயிர	57
மெ	
மெல்லியநுண்	94
மொ	
மொழிக்குநினைவு	89
வ	
வந்திப்பவ	16
வந்தேசரணம்	36
வருந்தாவகை	93
வல்லபமொன்	69
வவ்வியபாக	20
வா	
வாணுதற்	43
வாழும்படி	50
வி	
விரவும்புது	85
விரும்பித்தொழு	96
விழிக்கேயரு	81
வீ	
வீணேபலி	67
வெ	
வெளிநின்ற	21
வெறுக்குந்	49
வை	
வையந்துரக	55

அபிராமியந்தாதியின் செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.